

தேவியாதம்

# யூகிமுனி

[illegible]நாங்க நிகைவிதி 300

பாதலைவைத்ய விளக்கம் - 200.

மதிவெண்பா - 100

HAS

U. R. சுந்தரம் அவர்கள்

பதிப்பு] [illegible] 1915. [விலை ரூபாய் ஒன்று.

*************************
தே. சான்லிமேரேயு.
செப்பனிடுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட
ஜீன் மாதம் வருடம் 1983
செப்பனிட்டு முடித்த
டிசம்பர் மாதம் வருடம் 1983
ஆராய்ச்சி உதவியாளரின் கையொப்பம்
*************************



OFFICE OF THE REGISTRAR ... 7 JAN 1915 ... MADRAS

தேவிபாதம்.

# யூகிமுனி

## வாதாங்க தீக்ஷைவிதி - 300
## வாத வைத்ய விளக்கம் - 200
## மதிவெண்பா - 100.

இவை

பாலயோகியும்

ஆயுர்வேத பண்டிதருமாகிய

V. R. சுந்தரம் அவர்களால்

பல ஏட்டுப் பிரதிகளைக்கொண்டு

பரிசோதிக்கப்பட்டு

மங்கலம்-ஷண்முக முதலியாரால்

சென்னை,

கோமளேசுவரன் பேட்டை,

சச்சிதாநந்த அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டன.

1915.

காப்பிரைட்] [ரூபாய் ஒன்று.

யூகிமுனிவர் நூற்கள் முற்றிலும் ஒருவரிடம் இருக்குமாயின் அவர் ஒருவரிடத்தும் ஏமாந்து போகாமல் தாமே அதிற் கூறிய வண்ணம் செய்து அக மகிழலாம் இதற்கு முன்னர் யான் வெளியாக்கியிருக்கும் யூகிமுனிவர் கரிசலில் முப்பு, ரசமணி, அயச் செம்பு முதலியன செய்யும் வாத முறைகளும், தாளகம் - கெந்தகம் - ரச முதலிய பஸ்பசிந்துரஞ் செய்யும் வைத்திய முறைகளும் தெளிவாய்க் கூறப்பட்டிருக்கின்றன.

---

## நூற் பயன்.

1. வாதாங்க தீக்ஷைவிதி 300-ல்

திராவகம், ஜெயநீர், அயச்செம்பு, தாளகச்செம்பு, வங்கச் செம்பு முதலியவைகளும், உப்புக்கட்டு - பூரக்கட்டு - லிங்கக் கட்டு - வீரக்கட்டு முதலிய கட்டுவிதிகளும், சத்திக்கிரமங்களும், அக்னியடின் ஓடும் ரசகெந்தக பாஷாண வீரம் பூரம் முதலியவைகளைப் புடத்திற்கு நிற்குமாறு செய்து அதனால் வேதையும், அப்ரகச் சிந்தூரம் - ரசச்சிந்தூரம், தாளகம், வங்கமுதலிய, அநேகவித வைத்ய முறைகளும் கூறப்பட்டிருக்கின்றன.

2. வாதவைத்ய விளக்கம் 200-ல்

மிக அழகான பழமொழிகளுடன் வைத்யம் தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றது; முப்புபாகம், குளிகை, திராவகம் வைக்கும் விபரம், ஜெயநீர் முதலியன விளக்கமாகக் கூறப்பட்டிருக்கின்றன.

3. மதிவெண்பா 100-ல்

அமுரி இன்னதென்பதும் அதனைச் சுத்திசெய்யும் விபரமும், பூநீர்-கல்லுப்பு முதலியவற்றின் விபரமும் அதனை முடிக்கும் கைபாகங்களும் ஏனைய நூற்களில் மறைத்துக் கூறப்பட்டுள்ளவற்றையும் வெளிப்படையாகக் கூறப்பட்டிருக்கின்றன.

இம்மூன்று நூற்களும் வாதத்தையும் வைத்தியத்தையும் தெளிவாகக் கரதலாமலகம்போலக் காட்டுகின்றன.

15—12—15.

V. R. சுந்தரம்.

---



REGISTRAR ... 1913

தேவிபாதம்.

யூகிமுனி

# வாதாங்க தீக்ஷைவிதி-300.

இது

பாலயோகியும்

ஆயுள்வேத பண்டிதருமாகிய

**V. R. சுந்தரம் அவர்களால்**

பல ஏட்டுப் பிரதிகளைக்கொண்டு

பரிசோதிக்கப்பட்டு

மங்கலம் - ஷண்முக முதலியாரால்

சென்னை,

கோமளேசுவரன்பேட்டை,

சச்சிதாநந்த அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1915.

காப்பிரைட்.

# யூகிமுனி

## வாதாங்க தீக்ஷைவிதி - 300.

### அட்டவணை.


| விஷயம். | பக்கம். |
|---|---|
| காப்பு - நூற்பெயர் | 1 |
| வாத உபதேச பரம்பரை | ,, |
| கைபாக விவரம் | 2 |
| சவுக்காரக் குழம்பினால் கல்லுப்பைச் சுண்ணஞ் செய்து ஜயநீராக்கிடின், அதனால் சகல சரக்கும் கட்டுமெனல் | 2 |
| துருசுச்செம் பெடுக்கு மார்க்கம். | 3 |
| வெடியுப்புத் திராவகம் | 4 |
| அயச் செம்பு | 6-16 |
| நாகச் செம்பு | 9 |
| நாகக் கட்டு | 9 |
| செம்புச் சிரசம் | 12 |
| இன்னதில்லாம லிஃது உதவா தெனல் | 13 |
| வெள்ளிசுத்தி | 14 |
| களங்கு வெள்ளாவற்றையுஞ்செம்பாக்கிரய வாடைபோக்கி அந்தச் செம்பை வெள்ளியிற் கொடுத்தால் மதிமழுக்கும் மாற்றுகும் பொன்னாகும் எல்லாம் சித்தியாகும் எனல். | 15 |
| கௌரியால் அயமுருக்கல் | 16 |
| கெந்தி பஸ்பம் செய்யத் தீக்ஷை | 18 |
| கெந்தகக்கட்டு | 19 |
| கெந்திச்சுண்ணம் | ,, |
| துருசுடன்கெந்திசேர்த் துருக்கினால் வெண்கலம்போலிருக்குமெனல் | 21 |
| மேற் கூறியதை இன்னின்ன நூல்களிற் பாரெனல் | 22 |
| துருசுக் களங்கு | 25-47 |
| வெட்டையாயிருக்கும் செம்பைப் பஞ்சமித்ரத்திலுருக்கிச் சாய்க்கவெனல் | 25 |
| இன்னின்னத் முறையே பார்க்கவேண்டுமெனல் | 26 |
| சாரக்கட்டு | 26-41 |
| சினச்சுண்ணஞ்செய்து சாரத்தின்மேற் கவசம் கட்டவெனல் | 27 |
| சாரச்சுண்ணம் | ,, |
| சாரஜயநீர் | ,, |
| வங்கக்கட்டு | 30-42 |
| சினச்சுண்ணம் | 30 |
| வெடியுப்புச் சுண்ணம் | 31 |
| துருசுச் சுண்ணம் | 32-44, 51 |

| விஷயம். | பக்கம். |
|---|---|
| பாஷாணக்கட்டு | 33 |
| வெள்ளி வித்தை | 33-65-69 72-79 |
| ஸமஸ்தமும் வெள்ளியினுலாகவேண்டும், அதனுல் முன்னே அதைச்செய்கவெனல் | 40 |
| எமது நூலிலின்னதைச் செய்துகொள்ளெனல் | 43 |
| வெள்ளி வேதையில் வெள்ளி சேர்க்க வேண்டுமெனல் | 43 |
| நூற்பரம்பரை | 44-75 |
| தங்கஞ்செய்ய இவை வேண்டுமெனல் | 47 |
| உப்பாற்சகலமுமாமெனல் | 50 |
| வெடியுப்புத்திராவகம் | 50 |
| அயத்தங்கம் | 52 |
| கட்டுவகை | 53 |
| பச்சைத்துருசால் கட்டுவகை | 53 |
| லிங்கக் கட்டு | ” |
| வெடி லிங்கந் தங்கஞ் சேர்ந்த வேதை | 54 |
| பாஷாணங்கள் மூதலிய கட்டு | ” |

| விஷயம். | பக்கம். |
|---|---|
| மேற்படிவேதை | 55 |
| வாதிகள் மடமை | 55 |
| பச்சைத்துருசால் சரக்கெல்லாங்கட்டவெனல் | 56 |
| கல்லுப்புக்கட்ட, சமுத்திர நீரெரிக்க, இது சுத்தஜலமென்றும் புகைநீரென்றும் பெயர் | 58 |
| கல்லுப்புக்கட்டு | ” |
| கல்லுப்பும் பாஷாணமும் சேர்ந்தகட்டு | 61 |
| சகலரோகத்திற்கும் காட்டாமணக்கெண்ணெய் | 62 |
| வெள்ளிசெய்து விற்றால் லாபமில்லை அதைத்தங்கஞ்செய் | 68 |
| இன்னதாவிட்டால்வெள்ளி யாகாதெனல் | 71 |
| வாதவெள்ளியில் அயச்செம்பு கொக்க | 78 |
| வாதிகள் செய்யவேண்டியவையிவையெனல் | 79 |
| சவுக்காரச் சுண்ணம் | 79 |
| சவுக்காரக் குழம்பு | 80 |


முற்றிற்று.



தேவிபாதம்.

ஸ்ரீ ஒமாமுநி

# வாதாங்க தீக்ஷைவிதி - 300.

## காப்பு - நூற்பெயர்.

சத்தியென்ற வுமையவள்தன் பாதம் போற்றிச்
சதாசிவத்தின் மகன்பாதந் தலைமேல் சாத்தி
நித்தியமா மநுதினமும் போற்றி நின்று
நினைவாக ஆயுள்வே தத்தைத் தானும்
பத்தியாய் வாதாங்க முந்நூ றுக்குப்
பதிவான தீக்ஷைவிதி சுருக்க மாகச்
சுத்தியா யாராய்ந்து எடுத்துச் சொல்வேன்
சொரூபமா யிதின்விரிவைப் பார்த்துத் தேரே. 1

## வாதமுபதேசித்த பாரம்பரை.

தேரவே சிவன்சொல்ல அம்மை சொல்லச்
சிறப்பான அல்வனியுஞ் சொல்லக் கேட்டு
ஆரவே யல்வனியும் நந்திக் கோத
அடைவான நந்திதன் வக்த்ரிக் கோத
சாரவே தன்வந்திரி அகஸ்த்தி யர்க்குச்
சாற்றஅகத் தியருரைக்கப் புலத்தி யர்க்கு
நாரவே புலத்தியருஞ் சந்தோ ஷித்து
நலமாகத் தேரருக்குச் சொன்ன வாறே. 2

சொன்னதொரு தேரருமே மனது கூர்ந்து
சொற்பெரிய யூகிமுனிக் குபதேசித்தார்
நன்னயமா யூகிவட மொழியைப் பார்த்து
நலமாகப் படித்துமே யுழைத்துத் தேறி
இந்நிலத்தி லாயுளுவின் வேத மாக
இன்பமா யுலகத்தோர் பிழைக்க வேண்டிப்
பின்னையொன்று மிணையில்லா வாதாங் கத்திற்
பிரபலமாய் வாதத்தைச் சொன்னேன் பாரே. 3

இந்நூலில் கைபாக மனைத்துஞ் சொன்னேனெனல்.

பாருமே களங்குமுதல் சிந்தூ ரங்கள்
பதிவான சவுக்கார மெழுகு தானும்
ஆருமே தூமமுதல் வேதை மார்க்கத்
தடைவான கைபாக வரிசை தானுங்
காருமே யெண்ணெய்முத லப்பா கேளு
கருதியே வகைவிபர மாகச் சொல்லி
ஏருமே முந்நூற்றில் முடித்துச் சொன்னேன்
இதமான பொருளெல்லா மியல்பாய்க் கேளே. 4

சவுக்காரக் குழம்பினால் கல்லுப்பைச் சுண்ணஞ்செய்து
ஜெயநீராக்கிடின் அதனாற் சகலசரக்குங்
கட்டுமெனல்.

கேளுமே தீக்ஷைவிதி தன்னில் தானுங்
கெடியான நந்திசொன்ன சவுக்காரத்தை
ஆளுமே அதைவைத்துக் குழம்பி னாலே
அன்பான புழுகுடனே வீரங் காரம்
பாழுமே போகாமல் தெளிவி றுத்துப்
பதிவான சவுக்காரக் குழம்பு தானே
நீளுமிவ் வுலகத்தில் நெறிகைக் கொண்டு
நிலையாகச் செய்திடிற்பின் திகழ்வு பாரே. 5



பாரேநீ சவுக்காரக் குழம்பைத் தானும்
பதிவாகக் கல்லுப்பி லிட்டே யாட்டி
நாரேநீ புடம்போடப் பொங்கி நீறும்
நலமான கடுஞ்சுண்ண மாகும் பாரு
வாரேநீ சாரத்தை யிடையே சேரு
வடிவாக நீராகு மார்க்க மெத்த
தாரேநீ சகலசரக் கெல்லாங் கட்டுக்
தடையறவே சுருக்கிடவே யெல்லாங் கட்டே. 6

கட்டியதோர் சரக்குகளில் வேதை கோடி
கசடற்ற களங்குசெம்பு கோடி கோடி
தொட்டியதோர் கட்டுவகை கோடா கோடி
அடியான சிங்கிவகை களங்கு கோடி
முட்டியதோர் பழுக்கும்வகை கோடா கோடி
முத்திதருஞ் சிந்தூரங் குளிகை கோடி
பட்டியதோர் கொடுப்புபழுப் பினங்கள் கோடி
பகாரிது முந்நூறும் பயின்று பாரே. 7

துரிசுச் செம்பெடுக்கும் மார்க்கங் கூறல்.

பயின்றுபா ரின்னமொரு களங்கு சொல்வேன்
பதிவான யூகிமுனி பயின்ற வாறே
நயின்றுபா ரிதுசுளுவு முன்னே பாரு
நதியான செம்பெடுக்கும் வகையைக் கேளு
தயின்றுபா ரசப்பொடியும் பலமும் பத்து
தாட்டிகமா யெலுமிச்சம் பழச்சா றிட்டு
தயின்றுபார் மூன்றுநா ளரை வைத்துத்
தப்பாமல் மூன்றுமுக்கா லிறுத்துக் கொள்ளே. 8

கொள்ளவே சொல்லுகிறே னுற்றுக் கேளு
கெடியான துருசதுவும் பலமோ பத்து

மென்னவே நாதும்பூ பலமும் பத்து
  மேன்மையாய்க் கல்வத்தி லிதனைக் கொட்டித்
துள்ளவே அயரீரா லரைத்து வில்லை
  துடியாகக் காயவைத்துச் சொல்லக் கேளு
வள்ளலே லிளிஞ்சிலென்ற சுண்ணம் நேரே
  வகையாகக் கல்துப்பை சேர்த்துக் கொள்ளே.
சேர்த்துமே அரைத்ததீ வில்லைக் குத்தான்
  சிறப்பாக மேல்கவசம் கனமாய்ச் செய்து
பார்த்துமே கெஜபுடமாய்ப் போட்டெ டுக்கப்
  பதிவான வில்லையது கறுத்தி ருக்கும்
வார்த்துமே கறுப்பதனைக் கல்வத் திட்டு
  வகையான வெண்காரஞ் சேர்த்த ரைத்து
மூர்த்துமே வில்லைபண்ணிக் காய வைத்து
  முடிவான புடம்போட்டு எடுத்துப் பாரே.

இதற்கு வெடியுப்புத் திராவகம்.

எடுத்துமே பார்த்தவுடன் கறுப்பு மாகும்
  இதமான வில்லைதனை யப்பால் வைத்து
அடுத்துமே திராவகத்தைச் சொல்லக் கேளு
  அடைவாக வெடியுப்பு பலமே பத்து
கடுத்துமே சீனமது இருபத் தைந்து
  கலமாக விரண்டுமே பொடித்துப் போடு
வடுத்துமே வாலையென்ற சட்டி மூடி
  வகையான அடுப்பேற்றி யெரித்தி டாயே.
எரித்திடவே முன்னீர்தான் வெள்ளை யாக
  இதமாக வெள்ளையைத்தான் தள்ளிப் போடு
அரித்துமே புகைநீர் தான் மஞ்ச ளாக
  அடைவாக விருக்குமந்த நீரைத் தள்ளு
எரித்துமே கடைநீர்தான் மஞ்ச ளாகக்
  கனிவாகக் கடைநீர்தான் வாங்கிக் கொண்டு



வரித்துமே அரக்கென்ற குப்பி தன்னில்
  வடிவாகக் குப்பியடை வைத்துக் கொள்ளே. 12

வைத்துமே முன்வில்லை கல்வத் திட்டு
  வகையாகக் கடைநீரா லரைத்து வில்லை
சித்துமே வில்லைகட்டி ரவியில் போடு
  சிறப்பாக முன்கவசம் மேலே கட்டி
நத்துமே கஜபுடமாய்ப் போட்டெ டுத்து
  நலமாகக் குகையிட்டு உருக்கித் தீரு
பத்துமே கசடற்றுச் செம்பு மாகும்
  பதிவான செம்பினது பருவங் கேளே. 13

பருவமென்ன சொல்லுகிறேன் செம்பு தானும்
  பதிவான பொன்போலே கண்ணிட் டாலும்
அருவமாஞ் செவ்வலரிப் பூப்போ லாகும்
  துடியுள்ள செம்புதான் வேதை யாகும்
மருவுமிவ் வுலகத்தா ரெவரு மெச்ச
  வடிவான பொருளாகும் செம்பு தானும்
கருவமாஞ் செம்பொன்னு மிதுவே யாகும்
  காயசித்தி லோகசித்தி கண்டு பாரே. 14

கண்டுபார் செம்பினது பெருமை தன்னை
  கர்த்தாவால் சொல்லவே முடியா தையா
நண்டுபார் சித்தர்தா னிந்தச் செம்பை
  நாதாக்கள் ஒளித்துமே மறைத்த செம்பு
கொண்டுபார் பொன்னுக்கு இதுவே யாகி
  கொள்ளுவாய் சித்திக்கு இதுவே முத்தி
திண்டுபா ரயச்செம்பு இதுவே பாக்கு
  நீடூழி காலமெலாம் வாழ லாமே. 15

வாழலா மிச்செம்பைக் கண்ட போதே
  வடிவான மதியழுக்குந் தங்க மாகும்

தாழ்விலாக் குபேரனைப்போல் வாழ்வுண் டாகும்
நாட்டிகமாய்ச் செல்வம்வருந் தானே கண்டு
சூழவே வாதமதை கட்டிப் போக்க
தொல்லுலகி லாசானத் தவக்க மாகும்
காழுமாம் ஞானசித்தி கடிதி லாகும்
கனிவான தங்கமிது கடிதி லாமே. 16

அயச் செம்பு

கடிசாகப் போகாம லயத்தைத் தாக்கு
கருத்தறவே சீராக முறித்துக் கொள்ளு
படிசாகத் தருசுகெந்தி சேர்த்த ரைத்துப்
பதிவாகப் புடம்போடக் கருப்ப தாகும்
வடிவாகப் பாகமாய்ச் செய்து கொள்ளு
வளமான செம்புமுந்தி வடிவ மாகக்
கொடிக்கச் சாத்திரத்தை யுழைத்துப் பாரு
கோடியுகம் வாழலாம் குணம தாமே. 17

குணமான அயச்செம்பை முன்னே பார்த்துக்
கூடியே சிவயோக வழியில் நின்று
மணமாகச் செய்திடவே மார்க்க மாகும்
மாண்டிறந்து போகாமல் இந்த ரஞ்செய்.
பிணமான வதுபோல வாதஞ் சுட்டுப்
புரட்டாகப் போச்சதென்பா ருலக வாதி
பணங்காண அயச்செம்பைக் கண்ட போது
பதிவான துயரமெல்லாம் போகுந் தானே. 18

துயரென்ன அயச்செம்பைக் கண்ட போதே
அடியான சிவயோகஞ் சுகமு மாகும்
அயரென்ன ஆதிஅயங் கண்ட போதே
அடைவான சித்தியெல்லா மடைவு மாகும்



சுயரமென்னக் காயசித்தி யிதுவே யாகி
கடாட்சித்து யூகிமுனி கருணை கூர்ந்து
நயரமென்ன நால்வேதஞ் சொன்ன நீதி
நாடியே பார்த்திடவே சித்தி யாமே. 19

சித்தியா மயச்செம்பு பலமும் பத்து
சிறப்பான தங்கமது பலமும் பத்து
நத்தியே யிரண்டு முருக்கிக் கொண்டு
நலமாகத் தகடடித்துச் சொல்லக் கேளு
முத்தியே கெந்தியது இடையே சேர்த்து
முதன்மையாம் பாணிபா லரைத்துக் கொண்டு
வித்திடவே தகட்டின்மேல் பூசிப் பூசி
விதமாக ஐந்துபுடம் போட்டுக் கொள்ளே. 20

போட்டிடவே அதுதாக சொருங்கிப் போகும்
போக்கோடே நிறமென்ன கருப்பு மாகும்
ஆட்டிடவே கருப்பென்று மயங்க வேண்டாம்
ஆதியாங் குருவாகு மறிந்து பாரு
வாட்டிடவே வெள்ளியது பலமும் பத்து
வகையாகத் தகடாக அடித்துக் கொண்டு
நாட்டிடவே புகைநீரில் மூன்று நாளில்
நலமாகப் போட்டெடுத்து உருக்கி டாயே. 21

உருக்கிடவே மாசற்று வெள்ளி யாகும்
உத்தமனே யிருபதுக்கு ஒன்று சுய
நருக்கிடவே மாற்றென்ன வேழு மாகும்
நலமான மாற்றைநீ விற்றுக் கொள்ளு
பெருக்கிடவே ஜீவனத்துக் கிடமே பண்ணிப்
பெலமான தேசங்க ளலைந்து சுற்றி
வருத்திடவே குளிகைகட்டிப் பறந்து ஏறு
வகையான பொருள்நிந்து வடிவாய்த் தானே. 22

வடிவான வுப்புக்கும் காவிக் கப்பா
வாகாகப் புடமிறங்குந் தங்க மாகுந்
அடியான சொல்லறிந்தான் ஞானி யாவான்
தொல்லுலகில் செப்பறிந்தோன் யோகி யாவான்
மடியான தரித்திராவா னறிய மாட்டான்
மாயமாம் வாதியவ னறிய மாட்டான்
குடியாகச் செய்தவனு மறியா னப்பா
குணங்கெட்ட வாதியைநீ கூடத் தள்ளே. 23
தள்ளியே யொருமனதா யபத்தை நீயுந்
தடைபறவே யெடுத்துமே சொல்லக் கேளு
முன்னியே யெலுமிச்சம் பழச்சாற் றன்னை
முக்கியமா யூறவைத்து நீரி றுத்துக்
கன்னியே கழுவியதை வெளியாய்ப் பண்ணிக்
கனக்கவே புடமிட்டு எடுத்துக் கொள்ளு
அன்னியே யுருக்கிடவே செம்பு மாகும்
அடியான செம்பைநீ யெடுத்தி டாயே. 24
எடுத்துமே செம்பைத்தான் மதியி லீய்ந்து
இதமாகச் சிவனங்கள் பண்ணிக் கொள்ளு
அடுத்துமே யதின்பின்னே ஞானம் பாரு
அடைவான காயசித்தி யுடனே யாகுந்
தடுத்துமே போகாமல் நாலைப் பாரு
நாட்டிகமாய்ச் சகலமுந்தான் சித்தி யாகும்
கொடுத்திடுமே ரசவாதங் கொள்ளை கொள்ளை
கூடகூட விதன்பெருமை கூற லாமே. 25
கூறலா மேமமென்று வித்தைக் கப்பா
குணமாக அயத்தைநீ குறிப்பாய்ப் பாரு
ஆறலாம் பொன்னென்ற வித்தை யப்பா
அடைவான கெந்திதான் காயு மாச்சு



மாறலாந் துருசென்ற ராஜா வாலே
மதிபான சத்தாச்சு வர்ணமாச்சு
பாரெல்லாம் புகைநீரா மெல்லா மாச்சு
பதிவான வாதத்தைக் கண்டு பாரே. 26

## தாளகச் செம்பு.

கண்டுகொள்ளு தாளகத்தின் செப்பு சொல்வேன்
கனமான செம்புதான் பலமோ பத்து
பண்டுகொள்ளு சுத்தியது சொல்லக் கேளு
பதிவான வெடியுடனே சீனங் கூட்டித்
தூண்டுமே கழுதையின்றன் சுத்தத் தாலே
அடியாக வரைத்துமே குழம்பாய்ப் பண்ணி
வண்டுகொள்ளு செம்பைநீ தகடடித்து
வகையாக வேழுமுறை காய்ச்சித் தோயே. 27

## இதற்குத் தாளகக்கட்டு.

தோய்க்கவே செம்புகட்டி நொருங்கிப் போகுந்
தொல்லுலகில் செம்புசுத்தி நல்ல தாகும்
ஆய்க்கவே யிச்செம்பு பலமோ பத்து
அடைவாகக் குகையில்வைத் துருக்கிக் கொள்ளு
நாய்க்கவே தாளகமும் பலமோ பத்து
நலமாக வெடுத்துமே சுக்கா னீரில்
பாய்க்கவே யதில்வைத்து எரித்துப் போடு
பதிவாக வுருகியது சிவந்து போமே. 28
சிவக்குமே முருக்கம்பூ நிறம தாகுஞ்
சிறப்பாக வெடுத்துமே யுடைத்துக் கொள்ளு
தவக்குமே முன்குகையில் ரவியில் தானுந்
தடைபறவே கிராசம்நீ யிடையே தானும்
அவக்குமே செம்புவெண் கலமாய்த் தோன்றும்
அடைவாக வுடைத்திடவே வுடைந்து போகும்

பவக்குமே வுடைந்தசெம்பைக் கல்வத் திட்டுப்
பதிவான புகைநீரா லரைத்தி டாயே. 29

அரைத்துமே வில்லைபண்ணிக் காய வைத்து
அடைவாக கஜபுடத்தில் போட்டு வாங்கிக்
கரைத்துமே யெடுத்துப்பார் களங்க மாகுங்
கதிபெறவே வெண்கார மிட்டு ருக்கிப்
பரைத்துமே செம்பாகு முருக்கம் பூப்போல்
பதிவாக வேதையிது பலனு மாகுஞ்
சரைத்துமே செப்பினது மகிமை சொல்லச்
சதாசிவனு முன்பின்னாய்த் தயங்கி னாரே. 30

தயங்கினா ரிச்செய்பைப் பார்த்துத் தானுந்
தண்மையுடன் சித்தருமே தயங்கிப் போனார்
மயங்கினா ரிதனுடைய ஆட்டைப் பார்த்து
மயமான ரிஷிதேவர் மயங்கினார் பார்
கயங்கினா ரளவற்ற வேதை யாகுங்
கடிதான தாளகந்தா னதிக வேதை
குயங்கினா ரிதனுடைய ஆட்டைத் தானுங்
குணமாக முந்நூறில் கொட்டி னேனே. 31

கொட்டினேன் தாளகத்தின் செம்பி னோடே
குணமான தங்கந்தான் சேர்த்து ருக்கிக்
கட்டியே தகடாகக் கட்டிக் கொண்டு
காரியமாய்க் கெந்தியது இடையே சேர்த்துப்
பட்டியே யரைத்துமே தகட்டில் தானும்
பதிவாகத் தடவியே புடமும் நான்கு
வட்டியே போட்டிடவே கொருங்கிப் போகும்
வாகாகக் கருப்பாக விருக்குந் தானே. 32

கருப்பாக விருக்கிறது எல்லாந் தங்கங்
கருணைபெற வெடுத்துமே சொல்லக் கேளு.



வெறுப்பாக வெண்ணாதே நினைத்தி டாதே
வெருளாதே சொல்லுகிறே னுற்றுக் கேளு
பொறுப்பாக முன்மதியைப் போட்டு ருக்கிப்
பிரபலமாய்க் கொடுத்திடவே தங்க மாகும்
முறுப்பாகத் தீக்ஷைவிதி தன்னில் சொன்னேன்
முந்நூறில் வாதாங்கம் முடிப் பாரே. 33

பாருமே தாளகந்தான் வேதை கோடி
பதிவான கெந்தியினா லதிலுங் கோடி
தாருமே புகைநீரால் வேதை கோடி
பதிவான சவுக்காரக் குழம்பி னாலே
வேருமே நீற்றினங்கள் கோடா கோடி
வெருளாதே துருசினா லதிலுங் கோடி
காருமே கைம்முறையால் வேதை யாகுங்
கருத்துவைத்துச் செய்திடவே சித்தி யாமே. 34

சித்தியே யாகுமென்று யூகி சொன்னார்
ஜெகத்திலே வாதிமா ரறியா மற்றான்
பத்தியாய்க் கெந்தியைத்தா னன்பி னோடே
பதிவாகக் கொடுத்துமே எடுத்துப் பார்த்து
நத்தியாய்ச் சத்தாகிப் போச்சுதென்று
நலமாக வெடுத்தெறிவார் வாதி மார்கள்
சத்தியாய்ச் செம்பைத்தா னெடுக்கா தாலே
சகலமுந்தான் சித்தியில்லை தகர்த்து [illegible]. 35

தகர்த்துமே சாடினால் தங்க மாகுந்
தாக்காட்டா லேமமில்லை தானி யோர்க்கு
இகத்துள்ளே வாதமில்லை சித்தி யில்லை
யேங்கியே திரிந்திடுவா ருலுத்த வாதி
தொகுப்பாகச் சொற்கேட்டுச் சுட்டோர் கோடி
தொகையில்லா வகைகெட்டுத் திரிவா ரப்பா

பகையாகச் சொல்லவில்லை யுற்றுப் பாரு
பதிவாக விதியாளி பார்ப்பான் பாரே. 36

செம்புக்கிராசம்.

வேதைதா னிப்படிக்குப் பாரான் வாதி
விரைந்துமே வெள்ளிதன்னி லீயந் தன்னைக்
காதைதா னிட்டுமே யூதி யூதிக்
கடைகெட்டுத் திரிந்துமே வாதி மார்கள்
பாதைதான் பொய்யென்பார் புரட்டர் தாமும்
பதிவான பதியறியார் மூடர் தாமும்
வாதைதான் படாமலே செம்பு கெந்தி
வடிவாகக் கிராசமதைப் போட்டி டாயே. 37
போட்டிடவே செம்புதா னுருங்கிப் போகும்
பேரான புகைநீரா லரைத்து வில்லை
தாட்டிகமாய் சவியில் வைத்துக் காயப்போடு
தப்பாமல் புடமிட்டே யுருக்கிப் பாரு
காட்டிடவே செம்பாகுஞ் சிவப்பு மெத்த
கருணைபுரி செம்புதனை யெடுத்து நீயும்
பாட்டிடவே மதிதனிலே கொடுத்தா யானால்
பதிவான பொன்னாகும் பலனு மாமே. 38
பலனாக வாதாங்க முந்நூற் றுள்ளே
பார்த்திடவே யேமமாம் நியம மெத்த
பிலனாகப் பார்த்தாக்கா லெல்லாந் தோன்றும்
புரட்டாகச் சொன்னதனா லென்ன லாபம்
கலனாகக் கலனறிந்தால் வாதி யாவான்
கருத்தில்லா வாதிதான் காண மாட்டான்
பிலவானா யிருந்ததினால் மூட னாவான்
புரட்டுருட்டுச் செய்யாமல் வேதை பாரே. 39



வேதைதான் வருகிறது அரிதே அய்யா
வித்தகனார் பத்தியுள்ள பேர்களுக்குப்
யோதைதான் போக்கோடே வருதும் பாரு
பொல்லாதார் மதிமயங்கித் திரிகு வார்கள்
சாதைதான் பட்டுமே பொய்யென் பார்கள்
கருதினோர் தங்களுக்குப் புத்தி சொல்லு
நாதைதா னில்லாமல் நல்லோ ருக்கு
நலமான தாளகத்தின் செம்பு சொல்லே. 40

இன்னதில்லாமலிது உதவாதெனல்.

சொல்லவே செம்புதன்னை விட்டா னாகிற்
சிறப்பான வாதமெல்லாம் பொய்யாய்ப் போகும்
பையவே சவுக்காரந் தன்னை விட்டாற்
பதிவான நீற்றினங்க ளெல்லாம் போகும்
நையவே துருசதனை விட்டா னாகில்
நலமான சத்துவகை யெல்லாம் போகும்
கையவே தங்கத்தை விட்டா னாகிற்
கனகமது இல்லையிதைக் கருத்தாய்ப் பாரே. 41
பாருமே கல்லுப்பு விட்டா னாகிற்
பதிவான சரக்கெல்லாங் கட்டொணாது
வாருமே கெந்திதன்னை விட்டா னாகில்
வடிவான வாதமெல்லாம் விழலாய்ப் போகும்
சாருமே மனந்தனையே விட்டா னாகிற்
சரியான யோகமில்லை சித்தியில்லை
நாருமே துருசுக்குள் வெம்பை விட்டால்
நலமான யேமமில்லை கடத்தை பாரே. 42
கடத்தைபார் துருசில்லா சுத்தை யெல்லாம்
நலமான வூர்கடக்கத் தள்ளிப் போடு
கடத்தைப்பார் தங்கமில்லா களங்க மெல்லாம்

காரியமா யப்பாலே யகற்றிப் போடு
விடத்தைப்பார் கிண்ணா மில்லா வேதை
விருப்பமாய்க் காயசித்தி முறையு மில்லைத்
திடத்தைப்பார் யூகிமுனி சாஸ்திரத்திற்
சிறப்பான கைப்பாகந் திறமை பாரே. 43

திறமைபார் புகைநீரு மில்லை யாயிற்
சிறப்பான களங்கெல்லாம் வசப்ப டாது
வறமைபார் கருவில்லாக் களங்க மெல்லாம்
வாசலிலே தள்ளிவிடு வன்மை யில்லைக்
கறமைபா ருப்பில்லாக் கட்ட தெல்லாம்
வாசலிலே போட்டிடவு மிதுவு நன்று
திறமைபார் புத்தியில்லா வாதி யோர்க்குச்
செய்தாலும் பொய்யாகுந் திறமை பாரே 44

## வெள்ளி சுத்தி.

திறமைபார் வெள்ளியைத்தா னெடுத்து நீயுந்
திரமாக வங்கத்தைக் கெடுத்தே யூத
வறமைபார் கொடுத்தூத வேண்டா மப்பா
வடிவாக வூதினு மியந் தானுங்
கறமைபார் போகாது சொல்லக் கேளு
காரணமாய்க் கருக்வெள்ளி யிருந்தா லந்தான்
சறமைபார் திராவகத்திற் போட்டாற் செம்பு
கசடற்றுத் திராவகத்திற் கிளம்பு மாமே. 45

கிளம்பிடுத் துருசைப்போல் நிறமு மாகும்
செடியாக வெள்ளியைத்தா னெடுத்து நீயுந்
தளம்பிடவே வெண்காரங் கொடுத்து ருக்கு
தடையறவே யுருகியே சுத்த மாகும்
வளம்பிடவே யிப்படிக்குச் செய்யா விட்டால்
வாதமென்று சொல்லெல்லாம் வழக்கு மாகும்



களம்பிடவே கைபாக மாகச் செய்து 46
கருதினால் இரசவாதங் கணக்கு மாமே.

களங்குக ளெல்லாவற்றையுஞ் செம்பாக்கி ஈயவானை—
போக்கி அந்தச் செம்பை வெள்ளியிற் கொடுத்தால்
மதிபழுக்கும், மாற்றுகும் பொன்னாகும்,
எல்லாஞ்சித்தியாகும் எனல்.

கணக்காகக் களங்குவகை செய்தா யாயிற்
காரணமாய்க் களங்குக்குட் செம்பை நீயுந்
துணக்காக வெடுத்துமே சொல்லக் கேளு
துடியாக மதிதனிலே தாக்கிப் பாரு
வணக்காக வுட்கொண்டு நுழையும் பாரு
வகையான பொன்னாகும் மாற்று மாகுந்
திணக்கமா யெல்லாமுஞ் சித்தி யாகுஞ்
சிறிதான லோகமெல்லாம் பழுக்கும் பாரே. 47

பழுக்குமே கோத்தீயஞ் செம்பில் நின்றாற்
பதிவான வெள்ளிதனில் நுழைந்த போது
தழுக்குமே யூதிடவே சிதறிப் போகுந்
தாக்காகப் பொறுமியது தகர்ந்து போகும்
கழுக்குமே யுருவமெல்லாங் காணா தோடுங்
கனகமது இல்லையிது கருதிப் பாரு
வழுக்குமே வாதமென்ற சொல்லும் பொய்யாம் 48
வடிவான பொருளில்லை மருவிப் பாரே.

மருவவே சொல்லுகிறே னூற்றங் கேளு
மனமொத்து வாதத்தைப் பாக மாக
கருவவே செய்துமே கவின்றே யுண்டு
நலமான துருசைநீ நாடிப் பாரு
பருவவே யுன்னுடைய சரித்திர மெல்லாம்
பதிவாக ஓடியே பயந்து போகும்

வருவதுவும் லாபம்வரும் வண்மை யாகும்
வடிவான பொருளிநீ வகையாய்ப் பாரே. 49
வகையென்னச் சொல்லுகிறே னதுக் கேளு
வகையான வகையறிந்து களங்கு தன்னைத்
தொகை யென்னச் செய்துமே செம்பு செய்து
துடியாகப் பொன்செய்து கடையில் விற்று
முகையென்னச் செம்புதா னதும் பாரு
முடிவான களங்கதுவு முடிவு மாகுந்
தொகையாகப் பொருளறிந்து தாகம் பார்த்துத்
தப்புரவாய்ச் செய்தாக்கா லெல்லா மாமே. 50

கெளரியால் அயமுருக்கல்.

ஆமேதா னிரும்பு அரப்பொடியும் பத்து
அளறவே கல்லுத்தி விட்டுக் கேளு
காமேதான் கெளரியது இடையே சேர்த்துக்
கலங்காமே அருக்கிடவே யுருகும் பாரு
பூமேவும் வெள்ளிமணிப் போலே யாகும்
புருவமா யிடைக்கிடைதான் அருக செம்பு
நாமேதான் சேர்த்துமே யுருக்கிக் கொண்டு
நலமாக வுடைத்துமே யுருக்கி டாயே.

அயச் செம்பு.

உருக்கிடவே ஐம்முறையிப் படியே செய்து
உண்மையா யுடைத்துமே சொல்லக் கேளு
சொருக்கிடவே புகைநீரா லரைத்து வில்லை
திராக விருளாம மரைத்து நீயும்
பருக்கிடவே வில்லைதட்டிக் காயப் போடு
பதிவாய்ப் பெரியபுடம் போட்டெடுக்கச்
சுருக்கிடவே காரமிட்டு உருக்கித் திரு
கசடற்று ரவிபோகுங் கண்டு கொள்ளே. 5'



கொள்ளவே செம்பாகுந் தங்கம்போலாந்
கொடுமையாய் மதிதனிலே யெட்டுக்கொன்று
கள்ளமாய்க் கொடுத்திடவே யேழுமாற்றுக்
கணக்காகப் புடமிறங்கு மிந்தச்செம்பு
துள்ளவே யிச்செம்பு போலேபாரு
துடியாகச் சகலமுந்தா னிதுவேபோலத்
தள்ளாடிப் பார்த்திடவே சித்தியாகுஞ் 53
சகலசித்தி யாடலாந் தாக்கிப்பாரே.

தாக்கிடவே யிரும்பதுவுஞ் சொல்லக்கேளு
தண்மையாய்ப் புகைநீரால் செம்புதன்னை
வாக்கிடவே யெடுத்துமே சொல்லக்கேளு
வகையாகக் கைப்பாக மாகச்செய்து
நோக்கிடவே யிரும்பை விட்டால் வாதமில்லை
துணுக்கமா யெல்லாமுஞ் சித்தியாகும்
பாக்கிட்டால் பல்கிவக்கும் வேதைமார்க்கம் 54
பதிவாக வெல்லாமுஞ் சித்தியாமே.

சித்தியே யாகவென்று விரும்பைப்பாரு
ஜெயமாகும் பொருளாகுந் தீர்க்கமாகும்
முத்தியா யாகவென்றுன் மூலம்பாரு
முடியுமட்டுங் களங்காக முடிக்கப்பாரு
சுத்தியே யிருக்குநீ ஞானம்பாரு
நலமாக யோகசித்தி காயசித்தி
புத்திமா னாகவே யிருந்து நீயும் 55
பிரபலமா யுலகத்திற் புகழ்ந்துபாரே.

புகழ்ந்துபார் வாதத்தைச் செய்துகொள்ளு
புத்தியாய்ப் பொன்விற்றுச் செலவுசெய்து
மகிழ்ந்துபார் பொன்னில்லாப் போனாற்கேளு
நாடியே வெள்ளிவித்தை நலமாய்ப்பாரு

அமழ்ந்துபார் ஞானசித்தி யுடனேயாகும்
  ஆராய்ந்து பார்த்தக்கா லெல்லாஞ்சித்தி
அமழ்ந்துபார் அரக்கில்நின்ற சரபம்போலத்
  துடியாகப் பார்த்துமே செய்து கொள்ளே. 56

செப்பிடவே வாதமெல்லாஞ் சித்தியாகுஞ்
  சிறப்பான தீக்ஷைவிதி தன்னில்தானும்
மெய்யாகக் களங்குமெளக் காஞ்சொன்னேன்
  மேன்மையாய்ச் சவுக்காரக் குழம்பைவைத்துக்
கைத்திடவே யுப்பெல்லாஞ் சீற்றச்சொன்னேன்
  கலக்கமறப் பார்த்திட்டு உறைத்துமேயும்
வையகத்தி லுழைத்துமே செய்துதேற
  வதுவாக வுழைத்தக்கா லெல்லாமாமே. 57

ஆமேதான் சவுக்காரக் குழம்பினாலே
  ஆடலர்ம் வெகுகோடி வித்தைதானும்
வாமேதான் வித்தையது தெரிந்துபோனால்
  வையகத்திற் சித்தரைப்போல் வாழ்வீர்காணும்
பூமேவு விலந்தனிலே யிருக்கவென்றுற்
  போக்கான சௌக்காரக் குழம்பைப்பாரு
நாமேதான் சொல்லிவிட்டோம் வாதாங்கத்தி
  னலமாகச் சித்தியிலே வண்மைதானே. 58

கெந்திபஸ்பம் செய்ய தீக்ஷை.

வண்மைதான் கெந்திபதின் சுண்ணந்தன்னை
  வகையாகச் சொல்லுகிறேன் வாதாங்கத்திற்
கண்மைதான் கெந்திபது பலமேழாபத்து
  கனக்காக எருக்கிலையின் பாலில்தானே
தண்மைதான் தோய்த்துமே வெட்டுகாலில்
  தடையறவே போட்டுவைக் குடிக்குப்பாரு

உண்மைதான் குடிக்தகொரு கெந்திதானும்
உற்றுமே பார்த்திடவே வெள்ளையாமே. 59

## கெந்தகக் கட்டு.

வெள்ளையாங் கெந்திதான் மடிந்துபோகும்
வேதையாங் கெந்திக்கு எடையேசீனக்
தள்ளையாஞ் சுண்ணத்தைச் செய்துகட்டு
தாக்கவே பெருங்கவசங் கட்டித்தானும்
பள்ளையாம் பெரியபுடம் போட்டெடுக்கப்
பதிவான கெந்திபது பஸ்பமாகுந்
துள்ளையாம் பஸ்பத்திற் சௌக்காரத்தைத்
துடியாக விட்டுஇரு ஜாமமாட்டே. 60

## கெந்திச்சுண்ணம்

அரைத்துமே வில்லைதட்டி ரவியில்போட்டு
அன்பாகக் காயவைத்துச் சொல்லக்கேளு
நிரைத்துமே ஐந்துசுண்ணக் குகையில்வைத்து
நேர்ப்பாகப் புடம்போடக் கெந்திதானும்
பரைத்துமே கடுஞ்சுண்ண மாகும்பாரு
பதையாமற் சுண்ணத்தை யெடுத்துக்கல்வத்
தரைத்துமே சவுக்காரக் குழம்பைவிட்டுத்
தாக்கியே அரைத்துவில்லை கட்டடாயே. 61

கட்டியே பைம்முறையிப் படியேபோடு
கசடற்றுக் கெந்திகடுஞ் சுண்ணமாகும்
விட்டுமே கெந்தியது சுண்ணமானால்
விதமான சூதந்தா னுடனேகட்டும்
பட்டுமே சூதமடை கெந்திச்சுண்ணம்
பதிவாகச் சேர்த்துமே புகைநீராற்றன்

தட்டுமே யரைத்திடவே வில்லைதட்டித்
தாக்காகப் புடம்போடச் சூதநீறே. 62

சூதமே நீறானால் சொல்லக்கேளு
சுருதியாய்ச் செம்புதான் தங்கமாகும்
பாதந்தான் பூமியிலே நடக்கவென்றால்
பகையாமற் ககனசித்தி யாகும்பாரு
வாதந்தான் கைகட்டி வாய்புதைத்து
வடிவாக யேவலாய்க் கேட்கும்பாரு
நாதந்தான் பொன்னாகும் வேதையாகும்
நலமான கருவதனை நாடிக்கேளே. 63

நாடிப்பார் கெந்தியது சுண்ணந்தன்னை
நலமாகச் செம்புருக்கி நூறொன்றிட்டாற்
பாடிப்பார் தங்கமது உடனே யாகும்
பதிவான ஆட்டெல்லாங் கெந்தியாட்டு
காடிப்பார் கெந்தகந்தான் வேதையெத்த
கனிவாக நடாராஜர் சமைத்த நேர்மை
வாடிப்பார் தங்கமது அதிகமாகும்
வடிவாக பெருமைதனைச் சொல்லொண்ணாதே. 64

ஒண்ணாதே கெந்தகத்தின் பெருமைதன்னை
யுற்றுமே முனிசித்த ரீலேசொல்லக்
கண்ணாக முடியாது பெருமைதானுங்
காரணமாய்ச் சித்தர்கரு முறைமறைத்தார்
விண்ணோர்கள் பெரியோர்கள் சொல்லப்போகா
விதமாகக் கெந்தகத்தின் ஆட்டுதன்னைப்
பண்ணாக நூல்தனிலே சொல்லிப் போட்டேன்
பதிவான யூகிமுனி பண்புள்ளோரே. 65



துருசுடன் கெந்திசேர்த்துருக்கினால்
வெண்கலம் போலிருக்குமெனல்.

பண்புள்ள யூகிமுனி யாய்ந்துதேர்ந்தார்
பதிவாகத் துருசுடனே கெந்திசேர்ந்தால்
நண்பாக வெண்கலம்போ லாகும்பாரு
நலமான வெண்கலத்தைச் செம்பாய்ப்பண்ணத்
தண்பாகத் தெரியாத படியினாலே
தாக்கான வாதமெல்லாம் பொய்யாய்ப் போச்சு
வண்பாகச் சொன்னதினா லென்னலாபம்
வடிவான விதியறிந்தால் வாதமாமே. 66

வாதமென்ன செய்தவர்க்கு உடனே செம்பு
வடிவாகச் சேர்த்துமே கெந்திதானும்
நீதமாய்ச் சேரவெண் கலம்போ லாகும்
நிலையாகு மிச்செம்பை யெடுத்தாலாற்
காதமென்ன மதியினிடம் கொடுத்த போது
கதிபெறவே பொன்னாகுங் கருணையெத்த
சூதமென்ன கெந்தகத்தின் சுண்ணஞ் சேரச்
சூக்ஷமாய் மாற்றாகுஞ் சூக்ஷமாமே. 67

சூக்ஷமாய்க் கெந்தகத்தி னுழைந்த செம்பைச்
சொரூபமாய்ப் பார்த்தாக்காற் றங்கந்தோன்றும்
ஆக்ஷமென்ன ஆயிரத்து எட்டுமாற்று
அருகுகட்டிப் புடத்திற்கு இறங்கும்பாரு
வாக்ஷமா யிவ்வேதை நிஜமதாகும்
வடிவாகப் பொருளறிந்த வாதிமானே
தீக்ஷையென்ன தசவாய்வைக் கட்டநீயுந்
தீக்ஷைவிதி தன்னிலே சொல்லினேனே. 68

### மேல் கூறியதைச் சிந்தாமணி - வாதகாண்டமிரண்டு - உலா - கொம்மி-பள்ளு முதலிய நூல்களிற்பாரேனல்.

சொன்னதொரு மதிசிந்தா மணியும்பாரு
சொற்பெரிய வாதகாண்ட மிரண்டும்பாரு
வன்னதொரு ஞானஉலா தன்னைப்பாரு
வடிவான ஞானத்தின் கொம்மிபாரு
நன்னயமாய்ப் பள்ளுதனிற் றொகையறிந்து
நாடாத சித்தியெல்லாம் நவிலப்பாரு
அன்னியமாய்ப் பொருளறிந்து கைப்பாகம்பார்
கணக்கறிந்தால் வேதைதான் கருதிப்பாரே. 69

கருதியொரு தாளகத்தின் செம்புசொல்வேன்
கணக்காக அறிந்துமே சொல்லக்கேளு
கருதியொரு தாளகந்தான் பலமேபத்து
நலமாகக் கற்சுண்ண நீரில்தானும்
வருதியே நாள் மூன்று வரவைத்து
வடிவாக எடுத்துமே சொல்லக்கேளு
தருதியே சோதித்து எடுத்துப்பாரு
தன்மையாய் வெள்ளையா யிருக்கும்பாரே. 70

பார்த்ததொரு வெள்ளையைத்தா னெடுத்துக்கொள்ளு
பதிவாக சீனத்தின் சுண்ணமேலே
கார்த்ததொரு பெருங்கவச மாகக்கட்டுக்
கனிவாகக் காபவைத்துப் புடத்தைப்போடு
தார்த்ததொரு தாளகந்தான் நீறுபபோகுந்
தாக்காக நீற்றினதை யெடுத்துக்கொள்ளு
பார்த்ததொரு கல்வத்தி லிட்டுக்கேளு
பதிவான சவுக்காரக் குழம்பிலாட்டே.



ஆட்டியே வில்லைதட்டிக் காயப்போட்டு
அன்பாகச் சீனத்தின் சுண்ணம்நேரே
பாட்டியே கவசமிட்டுப் புடமாய்ப்போடு
பதிவான தாளகந்தான் சுண்ணமாகுந்
தேட்டென்ன இதற்கீடோ கண்டுபாரு
ஜெயமான தாளகத்தின் சுண்ணநேரே
வாட்டியே நுதபஸ்ப நிறுத்துக்கொண்டு
வகையாக சவுக்காரக் குழம்பிலாட்டே. 72

குழம்பான சவுக்காரத் தாலேயாட்டிக்
கொள்ளவே யிப்படியே ஐந்துதரந்தம்
அழும்பாகப் போட்டுமே சொல்லக்கேளு
அடைவாகத் தாளமது கட்டிப்போகும்
கழும்பான செம்புருக்கி நூறிலொன்று
நாடவே திசைமாற்றும் வகிர்றுபாரு
கழும்பான வுப்புக்கும் காசிக்குந்தான்
காரியமாய்ப் புடமிறக்குந் தங்கந்தானே. 73

தானேதான் சதாசிவனும் முடியாதப்பா
தயவான இப்பொன்னி னேர்மைதன்னை
வானேதான் தாளகத்தின் வேதைதன்னை
வாய்திறந்து சொல்லவுமே ஆகாதப்பா
கானேதான் அரிதான பொன்னுக்கப்பா
நலமாக மாற்றில்லை ஆணியில்லை
கானேதான் அகஸ்தியர்தான் சொன்னநேர்மை
கனிவாக யான்கண்டு சொல்லினேனே. 74

சொல்லினேன் தீக்ஷைவிதி மூன்றுநூற்தான்
ஐயமாக இல்லையென்று வாதாங்கத்தில்
நல்லவே சொல்லிவிட்டே னிந்தநூலை
நலமாகப் பார்த்துமே செய்துகொண்டு

கல்லவே வாதாங்க முடிவுமாகுங்
கருத்துவைத்தாற் பொன்னெல்லா முடனேயாகும்
நல்லவே யிதையறிந்து செய்தானாகில்
நாடாத சித்தியெல்லாம் நாடும்பாரே. 75

நாடுமே கெந்தகத்தை விட்டால்வர்ணம்
நலமாகச் சித்தியில்லை நாட்டம்பாரு
பாடுமே தாளகத்தை விட்டாற்றங்கம்
பதமாகச் சித்தியில்லை பதிவுமெத்த
காடுமே தங்கத்தை விட்டால்வர்ணங்
கலனாகுங் காடுபுக்கும் வர்ணமில்லை
பாடுமே பாஷாணம் விட்டால்வெள்ளி
பலனில்லை யென்றுமே பரிந்துபாரே. 76

பரிந்துபார் வாதாங்கந் தன்னிற்றானும்
பதிவாகச் செய்வினது நேர்மைதன்னை
அறிந்துபார் கைப்பாக மாகச்செய்து
அடைவாகச் செய்தாக்காற் பலனுமாகுஞ்
செறிந்துபார் தாரத்தை யிவ்வாறேசெய்
தெரியாத வாதிக்குத் தெரிந்துபோகும்
கரிந்துபார் புகைநீரே யில்லாவேதை
கனிவாகச் சொல்லெல்லாம் வீணாய்ப்போமே. 77

வீணாகப் போகாமற் சவுக்காரத்தை
விருப்பமாய்ப் போகாமல் வைத்துத்தேறு
நாணாக மனந்தன்னை நோகப்பண்ணி
நாட்டிலே சொல்லாமன் மனத்தையூனு
காணாகப் போகாமற் கெந்திதன்னைக்
கலக்கமற்று நீற்றியே கருணைகூர்ந்து
வாணாளை வாங்காமல் தாளகத்தை
வகையாக வைத்திடவே சித்தியாமே. 78



சித்தியாஞ் சவுக்கார மில்லாச்சுண்ணஞ்
சிறப்பாக லோகத்தில் பழுக்காபாரு
பத்தியாத் தங்கமில்லாக் களங்கமெல்லாம்
பதிவான மட்டமில்லை யறிவுபாரு
சத்திய யுபரசங்க ளில்லாச்செம்பு
சதிராக வொன்றுமில்லை தன்மைபாரு
வித்தியாய்க் கைப்பாக மில்லாவேதை
விடிவில்லை யெல்லாமு முத்தியாமே. 79

குருக்களங்கு.

முத்தியாம் வேதையொன்று சொல்லக்கேளு
விருப்பமாய் அயம்பலமு மொன்றுபோடு
சித்தியாய்த் தருசுபத்துப் பலமும்போடு
சிறப்பாகக் கெந்தியது பலமுமூன்று
நத்தியே யிவைமூன்று மரைத்துக்கேளு
நலமான புகைநீரா லரைத்தேயுண்டை
சத்தியாய் ரவியில்வைத்துக் காயப்போடு
சரியாக வெடுத்துமே சொல்லக்கேளே. 80

வெட்டையாயிருக்குஞ் செம்பைப் பஞ்சமித்திரத்தி
லுருக்கிச் சாய்க்கவெனல்.

சொல்லவே புடம்போட்டு எடுத்துக்கொண்டு
சிறப்பாகக் குகையில்வைத் துருக்கிப்போடு
நல்லவே ரவிபோலச் செம்புமாகும்
நலமாகச் செம்பெல்லாம் வெட்டைபோலாம்
பல்லவே பஞ்சமித்தி ரத்தில் சாய்த்தால்
பதிவான செம்பெல்லாந் தங்கம்போலாம்
கல்லவே செம்பெடுத்து மதியில்பத்து
கனமாகக் கொடுத்திடவே சொல்க்கேளே. 81

கேளுமே மாற்றென்ன ஐக்துமாகுங்
கெடியான எடைக்கெடைதான் தங்கஞ்சேர்க்க
ஆளுமே மாற்றென்ன எட்டுமாகும்
அருகுகட்டிப் புடத்திற்கு இறங்கும்பாரு
நாளுமே யிச்செம்பைப் பண்ணித்தேர்ந்து
நலமாக ஜீவனத்திற் கிடமாய்ப்பாரு
வாளுமே செம்பைத்தான் முதன்மையாக
வடிவாகப் பண்ணவே சித்தியாமே. 82

இன்னின்னதை முறையே பார்க்கவேண்டுமெனல்.

சித்தியா மயச்செம்பை முன்னேபாரு
சிறப்பாக வதன்பின்னே கெந்திபாரு
முத்தியா மதன்பின்னே சவுக்காரம்பார்
முடிவுவந்த விடமெல்லாஞ் சீனத்தைப்பார்
நத்தியா யதன்பின்னே தாளகத்தை
நலமாக வதன்பின்னே பாகம்பாரு
கத்தியே திரியாமல் செய்புதன்னைக்
கருத்துவைத்தா லெல்லா முஞ் சித்தியாமே. 83

சாரக் கட்டு.

சித்தியே யாகவென்றால் சொல்லக்கேளு
சிறப்பாகச் சாரத்தைக் கசிவெடுக்க
முத்தியாய்க் கற்சுண்ணம் நடுவேவைத்து
முக்கியமா யிருஜாம மெரித்துப்போடப்
பத்தியாய்ச் சாரமது கசிவுபோகும்
பண்பாக இன்னமொரு பாகங்கேளு
நத்தியாய்ச் சீனமது சேரதொன்று
நலமாகப் பொரித்துமே சொல்லக்கேளே. 84



சீனச்சுண்ணஞ் செய்து சாரத்தின்மேல்
கவசங்கட்ட வெனல்.

கேளுமே வெண்கருவுங் கூடவிட்டுக்
கெடியாத வரைசீனம் பில்லைதட்டி
நாளுமே காயவைத்துப்புடத்தைப்போடு
நலமாகக் கடுஞ்சுண்ணஞ் சீனச்சுண்ணம்
பாழுமே போகாமல் சுண்ணந் தன்னைப்
பதிவாக வெண்கருவா லரைத்துச்சாரம்
வாழுமே கட்டியே காயவைத்து 85
வடிவாகச் சொல்லுகிறேன் வண்மைகேளே

சாரச்சுண்ணம்.

வண்மையாய்க் கிளிஞ்சில்நீர்க் குள்ளேவைத்து
வடிவாகத் தீயெரிப்பாய் நான்குஜாமம்
நண்மையா யெடுத்துப்பார் தந்தம்போலாம்
நயமான சாரத்தைச் சுண்ணஞ்செய்ய
கண்மையாய்ச் சீனமது சுண்ணஞ்சேர்த்துக்
கடுமையா யரைத்திடவே பூசிப்போடு
நண்மையாஞ் சாரமது சுண்ணமாகும் 86
நலமான வேலையெல்லாம் சாரந்தானே.

சாரஜெயநீர்.

சாரத்தில் சாரமிட ஜெயநீராகும்
க்ஷணத்திலே நாகமது கட்டிப்போகும்
பாரத்தில் செம்புதான் பழுக்கும்பாரு
பக்குவமாய் வெண்ணெய்போ லாகும்பாரு
வேரற்ற மரந்தானுந் தளிர்க்கும்பாரு
வெருளாதே சாரத்தில் வெகுபோக்குத்தான்
நீரற்ற விடந்தனிலே ஜீவஜெந்து 87
நிலையில்லா திருக்குமப்பா நேர்த்துபாரே.

பாருமே சாரத்தின் ஜெயநீர் தன்னில்
பக்குவமாய் நாகத்தை யுருக்கிச்சாய்க்கக்
காருமே நாகமது சவடுதீர்ந்து
கனிவாக நாகபங்கை கட்டிப்போகுஞ்
சாருமே ரவிபழுக்கும் வேளையாகும்
க்ஷணத்திலே சகலமெல்லாஞ் சித்தியாகும்
பாருமே சாரத்தை விட்டானால்
சகலமுமே சித்தியில்லை தண்மைதானே.

தண்மையாய்ச் சாரமதை ராமதேவர்
தாக்கியே சகலமெல்லாங் கட்டிநீற்றிக்
கண்மையாஞ் சாரத்தால் வெகுஆட்டுத்தான்
கலக்கமற் றுடிஞ ரடுமேட்டு
வண்மையாம் நாற்கோடி சாரத்தாலே
வகையாக நாகத்தைக் கட்டிநீற்றி
உண்மையாய் வாதமது பண்ணினானம்
உற்றுமே பார்த்திட்டு இருந்தார்தானே.

இருந்திட்டார் சிவயோகி யாயிருந்து
எழிலான குளிகைமுதல் பார்த்திட்டார்பார்
கருந்திட்டார் சித்திவெல்லா மச்சுபாரு
கலாச்சார மென்றதனால் குளிகைபண்ணிக்
கருந்திட்ட மலைமுழைஞ்சில் குளிகைசெய்து
கலக்கமற் றிருந்திட்டார் ராமதேவர்
அருந்திட்ட வெல்லாமுஞ் சினத்தாலே
ஆச்சரியஞ் சேர்ந்தா ராவசசே.

ஆச்சென்ற வெண்கண்டர் சின்மயாகும்
அறிவில்லா வாதிதான் துரிசைநீற்றிக்
காச்சென்ற நீராதே யொன்றாலே
கனிவாக வாதம்பொய் யென்பாரப்பா



மூச்சென்ற ததுவடங்கிச் சரிநில்லாது
முனையான சுழிமுனையில் நின்றுதேறு
வாச்சென்ற விதியாளி கண்டுகொள்வான்
வகையில்லான் காணான்பார் மருவிப்பாரே. 91

மருவிப்பார் சித்தர்முனி ரிஷிகள்தேவர்
மாட்டியே துரிசுமுதல் சுண்ணம்பண்ணி
அருவிப்பார் சூதத்தைக் கட்டிநீற்றி
ஆண்மையாய்க் குளிகைமுதல் பண்ணித்தேர்ந்து
வருவிப்பார் இரசவாத யோகியாவார்
வடிவான சமாதியிலே யிருந்துதேறு
கருவிப்பார் கேள்வியினால் சுட்டுசுட்டுக்
காணாம லிருந்தவர்தாங் கோடிதாமே. 92

கோடிபேர் சுட்டுமே யொன்றுங்காணார்
குணங்கெட்ட மடையரப்பா வொன்றுங்காணார்
தேடியே யிதோஆச்சு ஆச்சுதென்பார்
குணமில்லார் மணமில்லார் குடிகெடுப்பார்
தேடிப்பார் சாஸ்திரத்தைத் தேடமாட்டார்
தெருவிலே யலைதுவா ரொன்றுமில்லை
நாடியே வாதாங்க முந்நூற்றுள்ளே
நாட்டிஉள்ள அதிசயமுஞ் சொன்னேன்பாரே. 93

சொன்னதெல்லாந் தீக்ஷைவிதி தன்னில்தானுஞ்
சுருக்காக விரண்டும் ஒத்துப்பார்த்துக்
கன்னல்போல் தொகைவகையாய் கண்டுபேசிக்
கணக்கறிந்து பொருளறிந்து கண்டுகொள்ளு
இந்நிலத்தில் பொருளறியா துலுக்கவாதி
எப்போதும் போலவே சாரந்தன்னை
கன்னயமா யுழைத்தக்கால் வாதமாகும் 94
நாடியே பொருளறிந்தால் வாதியாமே.

வாதியாஞ் சாஸ்த்திரத்தை யறியாமற்றான்
வகையில்லாச் சரக்குகளைப் பார்த்துப்பார்த்துச்
சோதியா தகனிலே வாதம்பொய்யாஞ்
சூஸ்திரத்தையறியாமல் தவிப்பார்பாரு
கோதியே பாராமல் குணமுமில்லை
குடிகேடு செய்திடுவா றூத்தாப்பா
பேதியா திதுவெல்லாம் பிறழ்ந்துபோகும்
பிரபலமாய் ஞானத்தைப் பேணிப்பாரே. 95

நாகக்கட்டு.

பேணிப்பார் நாகத்தை யிலுப்பைநெய்யில்
பிரபலமா யுருக்கிச் சாய்த்துக்கொண்டு
வணிப்பார் சாரத்தை மேலேபோடு
உற்பனமாய்ப் புகையடங்கும் கட்டித்திடும்
நாணிப்பார் புகைபடங்குஞ் செம்புதன்னில்
நலமாக இருபதுக்கு வொன்றேதாக்கு
தாணிப்பார் மாறறென்ன திசைபாற்றுக்
தடையற்றுக் கடைதனிலே விற்றுக்கொள்ளே. 96
விற்றுமே செலவழித்து ஞானந்தன்னை
விரும்பியே பார்த்திடவே வெளியாய்த் தோன்றுஞ்
சித்துமே செய்துநீ ஜெபத்தைப் பண்ணு
சிறப்பாக மோகத்தைத் தெளிந்துபாரு
முத்தியே பலனாகும் வேதையாகும்
முடிவுமட்டும் ஞானத்தை விரும்பிநில்லு
சித்தியா வெல்லாமுஞ் சித்தியாகுஞ்
சீக்கிரத்தில் ஞானத்தைப் பார்த்திடாயே. 97

சீனச்சுண்ணம்.

பார்த்திடவே யின்னுமொரு வேதைமார்க்கம்
பதிவாகச் சொல்லுகிறே னுலகத்தோர்க்கு



எத்திடவே யுவர்மண்ணுஞ் சுண்ணம்நேரே
உண்மையாய்க் கலந்துமே காய்ச்சிக்கொள்ளு
நார்த்திடவே சீனமது நான்குசேரு
நலமாகப் பொரித்துமே கல்வத்திட்டு
வார்த்துமே சவுக்காரக் குழம்பினாலே
வகையாக அரைத்துவில்லை கட்டிக்கொள்ளே. 98
கட்டியே வில்லைதட்டிக் காயப்போடு
கனமாகப் பெரியபுடம் போட்டெடுத்து
நட்டியே யெடுத்துப்பார் சுண்ணமாகும்
நலமாகச் சவுக்காரக் குழம்பினாலே
வட்டியே யரைத்துவில்லை காபவைத்து
வடிவாகப் பின்பொருசால் புடத்தைப்போடு
வட்டியே கடுஞ்சுண்ணஞ் சீனச்சுண்ணம்
வகையறவே சொல்லுகிறேன் தன்மையாரே 99

வெடியுப்புச் சுண்ணம்.

தன்மையாஞ் சீனத்தின் சுண்ணந்தன்னைத்
தடையறவே வெடியுப்பு ஐந்தாங்காச்சல்
வன்மையாய்ச் சேர்த்துமே யிடையேதானும்
வகையாகச் சேர்த்தரைத்து வில்லைதட்டி
நன்மையாய்ப் பழச்சாறு விட்டரைத்து
நலமான சட்டியிட்டு எரிநேர்ஜாமம்
உண்மையாய் நீறியது சுண்ணமாகும் 100
உருதிபெற்ற சுண்ணமது வுற்றுப்பாரே
உற்றுப்பா ரிப்படிக்குச் சீனச்சுண்ணம்
உறுதியா னாக்குமுறை சேர்த்தேயூது
நற்றுப்பார் கடுஞ்சுண்ண மாகும்பாரு
நலமான வெடியுப்புச் சுண்ணமாச்சு

கற்றுப்பார் சாஸ்திரத்திற் சொல்லவில்லை
கனிவான வாதாங்கந் தன்னிற்சொன்னேன்
சிற்றுப்பார் வெடியுப்புப் பெருமைதன்னைச்
சிறப்பாக அருளது முடியாவாறே 101

அருகச் சுண்ணம்.

முடியாது வெடியுப்புப் பாகமாக
முற்றுபெறச் செய்துமே சுண்ணந்தன்னில்
கடியாமற் சாரத்தை யிடையேசேரு
கருணைபெற நீருகும் நீறுதன்னில்
வடிபாக வீரமொடு பூரமிட்டு
வகையாக வைத்துமே சொல்லக்கேளு
அடியாகத் தருகநீர் சுருக்குப்போடு
அப்பாவாய்ப் பத்துநாள் போட்டுப்பாரே 102

போட்டுமே அருகுதான் சுக்கான்போலப்
பெருமையாய்க் கட்டியே யிருக்கும்பாரு
நாட்டுமே வங்கமென்ற சுண்ணந்தன்னை
நலமாக மேல்கவசம் நாடிப்போடு
பாட்டுமே குக்குடமாய்ப் போட்டுக்கொண்டு
பதிவான கடுஞ்சுண்ணந் தருகச்சுண்ணந்
திட்டுமே அம்பரத்தில் செருக்கியோடுந்
திடமான அருகுதான் வேதையாமே 103

வேதையாந் தில்லம்பால் படிமறக்கு
விருப்பமாய்ப் பணவெடைதான் பரிவிட்டுக்
காதையாம் போட்டிடவே முரிந்துபோகுங்
கனிவான சரக்கெல்லாஞ் சொன்னதிட்டும்
நாதையாம் உப்புமுத லிருபத்தைந்துங்
கலமாகக் கட்டாகும் வேதையாகும்



பாதையா யிதுபோகும் போக்குத்தானும்
பதிவான ஐம்பாகும் பண்புள்ளோரே 104

பாஷாணக் கட்டு.

பண்பாக வெள்ளைப்பா ஷாணந்தன்னில்
பதிவாகச் சுருக்கிடவே கட்டிப்போகுந்
தண்பாகத் தீட்சைவிதி தன்னிற் சொன்னேன்
தடையறவே யிதுசேர்த்து வெள்ளிபண்ணு
உண்பாரை யுடுப்பாரைப் பார்த்துவங்கி
உறுதியா யிருக்கவே வேண்டாமையா
நண்பாகப் பாகமாய்ச் செய்துகொள்ளு
நானிலத்தில் தபசியா யிருந்திடாயே 105

இருந்திடவே வெள்ளைப்பா ஷாணம்போல
இதமாகக் கெவுரியையிப் படியேபண்ணு
நருந்திடவே தாளகயிப் படியேபண்ணு
நலமாக லிங்கத்தைப் பண்ணித்தேறு
கருந்திடவே கார்முகிலிப் படியேபண்ணு
கனமான வாதமிப்படியே யாச்சு
பருந்திடவே கட்டாகு மெழுகுமாகும்
பதிவாவே விதியாகும் பண்புள்ளோரே. 106

பண்புள்ளோர் விதியாளர் கண்டுகொள்வர்
பதியில்லார் காணமலலைகுவார்பார்
இண்பாகத் தின்னியமே பேசிக்கொள்வர்
இருடாப்பா அவரைத்தா னம்பவேண்டாம்
உண்புள்ளோ ரொருவரது பேச்சைக்கேட்டு
உறுதியில் லாமலே யலைகுவார்பார்
நண்பாகக் கெட்டபுத்தி யாயிருப்பார்
நானிலத்தி லவர்களுக்கு நரகமாமே. 107

நாகமா யிவ்வேதை நிஜமதாகும்
நாடியே பாகமாய்ச் செய்துகொள்ளு
உரகமாம் உள்ளபடி சொன்னேன்பாரு
உற்றுமே பார்த்தக்கா லெல்லாமாகும்
முரகமாம் பண்ணாத வாதிமார்கள்
முகமினுக்கித் தலைதுளக்கிப் பேசுவார்பார்
நாகமா யிவர்பேச்சை நம்பவேண்டாம்
நாடியே பார்த்திடவே நலமதாமே. 10'

நலமாக வெடியுப்பு ஜெயநீர் தன்னில்
நாடியே சாக்கெல்லாங் கட்டிக்கொள்ளு
உலகமாம் ஜெகமெல்லாஞ் சித்தியாகும்
ஒழுங்காக எல்லாமுஞ் சித்தியாகும்
சிலகமாம் வெடியுப்பே ஆதியாகும்
சிக்கெனவே பார்த்தக்கால் தோன்றுந்தோன்று
மூலகமாந் தோன்றாமல் செய்யவேண்டாம்
ஒவ்வாத படியெல்லாஞ் செய்யவேண்டாம். 10

செய்யவே உலகத்தில் வாதிமார்கள்
சொற்பமாய் மூலிகையில் வெடியுப்பைத்தான்
மய்யவே அரைத்துமே புடத்தைப்போட
மதிபாகக் கரியாகப் போகும்பாரு
நய்யவே ஜெயநீர்தான் பண்ணிப்பண்ணி
கலமாகச் சரக்கைத்தான் அலைத்துவாட்டி
மெய்யாக ஜெயநீர்தா னச்சுதென்பார்
மதிகெட்ட வாதிதாஞ் சொல்லுவாரே. 11

சொல்லுவார் பலபேச்சுச் சொல்லுவார்பார்
சுருதியில்லை சாஸ்திரத்தைப் பொய்யேயென்பார்
வல்லமையாய்ப் பேசுவார் மாயக்காரர்
வடிவுடைய வெல்லாமும் பொய்யேயென்பார்



நல்லவாய்ப் பேசியே கழுத்தறுப்பார்
நாடியே சித்தியெல்லாம் வெடியுப்பாலே
பொல்லாமை யில்லாமல் மார்க்கமாகப்
புஞ்சையாங் கோபத்தைப் போக்கிப்போடே. 111

போக்கியே சாஸ்திரத்தைப் பார்த்துப்பார்த்துப்
பொறுமையாய்ப் பாகமாய்ச் செய்துகொண்டு
நோக்கியே சமாதியிலே நின்றுதேறு
நொடிக்குள்ளே ரசவாதஞ் சிக்கிப்போகும்
பாக்கியமா யெல்லாமுஞ் சித்தியாகப்
பதியாகும் விதியாளி வெடியுப்பைப்பார்
நோக்கியே யாறுமுறை வெளியாய்ப்போகும்
நுணுக்கமெல்லாம் வெடியுப்புத் தன்னாலே. 112

ஆமேதான் சினத்தைச் சுண்ணம்பண்ணு
அடைவாகப் பின்னேதான் வெடியுப்பைப்பார்
காமேதா னதன்மேலே சாரம்பாரு
கருத்துண்டாம் வாதமெல்லாஞ் சித்தியாகும்
பாமேதான் சகலமுந்தான் சித்தியாகும்
பதிவாகுந் தூநசென்ற சுண்ணந்தன்னை
வாமேதான் சித்தியெல்லா மெளிதிலாகும் 113
வடிவான துறையறிந்த வாதிதானே.

வாதிதா னென்று சொல்வார் நாலைக்காணோர்
வாய்பேச்சால் சுட்டலைந்து மாளுவார்பார்
நீதியாய்க் கண்டனென்பார் பொன்னைத்தானும்
நிலையில்லை பொன்தன்னையே காட்டுவார்பார்
சோதிபெற நான்செய்தே னென்பார்பாரு
சொரூபநிலை தெரியாதா ருலுத்தவாதி
ஆதியென்ற பொருளைத்தா னறியாரப்பா 114
ஆச்சதே வெள்ளிவித்தை சுருக்குதானே.

## வெள்ளி வித்தை.

சுருக்காகச் சொல்லுகிறேன் வெள்ளிவேலை
சுப்பிரமா யிதலகுவு முன்னேபாரு
நருக்காகப் பார்த்திடவே சித்திசித்தி
நாணயமா யிவ்வேலை நாடிப்பாரு
பருக்காகக் கல்லுப்பு படிதானெட்டு
பதிவாக நல்லதண்ணீர் படியிரெட்டு
வருவாக வுப்புதன்னி லூற்றிக்கொண்டு
வகையாகச் சுண்ணாம்பு படி தானொன்றே. 115

ஒன்றாகப் போட்டுமே காச்சக்கேளு
உறுதியாய் வடிகட்டித் தெளிவிறுத்து
நன்றாகக் காச்சியே யுறைப்பாரு
நலமாக வுறைந்தபின்பு நாட்டக்கேளு
கன்றாக மறுசட்டி அகப்பையாலே
காரணமாய் மொண்டுபுது சட்டியிட்டு
வன்றாக வொட்டவே காச்சிப்போடு
வகையாக நீர்போகக் காச்சிப்போடே. 116

போடவே சட்டியடு யுள்ளஞ்செய்து
பேர்பெரிய ரசந்தானுஞ் சேரதொன்று
நாடவே நடுவதனில் இரசம்விட்டு
நலமாக மேல்சட்டி மூடிப்போடு
காடவே சீலைமண்தா னேழுசெய்து
கருத்தறவே பன்னிரண்டு ஜாமத்தானும்
நாடவே யெரித்திடவே வுயாவேதி
நலமாக இருக்குமது பதங்கமாமே. 117

ஆமேதான் சட்டியைநீ பிரித்துக்கொண்டு
அடைவாக மயிர்க்குச்சி யாலேதானே



போமேதான் வழித்துமே பதங்கந் தன்னைப்
போக்காகக் கல்வத்தி லிருசேரிட்டு
நாமேதான் வெள்ளையென்ற பாஷாணத்தை
நலமாக எடைசேர்த்துக் கல்வத் திட்டு
வாமேதான் வெடியுப்பு நீரா லாட்டி
வடிவாக நாற்சாம மரைத்துக்கொள்ளே. 118

அரைத்துமே வில்லைதட்டிக் காயவைத்து
அடைவாகச் சட்டியிட்டு நடுவில்வைத்துப்
பரைத்துமே மேல்மூடி சீலைசெய்து
பதிவாக அடுப்பேற்றி யிருஜாமந்தான்
கரைத்துமே யெரித்திடவே வுபரவேறுங்
கனிவாக வெடுத்துமே மயிர்க்குச்சாலே
துரைத்துமே யெடுத்துஅரை வில்லையாக்கித்
துடியாக முன்போல எரித்திடாயே. 119

எரித்துமே யிப்படிக்கு ஐந்து அப்பா
இயல்பாக வெரித்தெடுத்து வைத்துக்கொண்டு
நரித்துமே வெள்ளியும் பலமுமொன்று
நலமான தாளகமும் பலமுமொன்று
கரித்துமே தாளகத்தைப் பொடியாய்ச்செய்து
கனிவாக வங்கத்தி லுருக்கிக்கொண்டு
பரித்துமே யிடைசமமாய்க் கொடுகொருங்கும்
பதிவான இன்னமொன்று பகரக்கேளே. 120

பகரவே சாரத்தை யிடையேசேர்த்துப்
பதிவாக வரைத்துமே யுருக்கித்திரு
நகரவே வெள்ளியஞ் சுத்தியாச்சு
நலமாக வெள்ளிபோ லோசைகேட்கும்
வகரவே குகையிலிட் டுருக்கிக்கொண்டு
வடிவாக நூற்றுக்கு ஒன்றுதாக்கிப்

பகாவே வெள்ளியது பத்துமாற்று
பகரிய வங்கத்தின் பெருமைதானே. 121

தானென்ற காரியங் குத்தியூது
தடையறவே வோடாது நிற்கும்பாரு
வானென்ற வெள்ளியைத்தான் விற்றுக்கொண்டு
வரிசையாய் ஜீவனமும் பண்ணித்தேரு
கானென்ற சிவயோக நிஷ்டைபாரு
கருத்துவைத்தால் வெள்ளிவித்தை வருகும்பாரு
ஊனென்ற சுழிமுனையில் நாட்டம்பாரு
உற்றுணர்ந்தா லெல்லாமுஞ் சித்தியாமே. 122

சித்தியா யாகவென்றால் சொல்லக்கேளு
சிறப்பாக வெள்ளைப்பா ஷாணத்தாலே
முத்தியாய் வெள்ளியது ஆச்சுபாரு
முடிவான யோகத்துக் கிதுதானுதி
சத்தியா யிதைவிட்டால் வெள்ளியில்லை
சரியான பாகமாய்ச் செய்துகொள்ளு
நத்தியே சகலமுந்தான் சித்தியாகும்
நலமான பொருளறிந்த வாதியாமே. 123

வாதியாம் பொருளறிந்தால் சொல்லக்கேளு
வகையான வெள்ளியைத்தா னறியவேண்டும்
நீதியாய்ச் சகலசித்தி யாடவேண்டும்
நிலையான பொருளறிய வேண்டுமப்பா
கோதிலா தறிந்தவனே சித்தன்சித்தன்
கொடுமைபெறச் சொன்னுக்கா லொன்றுமில்லை
பாதிமதி யணிந்தவனே யாடும்வித்தை
பதியறியார் விதியாளி காண்பான்பாரே. 124

பார்க்கவே வெள்ளிவித்தை சொன்னநேர்மை
பதிவான பொருளறிந்து பண்புபார்த்துச்



சேர்க்கவே ஒருமுறைதான் தப்பிற்றனும்
சிறப்பாக மும்முறைதான் செய்துகொள்ளு
ஏர்க்கவே கைப்பாகந் தப்பிற்றனால்
ஏழைபோ லிருக்காதே பின்னும்பாரு
வார்க்கவே பார்த்திடவே சித்தியாகும்
வளமான பொருளறியார் மாடுதானே. 125

மாடுதா னொருபோக்கா யிருக்கும்பாரு
மனிதருக்கு ஒருபோக்குந் தெரியாதப்பா
காடுதான் நாடுபோல் திரிவார்பாரு
கனிவாகப் பொருளறியார் காட்டுவாதி
நாடுதான் நாட்டிலுள்ள வாதிமார்கள்
நலமான பொருளையறி யாமற்றனும்
பாடுமா பாடியவர் முடியப்பாடி
பதமில்லை யென்பார்கள் வாதிமாரே. 126

வாதிதான் பாடுபட்டுப் பலனுமில்லை
வடிவாகப் பொருளுமில்லை யென்பாரப்பா
நீதிதா னறியாதா ரிவ்வாறந்தோ
நிகழ்த்துவா ருண்மையினை நெறியிலோரார்
பாதிமதி யணிந்தபரம் பொருளின்செய்கை
பாரதனி லெவரறிவார் பரிந்துபார்க்கின்
சோதிதான் பிரித்ததுபோல் சொல்வாரப்பா
சுருதியிலே யாராய்ந்து துலக்கம்பாரே. 127

துலக்கமாஞ் சீனத்தைச் சுண்ணஞ்செய்து
துடியாக வெடியுப்பு தன்னில்சேர்த்து
பலக்கமா யரைத்துவில்லை காயவைத்துப்
பதிவாகும் ஜெயநீராய்ச் செய்துகொள்ளு
வலக்கமாஞ் சகலமெல்லாஞ் சுண்ணஞ்செய்து
வடிவாக நீற்றியதை யெல்லாங்கட்டுந்
துலக்கமாம் ஜெயநீரா லெல்லாமாகுந்
துடியாகச் சரக்கெல்லாம் கட்டுமாமே. 128

ஆமேதான் தீக்ஷைவிதி ஐந்நூறுதன்னில்
அடைவாக வெள்ளிதான் செய்யச்சொல்லி
காமேதான் சொல்லிவிட்டோம் வாதாங்கத்தில்
நலமாகப் பொருளறிந்து வாதிமார்கள்
காமேதான் கருத்தாகச் செய்துகொள்வார்
கருத்தில்லார் செய்யவே மாட்டாரப்பா
பூமேவும் நிலந்தனிலே யிருக்குமட்டும்
பொறுமையா யிருந்துமே செய்துகொள்ளே. 129

சமஸ்தமும் வெள்ளியினாலாகவேண்டும்.
அதனால் முன்னேயதைச் செய்கவெனல்.

கொள்ளவே சகலமுந்தான் சித்தியாகுங்
கூறான சித்தியெல்லாந் தீயிலாக்க
கள்ளவே வெள்ளியென்று லெளிதோவல்ல
நலமாக மதியைத்தான் செய்துகொள்ளு
கள்ளமாய்த் திரியாதே நூலைப்பாரு
கருத்தாக நூலென்றால் கற்கக்கேளு
முன்னமாய்க் கேள்வியினால் சுடவும்வேண்டாம்
முடியுமட்டும் பார்த்திடவே வுழைத்துத்தேரே. 130
தேரவே கைபாக மாகச்செய்தால்
ஜெயமாகும் வேதையெல்லா மெளிதிலாகும்
ஆரவே பாகமது தப்பிப்போனால்
அடைவாக முடியுமட்டு முழைத்துப்பாரு
காரவே வரிசையாய்ச் செய்துகொள்ளு
கடினமாய் வாதமெல்லாங் கைக்குள்ளாகுந்
தாரவே வாதம்வந்தால் சொல்லவேண்டாந்
தடையறவே பொன்னாகுந் தன்மைபாரே. 131
பாருநீ சகலசால் திராவகமெல்லாம்
பதிவாகப் பார்த்துமே தேர்ந்துகொள்ளு



காருமே பாகமெல்லாந் தெளியும்பாரு
கருத்தான பாகமது எளிதிலாகுஞ்
சாருமே பாகம்வந்தால் எல்லாமாகுஞ்
சரிதையாய்த் திரியாதே சாரும்பாரு
காருமே ஞானம்வரும் யோகமாகுங்
கடிதென்று விட்டாக்கா லெல்லாம்போமே. 132
போகாமல் சாரத்தைக் கட்டிக்கொள்ளு
போக்கோடே ஜெயநீரும் வைத்துக்கொள்ளு
தாக்காமல் சொன்னதெல்லாஞ் சித்தியாகுந்
தடையறவே சித்திக்கும் வேதையாகும்
வாகாம அப்புமுதல் தாதுவெல்லாம்
வடிவாகச் சித்திக்கு முத்தியாகுந்
தேகாமல் சிந்தூர பாகமெல்லாந்
தேசத்தில் வாதமெல்லாம் ஜெயமுமாமே. 133

சாரக்கட்டு

ஆமேதானின்னமொரு சேதிகேளு
அடைவான சாரத்தின் குருவுதன்னை
நாமேதான் சொல்லுகிறேன் வாதாங்கத்தில்
நலமான பொருளாகும் நாட்டில்காணுஞ்
சீமேதான் சீனமது பலந்தான்பத்து
சிறப்பாகச் சவுக்காரக் குழம்பைவிட்டுக்
காமேதா னரைத்துவில்லை காயவைத்து
கருத்துறவே பெரியபுடம் போட்டுக்கொள்ளே. 134
போட்டுமே கடுஞ்சுண்ணம் சீனச்சுண்ணம்
போக்காகச் சவுக்காரக் குழம்பைவிட்டுத்
தீட்டுமே யரைத்துவில்லை காயவைத்துத்
திரமாக ஐந்துமுறை யிவ்விதந்தான்

வாட்டுமே கடுஞ்சுண்ண மாகும்பாரு
வடிவாக விச்சுண்ணம் வீரங்கூட்டி
நாட்டுமே சாரத்தின் மேலேபூசி
நலமாகப் புடம்போட்டு எடுத்திடாயே. 135
எடுத்திடவே சாரமது முத்துப்போல
இதமாகத் தந்தம்போ லிருக்கும்பாரு
அடுத்திடவே சாரத்தின் மகிமைசொல்ல
அரனாலு முடியாது மற்றோர்காணார்
கடுத்துமே சாரமது சுண்ணமானால்
கனமாகச் சரக்கெல்லாஞ் சுண்ணமாமே
விடுத்துமே யம்பரத்தை யகற்றியோடும்
விருதாவாய்ச் சொன்னாக்கா விசைவராதே. 136

நாகக்கட்டு.

இசைவாக நாகத்தை யிளுப்பையெண்ணெ
யிதமாக விருபத்தொன்றுசாய்த்துப்
பசையாக வுருக்கையிலே சாரமீயப்
பதைபதைத்துக் கட்டுமே நாகந்தானும்
விசையாகக் கட்டினதோர் நாகந்தன்னை
விருப்பமாய்த் தங்கத்தி லிடையேதாக்கு
இசையாகப் புட்டாகு மெடுத்துக் கொண்டு
இப்புரவாய் ரவிதனிலே நாறென்றீயே. 137
ஈயவே மாற்றுதான் பத்துமாகும்
இனிதாக சிவசொத்தை விற்றுமீயும்
மாயவே செலவுசெய்து யோகம்பாரு
மதிமயங்கித் திரியவே வேண்டாமையா
நாயமார் போலவே நடத்தைசெய்து
நலமாகக் குருசெய்து குளிகைசெய்து



வாயமா யுலகத்தி லிருந்து தேரு
வடிவாகச் சித்தியெல்லாம் வருதும்பாரே. 138
வருகுமே வாதத்தைக் கண்டபோதே
மதிமயங்கிக் கெர்ஜித்துத் திரியவேண்டாம்.
தருகுமே குரும்பாகச் செல்லவேண்டாம்
நாட்டியவான் போலவே யுடையவேண்டாம்
கருகுமே சிவஞான போதமாகக்
கருத்துவைத்தால் மோனமா யிருந்துகொள்ளு
உருகுமே உன்னைத்தான் தேவராக
உத்தமனே சொல்லுவா ருறுதிதானே. 139

எமது நூலி லின்னதைச் செய்துகொள்ளெனல்.

உறுதியா யென்னுடைய சாஸ்திரத்தில்
உண்மையாய் வாதாங்கந் தன்னில்தானும்
நறுதியாய் வெள்ளிவித்தை யுப்புச்சுண்ணம்
நலமான சாரத்தின் சுண்ணமோடு
வருதியா யாராய்ந்து பார்த்துப்பார்த்து
வடிவாக வுறுதியாய்ச் செய்துகொள்ளு
நறுதியாய் நாட்டிலே யெல்லாமாகும்
நாடாக்கா லொன்றுமில்லை நடத்தைபாரே. 140

வெள்ளிவேதையில் வெள்ளிசேர்க்க வேண்டுமெனல்.

பாரேநீ வெள்ளிமுறை தன்னைத்தானும்
பக்குவமாய்ப் பார்த்துமே தெரிந்துதேரு
கூரேநீ சகலமெல்லாஞ் சித்தியாகுங்
குணங்கெட்டுத் திரியாதே வேதைபாரு
நாரேநீ வெறுமரத்தில் புதையாவாறு
நலமாகப் பொருளிருந்தால் சித்தனாவாய்

காரேசீ யெல்லாமுஞ் சித்திக்குந்தான்
கருணைபெறப் பார்த்தவனை யோகியாமே. 141
யோகியர் யுலகத்தில் வாதம்பார்த்து
உத்தமனை ஜீவனத்தைச் செய்துகொண்டு
பாகியா யிருந்தாலே சித்திசித்தி
பதிவான குருவாலே கோடிகாலம்
யூகிநான் கண்டுமே பிடித்தேனப்பா
உற்றுணர்ந்தால் சித்தியா மொளிவுகாணும்
மோகியாய்த் திரிந்தாலே லாபமில்லை
முடியுமட்டுந் தேடியே யிருந்திடாயே. 142

நூற்பரம்பரை.

இருந்திடவே சிவன்சொல்ல தேவிகேட்க
இதமான தேவிநந் திக்குச்சொல்ல
நருந்திடவே நந்திதான் தன்வந்திரிக்கு
நாட்டவே தன்வந்திரி யகஸ்தியர்க்கு
வருந்திடவே யகஸ்தியரும் புலத்தியர்க்கு
வளமான புலத்தியருந் தேரருக்குக்
கருந்திடவே தேரர்தான் யூகிக்குச்சொல்ல
கருணைபெற யூகிதான் சொன்னவாறே. 143

திருசுச் சுண்ணம்.

வாரேது யென்றக்கால் சொல்லக்கேளு
வரிசையாய்ச் சீனத்தின் சுண்ணத்தோடே
பாரேது சூடனைத்தான் சேர்த்தரைத்துப்
பதிவான சவுக்காரக் குழம்பினாலே
காரேது அரைத்துருட்டி வில்லையாக்கிக்
கருணைபெற ரவிதனிலே காயப்போடு
தாரேது ஐந்துசுண்ணம் நடுவில்வைத்துத்
தப்பாமல் புடம்போடச் சுண்ணமாமே. 144



சுண்ணமாந் துருசதுவுஞ் சுண்ணமானால்
சூதத்தைக் கால்வாரி யடிக்கலாகும்
அன்னமாந் துருசினது சுண்ணந்தன்னை
அடைவான விராலியிலை பிழிந்துவிட்டு
வன்னமாஞ் சூதத்தை விட்டுக்காய்ச்சி
வடிவான சூதமது அட்டைபோலாம்
பின்னைவே நில்லையப்பா வாதந்தானும்
புராட்டில்லை யெல்லாமுஞ் சித்தியாமே. 145

சித்தியா மத்தங்கா யுள்ளேயிட்டுச்
சிறப்பாக நூறுபுடம் போட்டுத்தேடு
முத்தியாங் கரியிலிட் டுருக்கிப்பாரு
முனைவாக வயிரம்போ லாருகியாடும்
புத்தியாய்க் குகையிலிட்டு நன்குருக்கி
முனிவாகத் தங்கமது ஒன்றுபோடு
சத்தியாய் நாகமெடை தங்கத்துள்ளே
சதிராகப் போட்டிடவே களங்கமாமே. 146

களங்கமாம் கவலோகம் நூற்றுக்கொன்று
காட்டிடவே திசைமாற்று கருதிப்பாரு
பளங்கமா முப்புக்குங் காவிக்கப்பா
பதிவாக நிற்குமப்பா சொல்லக்கேளு
நளங்கமாம் பொன்னைவிற்றுச் செலவுசெய்து
நாதாந்தச் சற்குருவின் நாட்டம்பாரு
பளங்கமாம் வாசியோ கத்தைப்பாரு
பத்தியா யிருந்தாக்கால் சித்தியாமே. 147

சித்தியே யாகவென்றால் சொல்லக்கேளு
சிறப்பாகக் களங்கத்தை நொருக்கிக்கொண்டு
புத்தியாய்க் கெந்திதான் கூடச்சேர்த்து
பொதுவான புனைநீரா லரைத்துக்கொண்டு

நத்தியாங் காசியரங் குப்பிதன்னில்
நலமாக வைத்தெரிக்கச் சிந்தூரந்தான்
முத்தியாய்ப் பணவெடைதான் தேனிலுண்ணு
முடியுமட்டுங் காயமது இரும்பாம்பாரே. 148

இரும்பாகுந் தேகந்தான் கல்லைப்போலாம்
இருந்திடவே சமாதிக்கு ளிருக்கலாகும்
அரும்பாகும் நோயெல்லாந் தவிடேயாகும்
அடைவாகச் சீனமது கற்றாணுகும்
கரும்பாகும் வஜ்ஜிரமாந் தேகந்தானும்
நலமாக விருக்குமடா சிந்தூரந்தான்
இரும்பாகும் வேதமிது சொன்னபுத்தி
இதமான நவலோகம் பொன்னதாமே. 149

பொன்னாக வேண்டுமென்றால் சொல்லக்கேளு
போக்கோடே நவலோகம் நூற்றொன்று
நன்றாக ஈய்ந்திடவே மாற்றுப்பத்து
நானிலத்தில் கூறுகிறேன் தீட்சைதன்னில்
பின்னேவே நில்லையப்பா வாதமார்க்கம்
பிரபலமாய் நூலின்விதி யடுத்துப்பாரு
கன்னல்போ லிருக்குமே யுலகநீதி
கருதியே யெல்லாமுஞ் சித்தியாமே. 150

சித்தியே யாகவென்றால் சொல்லக்கேளு
சிறப்பாகச் சூதத்தைக் கட்டிக்கொள்ளு
முத்தியா யுருக்கியே கரியில்விட்டு
முனிவான தங்கமென்ற குருவைச்சேரு
நத்தியே சேர்த்தாலே யெல்லாமாகும்
நாடினால் சகலநூல் பார்த்துத்தேரு
கத்தியே திரியாதே யெல்லாமாகுங்
கருத்துவைத்து வாதாங்கம் பார்த்துக்கொள்ளே. 151



கொள்ளவே வேதாந்தச் சித்தாந்தத்தைக்
கொடிதாகப் பார்த்துமே நிலைநிறுத்து
விள்ளவே சகலமுஞ் சித்தியாகும்
வேதாந்தத் தின்பொருளை விளம்பலாகும்
துள்ளவே திரியாதே அனந்தம்பாடு
திடமாகப் பட்டாக்கால் தீரந்தோன்றுங்
கொள்ளவே விதியாளி காண்பானப்பா
கொடுமைசொன்னு வொன்றுமில்லை குறியுமாமே.

தங்கஞ்செய்ய இவை வேண்டுமெனல்.

குறியாக வேண்டுமென்றால் சொல்லக்கேளு
குறியான குருசைத்தான் நீற்றவேண்டும்
பொறியாகச் சூதத்தைக் கட்டவேண்டும்
போக்கோடே செம்பெல்லாந் தங்கமாகும்
பறிசேர்ந்து தங்கமது ஆகவேண்டும்
பதியவே இரசவாத மெல்லாங்கேட்கும்
நரிபோலத் திரியாமல் நூலைப்பாரு 153
நாடினால் வாதமது ஏவலாமே.

குருசுக்களங்கு.

ஏவலாஞ் சத்துவகை சொல்லக்கேளு
இதமான அரப்பொடிதான் பலமும்பத்து
காவலா யெலுமிச்சஞ் சாறுதன்னைக்
கனிவாக மிதக்கவே கூடவிட்டு
நாவலாய் மூன்றுநாள் வைத்துப்பாரு
நலமாகத் தெளிவைத்தா லடிப்பாரு
காவலாந் தெளிவிறுத்து வைத்துக்கொண்டு
தடையறவே பின்னமொன்று சாத்துவேனே. 154

சாத்துவேன் குருசுதான் பலமும்பத்து
சரியான கெந்தியது பலமுமுக்கால்

காத்துமே வீதிரண்டுங் கல்வத்தாட்டு
கணக்காக அயத்தெளிவா விருஜாயந்தான்
பாத்துமேவன் வில்லைதட்டி ரவியில்போடு
பதிவாகச் சுண்ணாம்பு உப்புநேரே
காத்துமேவன் கல்சமிட்டுப் புடமாய்ப்போடக்
கனிவாகக் கருப்பாக விருக்கும்பாரே. 155

இருக்குமே புடமிட்டுக் குகையிலிட்டு
இதமாக வுருக்கிடவே சத்துமாகும்
நருக்குமே சத்துஐந்து தாமேயூது
நலமான சத்துத்தான் சொல்லக்கேளு
கருக்குமே வெண்கலம்போல் நகருபாரு
கனமான சத்தையே யுருக்கினாலும்
மருக்கிடவே தங்கமொன்று நாகமொன்று
மனதாகச் சேர்த்திடவே சொல்லக்கேளே. 156

கேளுமே களங்காக விருக்கும்பாரு
கெடியாக நவலோக நூற்றொன்றிய
ஆளுமே மாற்றெட்டு ஆகும்பாரு
அடைவாக வுப்புக்கும் நிலைக்கும்பாரு
வாளுமே புத்தியினால் செய்துகொள்ளு
வடிவான பொருளறிந்தோன் ஞானியாவான்
காளுமே பொருளறியார்க் கொன்றுமில்லை
கடைகெட்ட வாதிமார் அலைவார்பாரே. 157

அலையாம லிருக்கவென்று அப்பைப்பாரு
அலைந்துமே வுலையாகத் துருசைப்பாரு
கலையாமல் சூதத்தைக் கட்டிப்பாரு
கருத்தான வாதமெல்லாம் எளிதிலாகும்
வலையாமல் வாதம்வந்தால் ஞானமாகும்
வருகாதே போனக்கா லுத்தமாடு



மலையாமல் சாஸ்திரத்தை மருவிநின்று
மனதுவைத்து நூலெல்லாம் பார்த்திடாயே. 158

பார்த்திட்டால் ரசவாத மேவலாகும்
பாராட்டா லொன்றுமில்லை பரமநூல்தான்
சேர்த்திட்டால் மட்டமாஞ் சோரவிட்டால்
செழிப்பில்லா ஒருவருடன் பேசவேண்டாம்
மூத்திட்டாள் மூத்தாள்தான் முகத்தில்நின்று
மூதேவியாய்த்திரிய வேண்டாமையோ
போர்த்திட்டா லேமமா மில்லாவிட்டால்
பூதலத்தி லில்லாமல் பிச்சைவாங்கே. 159

வாங்கியே திரியாமல் சொல்லக்கேளு
வடிவான துருசைநீ வைத்துக்கொள்ளு
தாங்கியே முக்காலுந் திறமாய்ப்பாரு
தடையில்லா வேதைதான் சரிதையாகும்
ஓங்கியே யொருவருடன் பேசவேண்டாம்
உலுத்தனவன் யோகியா யிருக்கவேண்டுந்
தூங்கியே திரியாமல் ஞானந்தன்னைத் 160
துப்புரவாய்ப் பார்த்துமே சொல்லிடாயே.

சொல்லிடவே ஞானந்தான் மிகவுமாகுஞ்
சொற்பெரிய பெரியோரை யடுத்துக்கேளு
நல்லிடவே வழிசொல்லார் பெருமையாக
நாதாந்த சாரமெல்லாம் நலமாகும்பார்
பொல்லிடவே பொறுமையாய் வாதம்பாரு
போக்கோடே சகலசித்து முடனேயாகும்
முல்லிடவே வெகுதூர மோடிப்போகும் 161
முடியாத பொருளெல்லாம் முடியுந்தானே.

தானென்ற வுலகத்தி லில்லாமர்க்குந்
தப்பாம லுண்டாகுந் தபசிக்குத்தான்

ஊனென்ற பொருளறிந்தால் வாதமாகும்
உண்டாட்டா லொன்றுமில்லை யுறுத்தமாகு
கானென்ற சாக்கறிந்தோன் வாதியாகுங்
காணாட்டால் உப்பறிந்தால் சிலதுமாச்சு
நானென்ற ஆணவத்தால் கெடவும்வேண்டாம்
நானிலத்தில் தொகையறிந்தால் நாடும்பாரே. 162

### உப்பால் சகலமு மாகுமெனல்.

நாடுமே உப்பாலே யெல்லாமாச்சு
நலமான பொருளாச்சு நன்மையாச்சு
கூடுமே தவமாச்சு தேகமாச்சு
குணமாச்சு மணமாச்சு குறிப்புமாச்சு
வாடுமே வீரந்தான் மிகவேயாச்சு
வழியோடே ஆறுதலம் வடிவுமாச்சு
நாடுமே யெல்லாமுஞ் சித்தியாச்சு
நாடினு லெல்லாமும் நாடிப்பாரே.

நாடிப்பார் இரசவாதஞ் செய்யவேதான்
நலமாக அரிதல்ல சொல்லக்கேளு
கூடிப்பார் தொகையறிந்தால் வாதமாச்சு
குணமாக அறியாட்டால் வாதம்போச்சு
தேடிப்பார் சேதியறி ஞானமாச்சு
தேடாட்டா லொன்றுமில்லை திருட்டுவாதி
மோடியே அறியவென்றால் வாதந்தன்னை
முடியுமட்டுந் துருசைசீ முயன்றுபாரே.

### வெடியுப்புத் திராவகம்.

முயன்றுபார் வெடியுப்பு புகைநீர்கேளு
முதலான வரமதனைச் சொல்வேன்பாரு
நயன்றுபார் வெடியுப்பு பலமும்பத்து
நலமான சீனமது பிருபத்தைந்து



கயன்றுபா ரிரண்டுமொன்றாய்ப் பொடித்துக்கொண்டு
காரியமாய் வாலையென்ற சட்டியிட்டுக்
கயன்றுபார் அடுப்பேற்றித் தீயைமூட்டு
காரணமாய் வெள்ளைநீர் வருதும்பாரே. 165

பாருமே வெள்ளையைத்தான் வீசிப்போடு
பதிவான சிவந்தநிறம் வருதும்பாரு
சேருமே பிதைப்பிடித்து வைத்துக்கொண்டு
சிறப்பாக விரண்டுசேர் கல்வத்திட்டு
காருமே பூநீர்தான் பலமும்போடு
நலமாகப் பொங்கியே கரைந்துநிற்கும்
வாருமே பீங்கானி விட்டுக்கேளு
வழியோடே சொல்லுகிறேன் வண்மைகேளே. 166

### துருசுச் சுண்ணம்.

வண்மையாந் துருசுதான் பலமிரண்டு
வாகாகக் கரிதனிலே வாட்டிப்போடு
திண்மையாய் வெள்ளையா யிருக்கும்பாரு
திறமான முந்நீரில் தோய்த்துப்போடு
வண்மையாய்ப் பக்ஷமொன்று தோய்த்துப்போடு
வகையான வீரமது சுண்ணம்நேரே
உண்மையாய்க் கூட்டியே புடைத்துப் போடு
உறுதியாய்த் துருசற்று நீறுமாமே. 167

நீறான நீரிலே விராவியிட்டு
நில்லக்கவே பிழிந்திடவே தண்ணீராகும்
வாரான தண்ணீரில் பாஷாணஞ்சேர்
வடிவான கௌரிமுதல் லிங்கங்கட்டுங்
காறான சூதமுதல் வீரஞ்சாகுங்
கடுசான பிரும்பையெல்லாம் உதிர்ஞ்சியாடும்

ஊதிடவே பக்குவமா யூதநீயும்
உத்தமனே வெண்மையா யூதிப்போடு
காதிடவே யெடுத்துமே பொடித்துக்கேளு
நலமாக வெடியுப்புச் சுண்ணமேலே
காதிடவே பொடியாப்பி யதன்மேற்கேளு
கனமான லிங்கமது பலமும் நான்கு
வாதிடவே கட்டியா யதின்மேல்வைத்து
வண்மையாய்த் துருசுவெள்ளை மேலேபோடே. 175

போட்டுமே யழுத்தியே யதின்மேற்கேளு
பொருந்தவே வெடியுப்புச் சுண்ணம்போடு
நாட்டுமே யழுத்தியே யடுப்பிலேற்றி
நலமாக இருஜாம மெரித்துவாருங்
காட்டுமே யுருகியது கட்டிப்போகுங்
கனமான லிங்கமது முழுக்கட்டப்பா
நீட்டுமே யம்பரத்தே செருக்கியோடுந்
திறமான கட்டெல்லாந் துருசுக்கட்டே 176

ஷடி லிங்கந் தங்கஞ்சேர்ந்த வேதை.

கட்டியே லிங்கந்தனை யெடுத்துக்கொண்டு
கனமான லிங்கமொடை தங்கஞ்சேர்த்து
கட்டியே யுருக்கிடவே யிரண்டுஞ்சேர்த்து
நலமாக வுருக்கியே மணிபோல்நிற்கும்
ஓட்டியே நவலோக மிருபாற்கொன்று
உண்மையாய்க் கொடுத்திடவே பத்[illegible]
பட்டியே போகாமல் புடமிறக்கும்
பதிவான தொழிலெல்லாந் துருசினட்டே. 177

பாஷாணங்கள் முதலியகட்டு.

துருசியால் பச்சையிலே வேதையாகுந்
[illegible]யான [illegible]க்கெல்லாம் பச்சைகட்டும்

வரிசையாய் லிங்கம்போல் வெள்ளைகட்டும்
வகையான வீரமுதல் கௌரிகட்டும்
நரிசையாய் வெள்ளையென்ற பாஷாணந்தான்
நலமாகக் குதிரையென்ற பாஷாணந்தான்
கரிசையா யிப்படியே யெல்லாங்கட்டும்
கனிவாக விப்படியே கட்டிக்கொள்ளே. 178

## கூடி வேதை.

கட்டியே நவலோகந் தன்னிலேதான்
கனிவாகப் பாய்ச்சிடவே வேதையாகும்
முட்டியே பச்சையிலே வேதையாகும்
முடிவான ஆட்டெல்லாந் தருகிறுட்டு
கட்டியே வாதந்தா னொளிதிலாகும்
நலமாக வெல்லாமுஞ் சித்தியாகும்
முட்டியே யோகமுதல் ஞானமாகும்
முடியுமட்டும் யோகமா முனிந்துபாரே. 179

முனிந்துமே நாதாக்கள் சொன்னசொல்லை
முனிவாகப் பார்த்துமே யுழைத்துத்தேறு
கனிந்துமே பாராமல் உழைக்கவேண்டாங்
கதிபெறவே சரக்கிலே யுழைத்தாடு
கனிந்துமே உழைத்தாலே யெல்லாமாகும்
நாதாக்களாடினார் பச்சையாக
வனிந்துமே பாகமா யுழைத்துத்தேறு
வடிவான பொருளறிந்தால் வாதிதானே. 180

## வாதிகள் மடமை.

தானென்ற வாதிதான் கட்டமொர்க்கர்
தடையறவே தருசைத்தான் புடத்தில்வைத்து
வானென்ற கரியாகப் போனகாலே
வகையாகக் கெட்டுமே அலைவான்பாரு

நானென்ற ஆணவத்தால் கெட்டேனென்று
நலமாக அலைவார்கள் புத்தியிலலோர்
பானென்ற ஆயுதலாய்க் காணமற்றான்
பதிகெட்டு அலைந்துமே திரிவார்பாரே. 181

பச்சைத்துருசால் சரக்கெல்லாங் கட்டவெனல்.

திரியவே வேண்டுமென்றால் அநாசித்தானுங்
அடியாகப் பச்சையாய்க் கரியில்வைத்து
கரியவே சட்டியிட்டுச் சரக்குவைத்து
நலமாக வெரித்திடவே கட்டிப்போகும்
பரியவே கட்டினதோர் சரக்கிலேலே
பதிவாக வேதைபார் கோடாகோடி
அரியவே யெல்லாமுஞ் சித்தியாகுந்
அடிவெல்லாந் தருசினது ஆட்டந்தானே. 182
ஆட்டான வெள்ளியினால் வாதஞ்சட்டால்
அறியாத போய்விடுமே கரிபோலாகும்
கிட்டான பாகமாய்ச் சுடவும்வேண்டும்
நேரான கைமுறையுங் குருவும்வேண்டும்
பாட்டாலே பாதங்கள் தன்னில்தானும்
பரிவாகத் தருசுபச்சை கட்டும்மார்க்கம்
வட்டான பொருளாகச் சொல்லிவிட்டேன்
உத்தமனே பொருளறிய வேண்டுந்தானே. 183

தானென்ற வுலகுதனில் வாதிமார்கள்
தடையறவே கட்டுவகை தெரியாதாலே
வனென்ற சரக்குத்தான் கரியாய்ப்போகும்
உற்றுமே பார்த்துத்தான் சொன்னாலே
நானென்ற ஆணவத்தால் கெட்டோமென்று
நலமாக வேங்கியே அழுவார்பாரு

கானென்ற கடைமருந்தி லில்லையென்று
 காரியமாய்ச் சொல்லுவா ருலுத்தமாடே. 184

மாட்டைப்போ லலைந்துமே மதிமயங்கி
 மடையரப்பா கெட்டுமே கேடுகெட்டு
காட்டவே மூலிகையைப் பிடுங்கிப்பார்த்துக்
 கடைகெட்டுத் திரிவார்க ளுலகமன்னர்
கூட்டிலே அடைந்ததொரு கிளியைப்போல
 குடிகெடுத்துத் திரிந்துமே புலஸ்வாதி
கீட்டுமே சொன்னதெல்லாம் நிஜமதாகும்
 நிச்சயமாய்ப் பார்த்துநீ பறிந்திடாயே. 185

அறியவே துருசைநீ வைத்துத்தேறு
 அடைவாகப் பொன்னாகும் வேதையாகும்
செரியவே துருசானால் பொன்னுமாகும்
 நிலவரமாய்ப் பொன்னாகு மெளிதில்வேதை
பிரியவே சொல்லியே திரிந்தாலென்ன
 புரட்டாகச் சொன்னதினா லென்னலாபங்
கரியவே சொன்னதெல்லாம் நிசமதாகுங்
 கனிவாகப் பார்த்துணரச் சித்தனாமே. 186

சித்தனால் சித்தனென்றால் சாஸ்திரத்தைச்
 சிறப்பாகப் பார்த்துமே சோதித்தேறிப்
பத்தனா யிருந்திடுவான் வைபாகத்தைப்
 பார்த்துமே சோதித்துப் பரிவாய்ச்செய்து
முத்திபெறப் பாகத்தைக் காண்பானப்பா
 மூதண்ட மாட்டவித்த துருத்தானுஞ்
சித்தியாய்ச் செய்திடுவான் சித்திக்குந்தான்
 திறமாக யோகசித்தி பார்ப்பான்பாரே. 187

பார்க்கவே திருகுரு இதுதானப்பா
பதிவான பச்சையிலே வேதையாகுங்
கார்க்கவே பச்சையென்று வெளிதோதாவல்ல
கனமான பச்சையிலே முடியும்வாதம்
ஏர்க்கவே பச்சையென்று மயங்கவேண்டாம்
இன்பமாய்ப் பச்சையல்லோ பொன்னதாச்சு
வார்க்கவே யெல்லாந்தான் பாகத்தாலே
வண்மையாய் விதியறிக்க வண்மைதானே. 188

கல்லுப்புக் கட்ட - சமுத்திரநீரெரிக்க.

இது சுத்த ஜலமென்றும் புகை நீரென்றும் பெயர்.

வண்மையாங் கல்லுப்புக் கட்டுமார்க்கம்
வகையாக வென்னுடைய நூலில்தானும்
உண்மையாய்ச் சொல்லிவிட்டே னூலில்தானும்
உற்றுமே வாதாங்க மொத்துப்பாரு
திண்மையாங் கடல்நீரைக் கொண்டுவந்து
திறமாக வாலேயென்ற சட்டிமூடிக்
கண்மையாய்த் தீயெரிக்கப் புகைநீராகுங்
கருத்தாகச் சுத்தஜலம் போலாங்காணே. 189

கல்லுப்புக்கட்டு.

காருமே கல்லுப்பு படிதானெட்டு
கருத்தாகக் கடல்நீர்த்திரா வகமும்பத்து
வாருமே கடல்நுரைகண் ணைப்பிரண்டு
வகையாக விரண்டுமொன்றாய்க் கலக்கிக்கொண்டு
சேருமே ஓட்டிலே காச்சிப்போடு
சிறப்பாக வுப்பெடுத்து அகப்பையாலே
சாருமே அணிதனிலே போட்டுக்கட்டு
சரியாகப் பந்துபோல் கட்டிடாயே. 190

கட்டியே அனல்தனிலே போட்டுக்காய்ச்சிக்
 கனமாகக் காய்ச்சியே கெட்டியாக்கு
இட்டியே அதன்பேரில் கவசங்கேளு
 இடியாக இருசியது சேருமொன்று
முட்டியே கடல்நுரைதான் சேருமொன்று
 முதண்ட குப்பைமேனி சேருமொன்று
கட்டியே யிவைமூன்று மரைத்துக்கொண்டு 191
 கலமாகக் கல்லுப்பு மேலேகட்டே.

கட்டியே பத்தெருவில் புடத்தைப்போடு
 கனிவாக வெடுத்துமே சொல்லக்கேளு
முட்டியே முன்போலக் கல்லுப்புக்கு
 முடிவாகப் பழயபடி கவசம்போடு
செட்டியே பத்தெருவில் புடத்தைப்போடு
 சிறப்பாக இப்படியே மூன்றுபோடு
வெட்டியே மேல்கவசந் தள்ளிப்போடு 192
 வகையாகக் கல்லுப்பைக் கல்லைநீட்டே.

கல்லத்தி விட்டுமே சொல்லக்கேளு
 கனமாகக் கட்டினதோர் உப்புநேரே
கல்லமாம் வெள்ளைபொன்ற பாஷாணஞ்சேர்
 கனமாக முன்னீரா லரைத்துக்கட்டு
கல்லமா புண்டைபண்ணிக் காயவைத்துக்
 கடிபினதன் மீதுகடல் நுரையுஞ்சினம்
கல்லமாய் மேனியிலே மூன்றரைத்து 193
 கருப்பமாய்க் கல்லுப்பின் மேலேகட்டே.

கட்டியே யிப்படிக்குப் புடமிரண்டு
 கனிவாகப் போட்டெடுக்கத் தங்கம்போலாக்
கெட்டியே வயிரம்போல் திறமிக்கானுக்
 தேசத்தி லில்லாதே கிச்சுவுப்பு

பட்டியே குகையிலிட் டுருக்கித்திரு
    பதிவாக வைரம்போ லாகும்பாரு
முட்டியே யிதுபோகும் போக்குத்தானும்
    முனிவற்கும் நாவினால் சொல்லப்போமே. 194

சொல்லவே யிவ்வுப்புக் கரியில்நின்று
    சுகமாக வுருகுமது குடிக்காதப்பா
மெல்லவே யிவ்வுப்புக் கடுமைமெத்த
    மேதினியில் சித்தர்தாம் மறைத்தார்பாரு
நல்லவே வாதாங்கந் தன்னில்தானும்
    நலமாக யிவ்வுப்பி னுட்டஞ்சொன்னேன்
பொல்லாமை யில்லாம லிந்தவுப்பைப்
    பொறுமையாய்ச் செய்திடவே சித்தியாமே. 195

சித்தியே யாகுமென்றால் கல்லுப்போடே
    சிறப்பாக வெள்ளைப்பா ஷாணஞ்சேரு
முத்தியாய்க் கல்லுப்பு உருகியாடும்
    மூர்க்கமாம் வேதையிது முடிவுகாணும்
நத்தியாய்ப் பாஷாணஞ் சேராவிட்டால்
    நலமாகச் சித்தியில்லை நாட்டோளர்க்குச்
சத்தியமாய்ச் சொல்லிவிட்டே னுலகினுள்ளே
    காட்டிகவான் கண்டுகொள்வான் தரணிதானே. 196

தரணியாங் கல்லுப்புச் சத்துதன்னைத்
    தகைபெறவே யுருக்கியே கரியிலிட்டுப்
பரணியா மாடாதே போறுற்கேளு
    பதிவாகத் திரும்பவுந்தா னுருக்கியாட்டு
கரணியாம் வைரம்போல் கம்மாதானில்
    காரணமாம் விதங்களினி சொல்வேன்பாரு
தரணியாம் வைரம்போ லுருகிற்றுனல்
    சரியான விதமினித்தான் சொல்லக்கேளே. 197

கேளுமே வைரமுமா முப்புச்சத்துக்
கெடியாகப் பலம்நான்கு உருக்கிக்கொண்டு
பாளுமே போகாமல் தங்கத்தாயைப்
பதிவாக நான்கிலொன்று சேர்த்துருக்கி
வாளுமே தங்கமெடை நாகஞ்சேரு
வடிவாகச் சேர்ந்தொன்றாய்க் களங்கமாகும்
நாளுமே நவலோகம் நாற்றுக்குத்தான்
நன்மையா யுருக்கியொன்று ஈந்திடாயே. 198

ஈய்ந்திடவே உட்கொண்டு சுழித்துவாங்கி
இதமாக வுள்ளேதான் சென்றுதேறிப்
பாய்ந்திடவே பத்தரைதான் மாற்றுக்காணும்
பதிவான வுப்புக்குங் காவிக்கப்பா
வாய்த்திடவே வோடாது கடையில்விற்று
வழியோடே சென்றறிந்து யோகம்பாரு
காய்ந்திடவே கனகமது கண்டபோதே
கருத்தாக வெண்ணியே வாழ்ந்திடாயே. 199

வாழ்ந்திடவே வாதந்தா னெளிதோவல்ல
வகையான மவுனமா யிருந்துகொண்டு
தாழ்ந்திடவே புத்திதான் தணியவேண்டும்
தணியாமல் மனமுழுதான் துணிந்துபேசக்
காழ்ந்திடவே துணிந்தக்கா லன்னையோகோ
கருத்தாகக் கொன்றுமே போடுவார்பார்
மாழ்ந்திடவே கெட்டபுத்தி யாய்நடந்து
வடிவுகெட்டுத் திரியாதே வகைதான்பாரே. 200

கல்லுப்பும் பாஷாணமுஞ் சேர்ந்த கட்டு.

பாருமே கல்லுப்பைக் கட்டிக்கொண்டு
பதிவாக வெள்ளைப்பா ஷாணமோடே

சேருமே சேர்த்துநீ புடத்தைப்போட்டால்
  சிறப்பாகக் கல்லுப்பு ஈயம்போல
வேருமே யுருகியது சத்துமாகும்
  வெண்மையாய்ப் பளிங்குபோ லுடையும்பாரு
சாருமே யிப்படிக்குச் செய்யவேண்டுஞ்
  சரியான கல்லுப்பு மணியுமாமே. 201

மணியான கல்லுப்பு மணியைக்கோத்து
  மதிபெருகத் தாவடமாய்க் கோத்துப்போடு
பிணியான நோயெல்லாந் தவிடேயாகும்
  புரட்டில்லா ஐந்துமெட் டெழுத்துமோது
கணியாகத் தேரியவன் முன்னிற்பான்பார்
  கருத்தாக வாசியது இறுகும்பாரு
நணியாக வாதமொடு யோகஞ்சித்தி
  நாடுமே சகலமுந்தான் சித்தியாமே. 202

சித்தியா யாக வென்றால் கல்லுப்பைத்தான்
  திரமாக வுருக்கியே சத்தெடுத்து
முத்தியாய்ச் சத்தோடே தங்கஞ்சேரு
  முனிவான நாகத்தைக் கூடச்சேரு
பத்தியாய் வாதமது எல்லாமாகும்
  பதிவுபெறச் சத்தியமாய்ச் சொல்லிப்போட்டேன்
முத்திபெற எல்லாமுஞ் சித்தியாகும்
  மூவுலகு சித்தியெல்லா முடனேபாரே. 203

சகலரோகத்திற்குங் காட்டாமணக்கெண்ணெய்.

பாருமே யெண்ணெ யொன்று சொல்லக்கேளு
  பதிவான காட்டா மணக்குக் கொட்டை
சாருமே ஆற்றியே படிநால்தானுஞ்
  சரியான இளநீரு கூடநேரே

வாருமே விட்டுமே காய்ச்சிக்கொள்ளு
  வடிவான மண்டியது தெளிந்துபோகும்
காருமே யெண்ணெய்தா னெடுத்துவைத்துக்
  கனிவாகச் செய்திநெற் பாகங்கேளே. 204

கேளுமே வல்லாரை புளியாரைத்தான்
  கெடியான கையாலும் நிலையாவாரை
பாளுமே யிவைநான்கும் புட்டவித்துப்
  பதிவாகப் பிழிந்துமே சொல்லக்கேளு
நாளுமே யெண்ணெயெடை ஊற்றியும்
  நலமாக மூன்றுநாள் வைத்துக்கொண்டு
வாளுமே கடுக்காயுஞ் சிவதைவேரும்
  வழியாக கடுகுரோ கணியுங்கூட்டே. 205

கூட்டியேதான் றிக்காய்வா லுழுவையோடு
  குணமான கொத்தமல்லி தானுஞ்சேர்த்து
தாட்டியே நெல்லிமுள்ளி தன்னோடுந்தான்
  தயவாக வகைக்கொன்று நிறுத்துக்கொண்டு
பாட்டியே மூன்றுடனே கிராம்புசிங்கி
  பதிவாக வகைக்கொன்று இடித்துப்போடு
நாட்டியே முன்னெண்ணெய் தன்னில்விட்டு
  நலமாக வெரிபதத்தைப் பார்த்துக்கொள்ளே. 206

பார்த்துமே தானெடுத்துக் காண்டிவீதம்
  பதிவாக வுண்டுவாத் தினந்தான்மூன்று
சேர்த்துமே நோயெல்லாந் தவிடேபாதந்
  தேசத்தில் போனனு மித்தனண்ணெய்
கார்த்துமே வருகாது நோவுபோகும்
  கனிவாகக் குஷ்டமுதல் காணுதோடும்
நார்த்துமே மேகமெல்லாம் மாண்டுபோகும்
  நலமான எண்ணெயிது நாடிப்பாரே. 207

நாடியே யெண்ணெயது கொள்ளும்போது
நலமான சர்க்கரைதான் போட்டேயுண்ணு
வீடியே வாதமெண் பத்துநான்கும்
விருப்பமாய்ப் பித்தமெல்லா மோடிப்போகும்
நாடியே அண்டயா தங்கள்தீரும்
நலமான சிலேத்துமமு நாடாதோடுங்
கோடியே க்ஷயகாசம் ஈளைபோகுங்
குணமான விப்புருதி யோடுந்தானே. 208

ஓடுமே ரத்தபித்த காசத்தோடு
உத்தமனே பவுத்ரமு மகோ தரமும்போகும்
ஆடுமே பித்தமகோ தரமும்போகும்
அடைவான வியாதியெல்லாங் காணுதோடும்
பாடுமே பத்தியமா யுண்டுதேறு
பக்குவமா யுண்டாக்கால் பலனுமாகும்
எடுமே யிதைவிற்றுச் செலவுசெய்து
எத்தேச காலமெல்லா மிருந்துதேறே. 209

தேறவே ஜீவனத்துக் கெண்ணெய் பண்ணிச்
சிறப்பாகக் கைபாக மாகச்செய்து
வாறவே யெண்ணெய்பண்ணி விற்றுக்கொண்டு
வடிவாக வாதந்தான் மிகவும் பண்ணு
நாறவே யிவ்வெண்ணெய் சகலத்திற்கும்
நாடினால் வியாதியெல்லாம் பொடியாய்ப்போகும்
பாறவே யிதைவிட்டு வைத்தியோர்கள்
பதிவான கொட்டையா மணக்குளெண்ணெய்
வாறவே யெண்ணெய்தான் செய்துவிற்று
வியாதியெல்லாந் தீராதே போனதாலே
காறவே சாஸ்திரந்தான் பொய்யே யென்பார்
கதியில்லாற் கொன்றுயில்லை கணக்குமாமே. 210

கணக்காக வென்னுடைய தீட்சைதன்னில்
கனிவாகச் செப்பிவிட்டே னுலகத்தோற்குப்
பிணக்காகச் சாஸ்திரத்தில் பொய்யோசொன்னேன்
பெரிதாக வுலகத்தில் வாதிமார்கள்
தணக்காக வாதாங்கந் தன்னில்சொன்னேன்
தன்மையா யிவ்விரண்டு மொத்துப்பார்த்து
வணக்காகச் செய்திட்டு வுலகந்தன்னில் 211
வண்மையாய் வாழலாம் வேதைதானே.

தானென்ற எண்ணைப்தான் சொன்னமார்க்கந்
தாயான ஈஸ்வரிக்கும் அகஸ்தியற்கும்
பானென்ற குருவிற்கும் பொய்போசென்னேன்
மகத்தான வுபதேசங் கேட்டுத்தேறி
வானென்ற வுலகத்தில் பிழைக்கவேண்டி
வடிவான வுலகத்தில் சொன்னேன்பாலுக்
தேனென்ற தேரினைப் பாதம்போற்றித் 212
தேறியே வுலகத்தில் சொன்னேன்பானே.

சொன்னதொரு வாதாங்க முந்நூற்றுள்ளே
சூட்டினேன் வெள்ளிமுறை பொன்னின்மார்க்கம்
நன்னயமாயச் சொல்லிவிட்டேன் பாகமாக
நலமாக யோகமுதல் கிரியைமார்க்கம்
இந்நிலத்தில் வாதிக்குச் சொன்னேன்புத்தி
இதமாகச் சொல்லிவிட்டே னுலகத்துள்ளே
கன்னல்போ லிருந்தாலே வாதமாகுங் 213
கனகமது பிறக்குமது கருத்தால்தானே.

## வெள்ளிவித்தை.

கருத்தாக வெள்ளையென்ற பதங்கங்கேளு
கனிவெள்ளைப் பாஷாணங் குதிரைப்பல்லும்

வருத்தாகத் தாளகமும் பூநீர்வீரம்
  வடிவான சாரமொடு துருசுசீனம்
நருத்தாகக் கல்லுப்பு வெடியுங்கௌரீ
  நலமான வெள்ளையப் ரேகத்தோடு
நருத்தாக நாகமொடு வெள்ளீயந்தான்
  நலமாக விவையெல்லா மொக்கச்சேரே. 214

சேர்த்துமே யெருக்கம்பால் தன்னிலாட்டிச்
  இதமாக அரைஆறு ஜாமமாட்டு
பார்த்துமே வெள்ளியால் கின்னப்பண்ணி
  பக்குவமா யதற்குள்ளே யிட்டுக்கேளு
நார்த்துமே மேல்மூடி வெள்ளியாலே
  நலமாகச் சீலைசெய்து சொல்லக்கேளு
வார்த்துமே முக்கவரில் கின்னிவைத்து
  வடிவாக விளக்கேற்றி எரித்திடாயே. 215

எரித்திடவே யகல்வைத்துத் திரியேபோடு
  இதமாக முன்னகலில் வார்த்தெண்ணெய்
நரித்திடவே மூன்றுநா ளவியாதேற்று
  நலமாகப் பதங்கமது ஏறப்பாரு
கருத்திடவே பதங்கமெல்லா மெடுத்துவாங்கிக்
  கனிவாக வெள்ளெருக்கம் பாலிலாட்டி
வார்த்திடவே வுண்டைபண்ணிக் காயப்போடு
  வடிவாக மேல்கவசஞ் சொல்லுக்கேளே. 216

சொல்லவே அப்ரேகம் பலமுன்றுக்கு
  சொற்பெரிய வீரமதுபலமுங் கால்தான்
மெல்லவே அரைத்துமே பாணியாலே
  மேன்மையா யரைக்கவே சீதமாகும்
நல்லவே முன்பதங்கம் மேலேகட்டி
  நலமாக ரவியிலிடு தினந்தானேழு.

வல்லவே புடமிட்டு எடுத்துப்பாரு
வைரம்போல் தானிருக்கும் பஸ்பந்தானே. 217

தானென்ற பஸ்பத்தைக் கரியில்வைத்துத்
தாட்டிகமா யுருக்கிடவே யுருகும்போது
வானென்ற வெள்ளியென்ற சுபஞ்சேரு
வகையான சாரமிட் டுருக்கிச்சாய்க்க
நானென்ற வெண்மையா யுருகும்பாரு
நலமாகச் சூதத்தை யெடையேசேரு
கானென்ற இர்தளடை வெள்ளைபோடு
கனிவாக முலைப்பாலில் ஜாமமாட்டே. 218

ஆட்டியே ரவிதனிலே காயவைத்து
அடைவாக மூன்கவசம் மேலேகட்டித்
தாட்டிகமாய்ப் புடம்போட்டு எடுத்துக்கொண்டு
தடையறவே வெள்ளிசெம்பு நூற்றுக்கொன்று
வாட்டியே யுருக்கியே கொடுத்தாயானால்
வகையாக இருபத்து ஐந்துமாற்று
காட்டியே சூதவெள்ளி யாகும்பாரு
நலமாக லோகமெல்லாம் வெள்ளியாமே. 219

ஆமேதான் வாதநிலை தேக்கித்தள்ளி
அம்பாளைத் தெரிசித்து அப்பால்மேவி
நாமேதான் சிலம்பொலியின் நாதங்கண்டு
நலமான சிலம்போசை நடனங்கண்டு
வாமேதான் சிவசோத்தைப் பதுமைபோல
வடிவாகச் செய்துமே வடிவம்பார்த்துக்
காமேதான் சித்தரவர் மறைத்தவெள்ளி
கனிவான வாதாங்கள் கணக்கிலாச்சே. 220

ஆச்சென்ற வெள்ளிமுறை யடுத்தப்பாரு
ஆகார பிறகுரு முன்னேபாரு

காச்சென்ற கனலதுதா னேமாட்டா
கைக்கடங்காத் தொழிலிதுதான் கனகமாகும்
நீச்சென்ற போதத்தை நம்பிப்பாரு
நிலைபான குருபதத்தை நேர்ந்துபாரு
வாச்சென்ற ஞானத்தின் வெள்ளியாதி
வடிவாக வெல்லாமுஞ் சித்தியாமே. 22
சித்தியா யாகவென்றால் வெள்ளிபாரு
சிறப்பான வெள்ளிவித்தை க்ஷணத்திலாகும்
முத்தியா யாகவென்றால் பொன்னைப்பாரு
முடிவாகச் சித்தாலால் முடிந்துபோகும்
பத்தியா யாகவென்றால் செம்புபாரு
பதிவாக வெல்லாமுஞ் சித்தியாகும்
நத்தியா யாகவென்றால் நலமதாகும்
நலமான யோகசித்தி நலமதாமே. 22

வெள்ளிசெய்து விற்று விலைபெயில்லை யதைத்
தங்கஞ் செய்யெனல்.

நலமாக வெள்ளிதனைச் சரியாய்ப்பண்ணி
நாடியே விற்றுமே செலவுசெய்து
பலமாகச் செலவுசெய்து யோகம்பாரு
பெருமையாய் ஞானத்தின் வழியிற்சேரு
கலமாக விருந்தாக்கா லொன்றுமில்லை
கனகமது ஆனல்சொல் சித்தியாகும்
வலமான பொருளாதிக்கேதான் வாதியாகும்
வடிவாக அறியாட்டால் பேதையாமே. 22
பேதையென்று நினைவெடுத்துத் திரியவேண்டாம்
பேய்போல வலையாமல் நம்பிப்பாரு
காதையா லலைந்தாக்கா லெல்லாங்காண்பீர்
கருத்தாக வலையாம லிருந்தாற்கேளு

வாதையே படவேண்டாம் உலகுதன்னில்
வடிவான வெள்ளிதான் வடிவுபார்த்து
தீதையாம் பொருளறியார் வாதிமார்கள்
நிச்சயமா யறிவார்கள் நிஜங்கண்டோரே. 224

நிஜமாகச் சுடும்வாதி அறியமாட்டார்
நீணிலத்தில் பொய்சொல்வார் நிஜமதாக
வசமாக வாதம்வரும் என்றுசொல்வார்
வகையறியாத் திருடரப்பா திருட்டுவாதி
பிசகாதே சொல்வார்கள் பேச்சைக்காணார்
புரட்டாகச் சொன்னதினால் பலனுமில்லை
பசையான நூலறிந்தோர் படிக்கவேண்டும் 225
பதிவான முத்திசித்தி பலனுமாமே.

ஆமேதான் பொருளறியார் ரவியைக்காணார்
அழும்பாகச் சொல்லிடுவ ரசடர்தாமும்
நாமேதான் திருடர்தா நிஜத்தைக்காணார்
நடுவிலே சட்டுமே ரவிப்பான்மட்டி
பூமேதா னுலகத்தில் பொய்கள்சொல்வார்
போக்கோடே ஆறுதலங் காணமாட்டார்
பாமேவும் பொதிகைமுனி நானேயென்பார் 226
பதிவான விதியறியார் பதிவுள்ளோரே.

வெள்ளி வித்தை.

உள்ளாக வேண்டுமென்று வின்னமொன்று
உண்மையாய் வெள்ளிவித்தை யுறுதிகேளு
கள்ளமாய்ச் சொல்லவில்லை வெளியாய்ச் சொன்னேன்
கணக்கறிந்தால் பலனாகும் வெள்ளிதானுக்
துள்ளவே கைம்முறையைப் பார்த்துத்தேறு
துடியான யோகமுதல் சித்தியாகும்

வள்ளலார் சொல்லிவிட்ட வெள்ளியைத்தான்
வகையாகச் சொல்லுகிறேன் வகையைக்கேளே. 227

வகையாகச் சொல்லுகிறே னுற்றுக்கேளு
வண்மைபெற வெள்ளையென்ற பாஷாணந்தான்
தொகையாக நவச்சார மரைச்சேர்கூட்டித்
துடியாக அதைப்பொடித்துப் பாணையிட்டு
நகையாக மேல்மூடிச் சீலைசெய்து
நலமாக வெரித்திடவே வுயரவேறும்
அகையாக வெடுத்துமே வைத்துக்கொண்டு
அடைவாகச் சொல்லுகிறே னுண்மைகேளே. 228

ஆண்மையா யிரதமது சேரொவொன்று
அடைவாகக் கல்லுப்பி லெரிக்கவேறுந்
தாண்மையாய்ச் சூத்பற்பம் வெள்ளைபாஷாணந்
தடையாக வீதிரண்டுஞ் சேர்த்தரைத்து
வாண்மையாய் வெள்ளெருக்கம் பாலிலாட்டி
வகையாக வுண்டைபண்ணிச் சொல்லக்கேளு
காண்மையா யப்ரேகங் கவசம்போட்டுக்
கணக்காகப் புடமிட்டு எடுத்துக்கொள்ளே. 229

எடுத்துமே பின்புதான் சொல்லக்கேளு
இதமான வெள்ளியஞ் சேரொவொன்று
நடுத்துமே அரப்பொடியுஞ் சேரொவொன்று
நலமான வெள்ளைப்பா ஷாணங்காலாய்
விடுத்துமே சேர்த்துருக்க உருகும்பாரு
விதமாக வெண்காரம் பாதிசேரு
கடுத்துமே விரண்டுதரம் உருக்கிடப்பா
கனமான இரும்புதான் வெளிபிற்போமே. 23

போமேதான் சாரமது இடையேசேரு
போக்கோடே அரைத்திட்டு வில்லையாக்கி

ஆமேதான் புடம்போட்டு உருக்கிப்பாரு
அடைவாகக் கல்மிஷங்க ளற்றுப்போகும்
காமேதான் கட்டிவெள்ளிப் போலேயாகும்
நலமாக இவ்வெள்ளி காண்கிலொன்று
தாமேதான் முன்குருவைக் கொடுத்துப்பாரு 231
தப்பாது ரசிதமது பத்துமாமே.

## இன்னது விட்டால் வெள்ளியாகா தெனல்.

பத்தான சாரத்தை விட்டால்கேளு
பதிவான வெள்ளிதா னாகமாட்டா
சித்தான பிரும்புதா னீபத்தோடே
சேராட்டா லியமது சீர்தான்வாங்கா
முத்தான இரதமது சேரப்போனால்
முடிவான வெள்ளியம் சீர்தான்வாங்கா
கத்தான வெல்லாந்தான் சேர்ந்தால்சித்தி 232
காட்டிலே வெள்ளிவித்தை நலமதாமே.

நலமான சித்திவெல்லா மேதாலாச்சு
நன்னயமாம் வாதவித்தை தன்னாலாச்சு
பலமான வெள்ளிதா னேதாலாச்சு
பிரபலமாய் வெள்ளைப்பா ஷாணத்தாலாச்சு
உலமான கிரியையொடு ஞானத்தாலே
உற்றுணர்ந்து சித்திக்க வெல்லாமாச்சு
கலமான கலனறிந்தால் சூக்ஷமாச்சு 233
காரியத்தை யறியாட்டா லெல்லாம்போச்சே.

போச்சென்று எண்ணாதே வெள்ளிதன்னைப்
போக்கோடே செய்துமே பூண்டுபாரு
நீச்சென்று எண்ணாதே வெள்ளிவேலை
நிமிஷத்தி லாகுமே நிலைக்குப்பாரு

ஆச்சென்ற மஹிபதிகள் முன்னேசொன்னார்
அதனாலே வெள்ளிதான் மறைந்துபோச்சு
மூச்சென்ற தனுவடங்கி ஜடமில்லாது
முனையான அரியறிந்தால் மூர்க்கமாமே. 234

மூர்க்கமாம் ரஜிதத்தை முன்னேபாரு
மூவுலக மெச்சுமே ஞானமாகும்
ஆர்க்கமா முன்னுடைய வெள்ளிதன்னை
அடைவாகச் செய்தாக்கால் சித்திசித்தி
மார்க்கமாஞ் சித்திதா னிரம்பவுண்டு
மதயானை வெள்ளிய நீரைவாங்கில்
ஊக்கமா மெல்லாமுஞ் சித்தியாச்சு
ஓகோகோ சித்திதரும் ஞானவானே. 235

ஞானவா னென்றுமொழி சொல்லேதுக்கு
நலமான வெள்ளிவித்தை தெரிந்ததாலே
கானகத்தில் திரிந்தலைந்து திரிதல்வேண்டாங்
கருணைவைத்தால் சித்தியாங் கண்டுபாரு
ஊனமாய்த் திரிந்தலைந்தால் லாபமேது
உற்றுணர்ந்து பாராட்டால் சித்தியில்லை
வானகமும் விண்ணகமு முன்னதாச்சு
வகையான வெள்ளிவித்தை பார்த்திடாயே. 236

## வெள்ளிவித்தை அகஸ்தியர் முறை.

பார்த்திடவே பின்னொன்று பகரக்கேளு
பதிவான வெள்ளியது வெளிதிலாகக்
காத்திடவே யேழையாம் வாதிதானுங்
கருத்தாகச் செய்திடுவா ருலகுதன்னில்
நாத்திட்டு நட்டாற்போல் வேதையாகும்
நலமான சித்தியாம் நாட்டுள்ளோர்க்கு

வார்த்திட்ட விக்கிரகம் போலேபாகும்
வடிவான சித்திபெல்லா மெளிதிலாமே. 237

எளிதாக வின்னமொரு வெள்ளிவித்தை
இன்பமா யகத்தியரு மெனக்குச்சொன்னார்
அளிவான மனத்தினால் பார்க்கவேண்டாம்
அடைவான சிந்தையினால் அடர்ந்துபாரு
துளிவான துரோகிக்குக் கிட்டாதப்பா
துப்புரவாய்ச் சித்திக்கும் நல்லோருக்கு
வளியோடே செய்தாக்கால் சித்திசித்தி
வகையறிந்த தொகையறிந்தவளம்பெற்றோரே. 238

வளமாகப் பொருளறியார் நூலைக்காணார்
வழிதப்பி வாதத்தைச் சுட்டுச்சுட்டுக்
களமாகக் கரியதனைப் பண்ணிப்பண்ணிக்
கருத்தில்லா வாதிகள்தாங் கெட்டேமென்பார்
துளமான வெள்ளிவித்தை யெளிதிலாகுந்
துடியான வெளியோருஞ் செய்வார்பாரு
பளமான ததுவறிந்து வுண்ணவுண்ணப் 239
பதிவான ருசியாகும் பாருன்னோர்க்கே.

பாரியாய் வெள்ளிமூன்று பொன்றுமேனு
பதிவான விதியாளி அறிவானப்பா
தேரியே வெள்ளையென்ற பாஷாணந்தான்
திரமாகச் சேரதொன்று கல்வத்திட்டு
காரியே சூதமது சேரதொன்று
காட்டவே சாரமது சேரதொன்று
பாரியா யிவைமூன்றுங் கல்வத்திட்டுப் 240
பாரித்துப் பொடித்துமே சொல்லக்கேளே.

சொல்லவே பானையது விரண்டெடுத்துச்
 சிறப்பாக உராய்த்துமே ஒக்கப்பண்ணி
கல்லவே அடிப்பானைக் குள்ளேயிட்டு
 கலமாக மேற்பானை கவிழ்த்துமூடி
வல்லவே சீலைமண் நான்குசெய்து
 வடிவாகத் தீயெரிப்பாய் எட்டுஜாமந்
துல்லவே உயரவே பதங்கமாகுந்
 துடியான பதங்கமெல்லாம் வழித்துக்கொள்ளே.

வழித்துமே யெருக்கம்பால் தன்னாலாட்டி
 வளமாக வுண்டைபண்ணிக் காயவைத்து
இழித்துமே அப்ரேக கவசத்தை
 நலமாக வுண்டைமேற் கவசங்கட்டிக்
கழித்துமே காயவைத்துப் புடத்தைப்போடு
 கனிவாக வுருகியே கட்டிப்போகும்
பழித்துமே கட்டியே குருவுமாச்சு
 பதிவாக வெடுத்துமே பருவங்கேளே. 23

கேளுமே வெள்ளியஞ் சேரவொன்று
 கெடியாக விரதமது கால்சேர்கூட்டி
நாளுமே உருக்கியே புட்டையாக்கி
 நலமாகக் கல்வத்தி லிட்டுக்கேளு
பாளுமே அண்டோடு சேரதொன்று
 பக்குவமாய்ச் சுண்ணாம்பு உவர்மண்ணேர
தாளுமே போட்டுமே சுத்திபண்ணித்
 தடையறவே யெடுத்துமே சொல்லக்கேளே. 24

சொல்லவே வெள்ளியம் புட்டுகேநேர
 செம்மையாய்ப் பாணியா லரைத்துவில்லை
நல்லவே காயவைத்துப் புடமேபோடு
 நலமாக வெடுத்துமே கவிலக்கேளு

கல்லவே வெள்ளீயம் நீர்க்கப்போடு
　கனமாக வெடுத்துமே சாரஞ்சேரு
வல்லமையா யுருக்கிடவே வெள்ளிபோலாம் 244
　மபக்காம லெடுத்துமே மார்க்கங்கேளே.

கேளுமே வெள்ளிபோ லாருதம்பாரு
　கெடியாகத் தட்டினு லோசையாகும்
வாளுமே சரிகைவெள்ளி போலாம்பாரு
　வடிவாக விதையுருக்கி துதிலொன்று
காணுமே முன்குருவைக் கொடுத்தாயானால்
　கனிவாக வெள்ளியது பத்துமாற்று
தாணுமே வங்கத்துக் கோடாதப்பா 245
　தன்மையாய் விதியறிந்து செய்திடாயே.

செய்திடவே வெள்ளிவித்தை யெளிதிலாகுஞ்
　சிறப்பான மார்க்கமாய்ச் செய்துகொள்ளு
எய்திடுமே காயசித்தி கவனமாகும்
　ஏழைமதி போகாதே வெள்ளிபாரு
உய்திடவே சித்தியெல்லாம் வெள்ளியாலே
　உண்மையாய் வெள்ளிதா னதிகவேதை
பய்திடவே பாகமாய்ச் செய்துகொள்ளு 246
　பதிவான விதியறிந்தால் எல்லாமாமே.

## மேற்படி பரம்பரை.

ஆமேதான் சிவன்சொல்லத் தேவிகேட்க
　அடைவாக நந்திதான் கேட்டுக்கொண்டு
பூமேவும் நந்தி அசுவனிக்குச் சொல்ல
　போக்கோடே அஸ்வனி வில்வனிக் குரைக்க
நாமேதான் வில்வனியுங் கேட்டுத்தேறி
　நலமாகத் தன்வந்திரிக் குபதேசிக்க
வாமேதான் தன்வந்திரி அகஸ்தியர்க்கு
　வகுக்க அகஸ்தியர் புலத்தியர்க்குச் சொன்னார்.

சொன்னதொரு புலத்தியருந் தோருக்குச்
  சொல்லவருந் தோர்பூ சிக்குச்சொல்ல
நன்னயமா யூகிமுனி சந்தோஷித்து
  நலமாக ஆயுள்வே தத்தைப்பார்த்துக்
கன்னல்போ லுலகத்தில் பிழைக்கவேண்டிக்
  கருத்தாக வாதாங்க முந்நூற்றன்னை
இந்நிலத்தில் பெரியோர்கள் பாதம்போற்றி
  எழுதினே னஞ்சாமல் வேதைதானே. 248

தானென்ற வெள்ளிவித்தை சொன்னமார்க்கந்
  தாயான ஈஸ்வரியுங் குருவுஞ்சொல்ல
வானென்ற இப்பொருளை யாய்ந்துதானும்
  வடிவாகச் சுருக்கியே முந்நூற்றன்னை
கோவென்று கொட்டியே வைத்தேனப்பா
  கூர்த்துமே வெள்ளிவித்தை குணமதாகும்
நானென்ற ஆணவத்தால் வித்தையெல்லாம்
  நாடியே யுலகத்தில் சொன்னேன்தானே. 249

சொன்னதொரு தீக்ஷவிதி யைந்நூறுதன்னில்
  சொற்பெரிய கனகோடு வெள்ளிதானும்
நன்னயமாய்ச் சொல்லிவிட்டேன் பார்த்துத்தேறி
  நலமாகப் பாகமாய்ச் செய்துதேறு
கன்னல்போல் வாதங்கம் முந்நூற்றன்னை
  கைக்கனிபோல் சொல்லிவிட்டேன் கனிந்துபாரு
இந்நிலத்தில் வெள்ளியம் நீரைவாங்கு
  இரண்டு திரியாமல் வெள்ளியாமே. 250

பாரப்பா வென்னுடைய சாத்திரத்தைப்
  பதிவாக முழுதுமே பகர்ந்துபாரு
சாரப்பா பார்த்தாக்கா லெல்லாந்தோன்றுந்
  சவுக்கலாய்த் திரிந்தாக்கா லொன்றுமில்லை

வேரப்பா ஒவ்வொன்று மிந்தநூலில்
வேதையொன்றுந் தப்பாது விரைந்துபாரு
ஆரப்பா அறிவார்கள் புத்திமான்கள்
அறிவார்க ளிந்நூலை அறிவாய்ப்பாரே. 251

அறிவாக வெள்ளிவித்தை யுலகத்தோர்க்கு
அன்பாகச் சொல்லுகிறே னுலகவாதி
பிறிவாக வுலகத்தில் கேட்டுள்ளோர்கள்
பிழைக்கவே தெரியாம லலைகுவார்கள்
பிறிவாக வுலகத்தில் வாதிமார்கள்
பிரிந்துமே பாரிலே யலைவாரப்பா
நெறியான நெறியறிந்தா லுலகவாதி
நேராகச் செய்தாக்கால் சித்தியாமே. 252

சித்தியா யாகவென்றால் வெள்ளைதன்னைச்
சிறப்பாக வைத்திடவே சித்தியாகும்
முத்தியா யாகவென்றால் சொல்லக்கேளு
மூவுலகு மெச்சவே வெள்ளிதன்னைப்
பத்தியா யாகவென்றால் சொல்லக்கேளு
பதிவாக விதியறிந்து பரமயோகி
சத்தியமாய்ச் சொல்லிவிட்டே னுலகத்துள்ளே
சாதுபோல் கண்டுமே பார்த்திடாயே. 253

கண்டுபார் வெள்ளிவித்தை யெளிதிலாகுங்
கணக்காகப் பார்த்துமே காணம்பண்ணித்
தொண்டுபா ரெடைபாக மாகச்செய்து
தொன்மைபெறச் செய்தாலோ வெல்லாமாகுங்
கண்டுபார் நூலெல்லாம் வாசித்துப்பார்
ஜெகஜ்ஜால வித்தையெல்லா மெளிதிலாகுங்
கண்டுபார் வாதாங்கந் தன்னில்தானுங்
கருத்தாக வுறுதிபெற்று இருந்திடாயே. 254

இருந்திடவே சகலமெல்லாஞ் சித்தியாகும்
ஏழைமதி போகாதே செம்பைப்பாரு
வருந்திப்பா ரெல்லாமுஞ் சித்தியாகும்
வடிவாக வெல்லாமுஞ் சித்தியாகும்
கருந்துபார் வாதாங்கந் தன்னில்தானுங்
கருத்தாகச் சோதித்தா லெல்லாமாகும்
பருந்தைப்போல் திரியாதே பார்த்துத்தேறு
பதிவாக வெல்லாந்தா னாகும்பாரே. 255

ஆகுமே வெள்ளிதனை விற்றுக்கொண்டு
அடைவாக ஞானயோகத்தைப்பாரு
பாகுமே கழிமுனையில் கட்டிப்பாரு
பக்குவமாய் வாதியென்று பேர்படைத்துத்
தாகுமே இரும்பைத்தான் முத்திப்பாரு
தாக்கிடவே யெல்லாமுஞ் சித்தியாகும்
வாகுமே பொருளெல்லாந் தெரிந்துபோகும்
வளமான பொருளிருந்தால் சாரமாமே. 256

சாரத்தை வெள்ளைப்பா ஷாணத்தோடே
சாற்றியே யரைத்திடவே கட்டிப்போகும்
பாரத்தை அண்டோட்டில் வெள்ளியத்தைப்
பதிவாக நீரிருக்கும் பதியில்நில்லு
காரமென்ற காரத்தால் வெள்ளியத்தைக்
கனைக்காக வுருக்கியே நீரைவாங்கு
பாரமென்ற பாரத்தால் சித்தியாகும்
பதினாறு மாற்றாகும் பதிவாய்ப்பாரே. 257

வாதவெள்ளியில் அயச்செம்பு நீக்க
இவ்வாறுகுமெனல்.

பதிவாக அயச்செம்பை முத்திப்பார்த்துப்
பதியவே செம்பெரித்த மதியிற்றாக்கு
விதியாக வெள்ளிதான் பழுத்துப்போகும்
விதமான சாக்கெல்லா மிதிவேசாகும்

கெதியாகச் சொன்னுக்கா லொன்றுமில்லை
கெடிபெறவே வொன்றொடொன்று சேர்ந்துவாடும்
பதிவாக விதியறிந்தால் பதியுள்ளோர்க்குப்
பதிவான வுண்மையிது பரிந்துபாரே. 258

பாரேநீ யிக்காண்டந் தன்னில்தானும்
பதியவே பொருளெல்லா மெடுத்துக்காட்டு
காரென்ற விதியாளி கண்டுகொள்வான்
கனிவாக வில்லாதான் கணக்குமாமே
வாரேநீ கருவாளி காண்பானப்பா
வடிவாகப் பொருளறிந்து மாளவொட்டார்
சீரான சீரறிந்தால் பாகமாகுஞ்
சிறப்பான பொருளறிந்தால் வாதிதானே. 259

வாதிகள்செய்யவேண்டியவை யிவையெனல்

வாதியென்று பேர்படைத்தால் சினச்சுண்ணம்
வடிவாக வெடியுப்புச் சுண்ணம்பண்ணு
சாதியென்று பேர்படைத்தால் தபசுபோச்சு
சாத்திரத்தை நம்பாதே சரிதைபோச்சு
வேதியென்று பேர்படைத்தால் ஞானம்போச்சு
வேதாந்தப் பொருளறிந்தால் விதிநூல்பொய்யாம்
பாதிமதி யணிந்தவர்தான் சொன்னநீதி
பதிவான விதியாளி யறிவான்பாரே. 260

ஆனந்தக்களிப்பு.

சவுக்காரச்சுண்ணம்.

சவுக்காரச் சுண்ணத்தைச் சொல்வேன்—பூநீர்
சத்தியம் நாதந்தான் பூநீர் காணுச்சு
நவுக்கார வழலை யதுதான்—நல்ல
நாயகி சுக்கான்கல் வழலைக்கல்லாச்சு. 261

ஆச்சதே யிவைரண்டுஞ் சேர்ந்து—இது
ஆதி சவுக்காரப் போச்சதோழி
பாச்சமே கல்லுப்புச் சேர்ந்து—நல்ல
பாதையாய்ச் சுண்ணங் கடுமையாய பாச்ச. 262

காரத்தில் காரமு மேற்ற—கல்
காரமு மாச்ச சவுக்காரமப்பா
நீற்ற தோர்கல்லி லெடுத்து—இதில்
நேராயுவருப்புச் சுண்ணங்களைத்துக் 263

கல்லையும் போட்டே யெரிக்க—நன்றாய்
காணிது சத்திய மாச்சதேபாரு
செல்லக் கரிதனி லூதி—இதைத்
திட்டமாய்ச் சுண்ணம்பாய்ப் பண்ணிடுதோழி. 264

பண்ணிய பூநீரா பத்து—படி
தானே யளந்துமே பாண்டத்திலிட்டுக்
கண்ணிய மாகவே கேளு—கல்
சுண்ணம் படியொன்று விட்டிடுதோழி. 265

சவுக்காரக் குழம்பு.

கல்லுப்புச் சுண்ணமு மொன்று—நல்ல
காரமாய்ப் போட்டுக் கலக்கிடுதோழி
வல்லமை யாகக் கலக்கிப்பாரு
காரியமாகக் குழம்பாகக் காய்ச்சி 266

குழம்பை யிறுத்திடு தோழி—நல்ல
கூசாம லேதினி சொல்லமுடியா
அழம்பைக் குழம்பினால் வேதை—மிக்க
ஆதிசவுக்காரக் குழம்பிது பாரு 267

எல்லாச் சரக்குமே கட்டும்—நல்ல
இன்ப ரசவாத மாகுமேதோழி

நல்லா யிருக்குமே கேளு—நல்ல
காயசி யாகுமே நலமிதுபாரு. 268

சீனம் ஒருசே ரெடுத்து—நல்ல
சீனத்தைச் சட்டியிலிட்டுப் பொரித்துக்
காணமாய் வெண்கரு விட்டு—நல்ல
காரமாய்த் தானேயரைத்திடு தோழி. 269

ஜாமமொரு ஜாம மாட்டி—நல்ல
சாதக மாகவே வில்லையாய்த் தட்டி
வாமமாய்த் தான்ரவி வைத்து—வடி
வாகக் கற்சுண்ணம் கீழ்மேலுமேயிட்டு. 270

இட்டுப் பெரும்புடம் போட்டு—இதை
இன்பமாய்த் தானே யெடுத்திடு தோழி
கட்டுமே தான்கடுஞ் சுண்ணம்—நல்ல
காரிய மாகவே சொல்லுவேன்கேளு. 271

ஆதி சவுக்காரந் தன்னை—இதை
அன்பாய்க் குழம்பையும் விட்டே அரைத்துப்
பாதியாய்ச் சீனத்தி னோடே—இதில்
பத்திச் சவுக்காரந் தானேகுழம்பை. 272

விட்டு அரைத்துமே வில்லை—தட்டி
வேகமாய்த் தானே ரவிதனிலிட்டுக்
கட்டு மெட்டாகவே போடு—புடங்
காட்டமாய்ப் போட்டு யெடுத்துமேகேளு. 273

எடுத்துமே சாரத்தின் மேலே—கட்டி
இன்பமாய்க் காட்டி ரவிதனிற்காய
அடுத்துமே வைத்திடு தோழி—நல்ல
ஆதியாய்த் தானே புடமது இட்டு. 274

எடுத்துமே பார்க்கவே கட்டம்—இதை
இன்பமாய்ப் [illegible]கவே தங்கம்போலாகுந்
தடுத்துமே ந[illegible]ருக்கி—இதைக்
தப்பாமல் தா[illegible]டை தானே கொடுக்க. 275

கட்டுமே தானே உருகும்—நல்ல
கட்டாகும் வேதை கனிந்திடுந்தோழி
பட்டு எடுத்துமே பாரு—புகை
பக்குவமாகவே கட்டிடுந்தோழி 276

புகையது கட்டிக் கனியும்—நல்ல
போக்கோடே வாதம் நிலைத்திடுந்தோழி
வகையது ஆடுமே வாதி—நல்ல
மாறலில் நூற்றுக்கு வொன்றிடுதோழி. 277

மாற்றது பக்குமே பாரும்—[illegible]
மாகும் புடத்துக் கிறங்குமேவாதி
சேர்த்து எடுத்துநீ தோழி—ஜெய
மாகுமே தான்புடந் தானேநிலைக்கும். 278

விற்றுச் செலவுகள் செய்து—நல்ல
வேதாந்த ஞானம் பலித்திடுந்தோழி
சித்துக் கரியதோர் ஞானம்—திர
மாகவே பார்த்து இருந்திடும்வாதி 279

கட்டு எழுத்துமே சொல்லி—இதில்
இன்பமே யாகச் செபித்திடுதோழி
கட்டும் சுழிதனி லேறி—ஜய
கானலமாகவே கட்டிப் பிடித்து. 280

செய்திடு சித்திக்கும் ஞானம்—நல்ல
சிக்கவே யோகம் பலித்திடும்வாதி
பய்யவே ஞான மிகவும்—நல்ல
பத்திதரும் ஜீவன்முத்தியைப் பாரு 281

பார்க்கத் தரிசனை யாகும்—நல்ல
பாகமிதுவாகுங் கேளடி தோழி
ஏற்கவே சித்திக ளாகும்—நல்ல
எட்டுமே சித்தி யிருந்திடும்வாதி. 282

ஆடித் திரியாதே வாதி—நல்ல
அம்பல வாணரைத் தானேநினைத்துக்
கூடிப்பிரியாதே வாதி—நல்ல
கொடுமைகள் செய்திட வேண்டாங்காண்வாதி. 283

திட்டமாய்க் கைப்பாகஞ் செய்து—நல்ல
சித்திக்கு முத்திக் கிருப்பிடமாகும்
வட்ட மூலமனை மார்பன்—சொன்ன
வடமொழி தன்னி லிருந்தது தானும் 284

பட்டமாய்ச் செய்யாதே தோழி—நல்ல
பாடுகள் பட்டுமே செய்திடுதோழி
சிட்டர்கள் புகழ்தில்லை வாசர்—செய்ய
தீரன் அரன்போலக் கூத்தாடுந் தோழி 285

ஆடிச் சிவபூசை பண்ணி—நல்ல
அன்பாகப் பார்த்தேயி ருந்திடுந்தோழி
காட்டித் திரியாதே வாதி—கண்
கண்டுபிடித்தே யிருந்திடு வாதி. 286

வாதம் நிலைத்ததன் பின்னே—வடி
வாகவே ஞான மிகப்பாரு தோழி
சேதம் வாராமல் சாக்கு—ஐயம்
சித்திக்கப்பண்ணிடு வந்திடும் வாதம். 287

சித்தர் மறைப்பையுஞ் சொன்னேன்—நல்ல
சித்திக்கு மனோவாசி தன்னையுஞ் சொன்னேன்

புத்தியாய்க் கண்டு பிடித்துப்—புல
னாகவே செய்து புகழ்ந்துநீ பாரு 288

வெற்றிதரும் ரசவாதம்—நல்ல
வேதாந்த சற்குரு வெற்றி பெறலாம்
பத்திதரும் சிவ போதம்—நல்ல
புத்தியில் சித்திபொருந்துமே தோழி 289

நடனமுஞ் செய்திடு தோழி—நல்ல
நால்வேத முண்டான போதுமேவாதி
கடனாயாகத் திரிந்து—நல்ல
காத லயந்தன்னைப் பார்த்திடுதோழி 290

கெந்தியால் வர்ணமு மாகும்—நல்ல
கீர்த்தியு மாகுங் கிருபையுமாகும்
நந்தி எண்ணாயிரந் தன்னில்—இதை
நாடியிருந்து நலம்பெறச் சொன்னார். 291

செப்பமதாக இரசத்தை—ஜெயம்
செய்திடு வாதம் நிலைத்திடும்போது
கற்பமா யூகி முனியும்—நல்ல
காரணமாகவே வாதாங்கந் தன்னில். 292

பாகமாய்ச் செய்பவே சொன்னேன்—நல்ல
பாகத்தைக் கண்டு பிடித்துமேவாதி
தாகமாய்த் தான்வரச் சொன்னேன்—நல்ல
தாட்டிகமாக விருந்துமே வாதி. 293

வேறு.

வாதியாய் வடமொழியிற் சொன்னமார்க்கம்
வகையாகச் சிவன்தானு மும்மைக்கேகாத.
நீதியாய் நந்திதான் கேட்டுக்கொண்டு
நிலவரமாய் விஸ்வனியு மஸ்வனிக்குரைக்க

சோதிபெறத் தன்வந்திரி கேட்டுத்தேறிச்
சுயமாக அகஸ்தியருக் குபதேசிக்க
பாதிசேர் அகஸ்தியரும் புலஸ்தியர்க்குப்
பண்பாகச் சொல்லிவிட்டார் பாரில்தானே. 294

தானென்ற புலத்தியரும் பார்த்துத்தேறித்
தப்பாமல் புலத்தியருந் தேரர்க்கோத
வானென்ற தேரருமே பார்த்துத்தேறி
வகையாக யூகிமுனிக் குபதேசிக்க
நானென்ற யூகிமுனி உலகத்தோர்க்கு
நாடியே ஆயுள்வே தத்தைத்தானும்
கோனென்ற குருவருளால் சொன்னமார்க்கங்
கொடியதொரு வாதிதான் நேர்மைதானே. 295

நேர்மைதான் கைபாக விபரமெல்லாம்
நிலைத்துமே தீக்ஷைவிதி தன்னில்சொன்னேன்
தார்மைதான் வாதாங்கந் தன்னில்தானுந்
தடையறவே சொல்லிவிட்டேன் சார்புதன்னை
வார்மைதா னிக்காண்டந் தன்னிற்றானும்
வகையாகச் சொல்லினே னுலகத்துள்ளே
கார்மைதா னில்லாமல் நல்லோர்க்குத்தாங்
கருத்தாகச் சொல்லினேன் காணலாமே. 296

காணப்பா வாதத்தி னுற்பனத்தைக்
கருத்தாக வாதாங்கந் தன்னிற்சொன்னேன்
பூணப்பா யிவ்விரண்டு மொத்துப்பார்த்துப்
பூருவத்தில் சொன்னதெல்லாம் புதிதாய்ப்பாரு
தோணப்பா அறுதலிபோல் நின்றலாமோ
தொன்மைதரும் பெரியோர்கள் சொன்னநீதி
வாணப்பா சாஸ்திரத்தையா ராய்ந்துபாரு
வகையாகச் சொன்னதெல்லாம் வண்மைதானே. 297

வண்மையாய்ப் பெரியோர்கள் சொன்னநீதி
வகையாகப் பார்த்துமே மனதுதேர்ந்து
தண்மைதான் பெரியோர்கள் சொன்னநீதி
தடையாகச் சாஸ்திரமும் பொய்யென்பார்கள்
கண்மைதான் சாஸ்திரத்தை யொத்துப்பார்த்துக்
கணக்கறிந்து உண்மையாய்க் கவனம்வைத்து
கண்மையாய்ச் செய்தாக்கா லெல்லாமாகும்
நாடினு லெல்லாமுஞ் சித்தியாமே. 298

சித்தியா யாகவென்றால் நூலைத்தானும்
சிறப்பாகப் பார்த்துமே மனதிலெண்ணி
முத்தியாய்ப் பாகமாய்ச் செய்துகொண்டு
முனிவாக மனத்தையே சிந்தித்தேறு
பத்தியாய் மனமாற்றிப் பொருளைத்தேடிப்
பதிவாக மெய்யென்று பாழில்மீளா
நித்தியமா மென்றுதா னினைவில்புக்கி
நீடூழி காலமெல்லாம் நினைவில்பாரே. 299

நினைவிலே பார்த்தவுடன் வாதந்தன்னை
நிச்சயமாய் நினைவுதனில் நினைத்துஎண்ணி
கண்விலே கண்டபொருள் போலேசெய்து
காட்டியே திரிந்துநீ பொருளைப்பாரு
அனவிலே திரிந்தாக்கால் வேதைமார்க்கம்
அடைவாகச் செய்துமே சொல்லக்கேளு
தனவிலே செய்தாக்கா லாபமாமோ
தாக்காட்டால் தண்மையாய்த் தாக்கிப்பாரே. 300

தாக்கிப்பார் சிவன்தனக்குச் சரணமைய்யா
தடையறவே அம்மைக்குச் சரணஞ்சொல்லு
நீக்கிப்பார் நந்திக்குச் சரணஞ்சொல்லு
நிலவரமா யகத்தியர்க்குச் சரணஞ்சொல்லு

வாக்கிப்பார் தன்வந்திரிக்குச் சரணஞ்சொல்லு
　வகையாகப் புலத்தியர்க்குச் சரணஞ்சொல்லு
வீக்கிப்பார் தேரருக்குச் சரணஞ்சொல்லு
　விதமான யூகிமுனி சொன்னவாறே. 301

சொன்னதொரு ஆயுள்வே தத்தைத்தானுஞ்
　சுகமாக வுலகத்தில் சொன்னேன்யானுங்
கன்னதொரு கருத்தறிந்த பேர்கள்தாமுங்
　கனிவாக வுலகத்தில் மனதுதானும்
பின்னமில் லாமலே சொல்லிப்போட்டேன்
　பேர்பெரிய வாதமென்ன வெளிதிலாகும்
துன்னதொரு படிப்பாளி கிடைக்கும்பாரு
　சித்திமுத்தி செய்திடுபேர் சின்னந்தானே. 302

யூகிமுனிவர் வாதாங்கதீக்ஷைவிதி **300**

முற்றிற்று



தேவிபாதம்.

# யூகிமுனி

## வாதவைத்ய விளக்கம் - 200.

இது
பாலயோகியும்
ஆயுள்வேத பண்டிதருமாகிய

**V. R. சுந்தரம் அவர்களால்**

பல ஏட்டுப் பிரதிகளைக்கொண்டு
பரிசோதிக்கப்பட்டு

மங்கலம்-ஷண்முக முதலியாரால்
சென்னை,
கோமளேசுவரன் பேட்டை,
சச்சிதாநந்த அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது.
1915.

[காப்பிரைட்].

# யூகி முனி

## வாதவைத்திய விளக்கம்.

### அட்டவணை.


| விஷயம். | பக்கம். |
|---|---|
| நூலுபதேச பரம்பரை | 1 |
| வழலையுப்பு | 2 |
| சகல ரோகத்திற்கும் சீனவன்னி பஸ்பம் | 2 |
| கருவங்கபஸ்பம் | 3 |
| பூரதாளகபஸ்பம் | 3 |
| வெடியுப்பு ஜயநீர் | 3 |
| தாளகபஸ்பம் | 4-5-29-48 |
| சீனருதபஸ்பம் | 4-5-32-55-57 |
| ஜயருத பஸ்பம் அல்லது சண்டரசபஸ்பம் | 4 |
| துருசுச்செம்பு | 5-52-62 |
| நல்ல சிவப்புச் செம்பெடுத்து வெள்ளியிற் கொடுக்க | 6 |
| அயச்செம்பு வேதை | 6 |
| நாகச்செம்பு | 6-40 |
| வெடி செம்பு வேதை | 7 |
| நாகச்சுத்தி | 7 |
| நாகரசச்சிந்தூரம் | 7 |
| சுரப்புக்கு அயக்காந்த சூரணம் | 8 |
| அமுரி மூறிக்காதவன் வாதியல்ல | 8 |
| அமுரி மூறிக்கும் விபரம் | 8 |
| துருசுச்சுண்ணம் | 9 |
| வாதசுரத்திற்குப் பாஷாணக்குளிகை | 9 |
| சங்கத்திராவகம் | 9 |
| செம்புக்கரி | 10 |
| அயச்செம்பு | 10-20-24 35-38-42-56 |
| ரசச்சிந்தூரம் | 10 |
| தாம்ரக்கரி | 11 |
| அயச்செம்பைக் கரிபண்ணிவெள்ளியிற் கொடுக்க | 11 |
| பேதிமருந்து | 11 |
| கல்லுப்புச்சுண்ணம் | 12 |
| துருசுக் களங்கிற்கு எண்ணெய்ச்சுருக்கு | 12 |
| சுரத்திற்குப் பாஷாண மாத்திரை | 12 |
| காமாலைக்கு மருந்து | 13 |
| துருசு காரீயச்செம்பு | 13 |
| துருசுச்சத்து | 14 |
| மூடர்களின் செய்கை | 14 |
| தங்கம் வாதத்திற்கு வித்து | 14 |
| வெடியுப்புச்சுண்ணம் | 15-31 |
| வாளசுத்தி | 15 |
| அயக்காந்தசிந்தூரம் | 15-41 |
| நீர்க்கட்டுக்கு வெண்கார பஸ்பம் | 16 |
| கண்ணுக்கு மை | 16 |

| விஷயம். | பக்கம். |
|---|---|
| மகோதரத்திற்குக் குடிநீர் | 16 |
| திருசு அரிதாரச் செம்பு. | 17 |
| களங்குகட்டுப் புடம் மீறக்கூடாதெனல் | ,, |
| தாதுவிர்த்திக்கு மருந்து | 18-61 |
| வெள்ளி வித்தை | 18 |
| விக்கலுக்கு மருந்து | 18 |
| கள்ளைக்குடித்து மயக்க முண்டாக | 19 |
| தங்கச்சிந்தூரம் | ,, |
| காகச்சிந்தூரம் | 19 |
| திருசுக்களங்கு | 20-28 |
| அயவுருக்கு | 21 |
| அயவுருக்கும் திருசுஞ் சேர்க்க | 21 |
| திருசுக் களங்கில் அயம் சேர்க்க | 21 |
| அயச்சத்து பிரிக்க | 22 |
| தாளகச்சத்து | 23 |
| க்ஷயத்துக்குக் குடிநீர் | 28 |
| அயச்சிந்தூரம் | 24-35 |
| நாகபஸ்பம் | 25-34-56 |
| வேதை முடிவு — நாகமும் செம்பும் சேர்த்த களங்கு, அல்லது லிங்கமும் செம்பும் சேர்த்துக் கரி பண்ணி செம்பெடுத்து வேதைசெய்யச் சொல்லியது | 25 |
| மலஜல மடைப்புக்குச் சூர்ணம் | 25 |
| பேதி எண்ணெய் | 26 |
| கற்பசூர்ணம் | 26 |
| ஷை சூர்ணத்திற்கு உப்பு | 26 |
| பித்தளைச்செம்பு | 27 |

| விஷயம். | பக்கம் |
|---|---|
| குட்டத்திற்குச் சூர்ணம் | 27 |
| திருசுக்களங்கு சத்து பிரிக்க | 28 |
| க்ஷயத்திற்குப் பொன்னுவரைக் குடிநீர் | ,, |
| குட்டத்திற்குப் பூர பஸ்பம் | 29 |
| ரோமச்செம்பு | 29 |
| வாய்விற்குப்பிரண்டை பாவு | 30 |
| அதிசாரத்திற்குக் குடி நீர் | 30 |
| கஞ்சாநெய் | 30 |
| சூதக வாய்விற்குக் குழித்தைலம் | 31 |
| பக்கசூலைக்கு எண்ணெய் | 31 |
| பஞ்ச தீபாக்கினி லேகியம் | 32 |
| கிராணிக்குக் கொழுக்கட்டை | 32 |
| வெட்டைக்குப்பாசல் | 33 |
| மூலக்கிராணிக்கு மருந்து | 33 |
| பித்தவாய்விற்குக் குடிநீர் | 33 |
| கிராணிக்குக் குடிநீர் | 34 |
| ரசவாதம் தெரிந்த பெரியோர் செய்கை | 34 |
| திருசு பூரபஸ்பம் | 35 |
| மூடஞானிகட்குப் புத்திகூறல் | .8 |
| தாளகத்திற்குச் சுருக்கு | 40 |
| தாளகசுத்தி | 41 |
| பூரத்திராவகம் | 41 |
| சத்துபிரிக்கும் வகை | 44 |
| க்ஷயத்திற்கு வாந்தி கொடுக்க | 45 |
| அயம் திருசு சேர்த்துச் செம்பெடுக்கும்வழி | 47 |

| விஷயம். | பக்கம். |
|---|---|
| அங்க ரச பஸ்பம் | 48 |
| குருகொடுக்கும் வடைபாக விவரம் | 49 |
| மூலத்திற்கு | 50 |
| மொறுக்குவெள்ளி | 51 |
| மொறுக்கு வெள்ளிக்கு அயமும் தருசம் சேர்க்க | 51 |
| உயிர் குட்டத்திற்கு எண்ணெய் | 52 |
| செத்தசெம்புஓடாவிதம் | 52 |
| வாதடைப்புக்குத்தைலம் | 53 |
| வயற்று வலிக்குப் பஞ்சலவண பஸ்பம் | 53 |
| வலிகுன்மத்திற்கு | 53 |
| மூலத்திற்கு நாகபஸ்பம் | 54 |
| தருச அயக்களங்கு | 54 |
| வாதகுன்மத்திற்கு மருந்து | ,, |
| தாம்பூலம் தின்னக் கூடாதெனல் | 55 |
| செத்தசெம்பில் ஐயகீர் விட்டரைக்க பச்சை நிறம் ஓடாது | 56 |
| வேடவாதிகள் புடட்டு | 57-68 |

| விஷயம். | பக்கம். |
|---|---|
| காக்கைவலிக்கெண்ணெய் | 58 |
| விக்கக்கட்ட ஐயகீர் | ,, |
| தந்தகாய்விற்குக் குடிநீர் | 58 |
| கண்ணிற்குக் களிம்பு | 59 |
| காகக்களங்கு | ,, |
| செம்புக் கரிசெய்து வெள்ளியிற்கொடுக்க | 59 |
| காகச்சுண்ணம் | 60 |
| காரீயத்தல் தருசச்சத்து | 60 |
| தருசச்சுண்ணம் | 60 |
| நாளசுக்கட்டு | 61 |
| லிங்கக்கட்டு | 61-68 |
| காபிமாத்திரை | 62 |
| வாய்விற்குத் தைலம் | 62 |
| வெள்ளிசெய்யக் கள்ளிப் பாலால் பாஷாணக்கட்டு | 64 |
| வாதவெள்ளி செய்து வைதிப் போட்டு பின்பு கொறுக்கி அயச் செம்பைச் சேர்க்கவெனல் | 64 |
| அயக்களங்கு | 65 |


முற்றிற்று.



உ

தேவிபாதம்.

# பூதிமுனி

## வாத வைத்திய விளக்கம்.

அத்தியுரித் திடைதரித்த ஐயரிணைப்பாதமல
ரணிந்து போற்றி
நித்தியமா யானைமுகன் றிகழ்பானபாதமலர்
நினைந்து போற்றிச்
சித்திபெறுத் குருவினது சீர்பெற்றபாதமலர்
தெளிந்து போற்றி
நத்தியே வாதவைத் தியவிளக்க மெல்லார்க்கும் 1
நல்கு வேனே.

### நூலுபதேசித்த பரம்பரை.

சிவன்தானு மம்மைக்குச் சொல்லிடவே அம்மையவள்
தெளிந்து நந்திக்
கவன்தானுஞ் சொல்லிட கனிவான நந்திதன்வக்
திரிக்குச் சொல்ல
பயன்பெறவே அகத்தியரும் பதிவாகக்கேட்டவுடன்
பரிவு கூர்ந்து
நயம்படவே புலத்தியர்க்குசொல்லிடவே யவர்கேட்டு 2
நலமாய்ப் பாரில்

பாரிலே புலத்தியரும் பதிவான தேருக்குப்
    பகர்ந்து காட்டக்
கோரியே தேரருமே குணமான யூகிக்குக்
    குறித்துச் சொல்ல
வாரியே யுலகத்தி லெல்லாரும் பிழைக்கவே
    வண்மை சொன்னேன்
தேரியே சாஸ்திரத்தை ஜெயமாகப் படித்தாக்கால்
    தீர்க்க மாமே. 3

வழலையுப்பு.

முத்திபெறு ஸ்ரீ ரு முனையானபடிநான்கு
    முனிந்த சுக்கான்
சத்தியமாய்ப் படிநான்கு சரியான அமுரிபடி
    யெட்டு விட்டு
நித்தியமாய் வாலையிட்டு நேர்மைபட இறக்க உப்பாம்
    வழலை யாச்சு
சித்திரத்திற் குக்கலைத்தான் ஜெயமானநாய்குலைத்த
    திறமை தானே. 4
மெய்பாகம் உப்பெடுத்து மேன்மைபெறுகல்வமிட்டு
    மிகுந் தரைத்து
மைபாகம் ஐந்துசுண்ணைக் குகையிலிட்டுப் புடமிட்டு
    மடக்கிப் போட்டு
வைபாகம் சவுக்காரம் வடிவாக வாகிவிடும்
    வாதி கேளு
கைபாகந் தப்பினால் கசடோ ஆகாது
    கண்டு பாரே. 5

சகல ரோகத்திற்கும் சினவன்னி பஸ்பம்.

குட்டமுதற் போகவே குணமானவன்னிபஸ்பம்
    குணமே செய்து
தட்டாமற் சினமது சரியாகச் சேர்த்துச்
    சரியா யாட்டி

முட்டாகக் கடத்திலெரி முனிவாகவெள்ளைபதாம்
மீறு நோய்போந்
இட்டாக வாதம்வரச் சீராகச்சுட்டுப்பார்
இடமு மாமே. 6

## கருவங்க பஸ்பம்.

சூதமது பலமொன்று சூட்டுகரு வங்கமெடை
சூட்டப் புட்டாங்
காதலுடன் கற்றாழை கனிவான நீர்விட்டுக்
கலந் தரைத்து
நீதமுட னந்துதர மெரித்திடவே நிலைத்துநிற்கும்
நோராம் நோய்போம்
வாதமதைப் பழிப்பவர்க்கு வடிவானநரகெய்தும்
வண்மை தானே. 7

## பூரதாளக பஸ்பம்.

மெய்க்குமே பூரமொடு மேன்மையா மரிதார
மிடையே சேரு
கைக்குமே அரைத்துளரி கனிவாக அடியில்நிற்குங்
கனிந்த பூரம்
வைக்குமே பணமீய வடிவான க்ஷயகாச [ன
மிருமல் போகும்
நாய்க்குமுன்னே தேங்காயை நாடிமிகப் போட்டுமென்
நடத்தை யோரே. 8

## வெடியுப்பு ஜயநீர்.

பொட்டிலுப்புப் பலமெட்டு பின்பெடிநீ சினமது
பிசுகா மற்றான்
கட்டளையாய்ப் புளிகாலு கனிவாக சேர்த்துஇடி
கருணை யாக
இட்டமுடன் கண்ணும்பா மிதைஜயநீர் பண்ணவே
சாக்குக் கட்டுங்

கொட்டினல் தேளாகுங்கொட்டாட்டால் பின்னையென்ற
    பூச்சி தானே. 9

## தாளக பஸ்பம்.

நீறியாய்ச் சீனம்வெடி நிலவரமாய்ச் சேர்த்துசுண்ணம்
    நேராய்ப் பண்ணி
சோதிபரி தாரமேல் துணையாகக் கட்டிபுடக்
    தோய விட்டால்
பாதியது நீறிவிடும் பதிவான ஆயுகாசம்
    பாரிற் போகும்
வாதிபுரி வைத்தியற்கு வகைதெரியும் வைத்தியத்தை
    வகைசொன் னேனே. 10

## சீனசூத பஸ்பம்.

சீனமது பலமொன்று ஜெயமான சூதமொடை
    சேர்த்து நீயுங்
கானலாய்க் கடமிட்டுக் கருத்தாக வெரித்தெடுக்கக்
    கான வெள்ளை
தானகமாய்க் கடுகிவிடு தறுகாது கூட்டமெல்லாந்
    தானே போடுங்
கானகத்தி லலைக்துமென்ன காட்டிலே திரிக்துமென்ன
    காணு வாயே. 11

## ஜயசூத பஸ்பம் அல்லது சண்டரசபஸ்பம்.

நாட்டுப்பு படிநான்கு நலமான செங்கல்மா
    நாலத் தொன்று
காட்டுவறு சட்டிநிறை கனிவான் சூதம்நடு
    கருதி யிட்டு
மூட்டுவது மேல்மூடி முனையான சீலைசெய்மூக்
    நூறு நாழி

காட்டமிடு ஜெயகூதங் கனிக்துவழி சகலநோய்
காணா மோடும்
எட்டதனில் சரக்காய்தா னிதமாகுங் கறிக்குதவா
இன்ப மாமே. 12

## துருசுச் செம்பு.

காணநறும் பூமூன்று கரியதுரு சதுதானுங்
காண நான்கு
வீணான சிகரமது ஒன்றிடுநீ தைலமதில்
விட்டுக் காய்ச்சு
நாணாக உருக்கிடவே ரவியாகு மாற்றேழு
நவின்று திறக
தோணாத வாதிக்குத் துவரையது மாற்றதுபோல் 13
தோன்றுந் தானே.

## சீனரச பஸ்பம்.

சேதமறச் சீனரசஞ் சேர்ந்தெரிக்க நீறியது
செருமி நிற்கும்
காதலுடன் திரிகடுகில் திரிமூன்று நாளிடவே
கருங்குட் டம்போம்
வாதபித்த சிலேட்டுமத்தால் வரும்நோய்கள் மருந்தி [னால்
வலுவாய் நீங்கும்
பூதபத்ர காளிகறி பொங்கலிட்டாற் போமோசொல் 14
புனித வானே.

## தாளக பஸ்பம்.

வைப்பான அரிமேலே வளையதுப்பை அரைகட்டி
வாட்டிப் பார்க்க
செப்பாகச் சிவக்குமது ஜெயசீன சுண்ணமதை
ஜெயமாய்க் கட்டிக்

கைப்பாகப் புடமிடவே களிலாக வெளிரமது
க்ஷயங்கள் தீர
வைப்பாகச் சொன்னதினால் வாதிபரி வதனீறு
வண்மை தானே. 15

நல்ல சிவப்புச் செம்பெடுத்து வெள்ளியிற் கொடுக்க.

சேபான செம்பெடுத்து சுக்கிரனி லெட்டிலொன்று
சேர்த்துருக்கத்
தாயான தங்கமது தாட்டிகமை யாயிவிடுக்
தன்னைவிற்று
ஓயாம லுண்டுடுத்தி யுண்மைதருஞ் சுழிமுனையை
யுறுதி யாக்கும்
வாயாலே சொல்லியென்ன வருமோதான் பெருவாழ்வு
வாதி யோரே. 16

அயச்செம்பு வேதை.

சோதி அயச் செம்பெடுத்தால் சுக்கிரனில் காணிலொன்று
ருட்டி நீயும்
நீதியாய் நீளையைத் துதியபின் னெடுத்து எடை
நேராத் தங்கம்
கோதிலை சேர்த்துருக்கிக் காசியினிற் புடமிடவே
கூடுந் தங்கம்
ஓதிபதி வதுவேத மூதியுதி வதுவாத
முண்மை தானே. 17

நாகச் செம்பு.

சோமது பலமொன்று ஆட்டிசெ மெடையுருக்கச்
சேரப் புட்டாம்
வீரமிட நீராகும் விதமான தேவியெடை
விட்டு ஆட்டிக்

காரமுடன் திலதமிடு கண்டமிடு செம்பாகுங்
கருணை கூர
கோரமாய்ச் சொல்லியென்ன கூடிப்பதியாவாகில்
கொள்ளை தானே. 18

## மேற்படிச்செம்பு வேதை.

தவிலைத்த அக்கிரனில் காட்டிகமா பெட்டிலொன்று
தாக்கு நீயுங்
கவனமறுந் திசைமாற்றுங் காரணமா யுண்டுடுத்திக்
கருணை கூர்ந்து
பவன மறும் பூரணத்தைப் பார்த்திடவே ஞானங்கள் [வார்
பதிவ தாகுஞ்
சிவபூஜை பண்ணினதால் செல்வம்வரு மென்றுசொல் 19
திருடர் தாமே.

## நாகச் சுத்தி.

வையகத்தில் சோரமெடு வடிவாகப் பலமொன்று
வண்மை யாகப்
பையவே யெடுத்துருக்கிப் பதிவான இலுப்பை நெய்யில்
பரிந்து சாய்க்க
மெய்யாகச் சுத்திபதாம் மேன்மை பெறுஞ் சுத்தியிது
மெய்யே யாகுங்
கையிலே புண்ணிருக்கக் கண்ணாடி பார்த்தலைவார் 20
காணுந் தானே.

## நாகரசச் சிந்தூரம்.

எனையாஞ் சுத்திபண்ணி நாகமெடை சூதமிடு
இட்டுருக்க
வானையாம் புகைநீரை வடிவாக விட்டரைத்து
வளமாய் வில்லை

சேனையாய்க் கடமிட்டு ஜெயமாக எரிசிவக்குஞ்
    சோ னோய்போம்
ஆனைகண்ட குருடரைப்போ லிலைவார்கள் வாதியர்க
    ளனைவு தாமே. 21

### காப்புக்கு அயக்காந்த சூரணம்.

கரும்புரசந் தந்திவிரை கற்கக்கு மரிசமெடை
    சமனாய் செண்டு
இரும்புஅங் குசமெட்டு ஈரெட்டுக் கடுக்காய
    மிதமாய்க்கெல்வி
வரும்பருப்பு ஈரெட்டு சேர்த்தரைத்து உண்டிடவே
    வரும்நோய் போகும்
கரும்புதின்னக் கைக்கூலி கொடுப்பவன்போல்
    வைத்தியர்க்குக்கணக்கு மாமே. 22

### அழுரி முழிக்காதவன் வாதியல்ல வெனல்.

சாத்திரத்தை யறியாதார் சாதகமாய்ச் சொன்னதிருஞ்
    சாவும் பொய்யோ
நேர்த்தியாய் வாதவகை நிலையாகச் செயல்போய்யோ
    நேர்மை யன
சாத்திரமா மழுரிபத கனிவில் முழித்திடவே
    காரமாகும்.
மூத்திரத்தை யறியாதார் மூடமாம் வாதியென்றே
    மொழிய லாமே. 23

### மூத்திர முழிக்கும் விபரம்.

மூத்திரமும் புடியாது முனிவான குமரிபிடு
    முனிக்கு வாங்கு
சாத்திரமா வெண்ணெயுப்பு கனிவாக அடியில் நிற்குங்
    கண்டு பாரு

சூத்திரமாய்ச் சவுக்காரஞ் சுண்ணமதாய்க் கடுங்காரஞ்
சூதஞ் சாகுங்
கோத்திரமெல்லாம்பிழைக்குங்கொடுவேலைகாயசித்தாங் 24
கொள்கை தானே.

### துருசுச் சுண்ணம்.

சூதமது பலமொன்று சூட்டினடை வெள்ளீயஞ்
சேரப் புட்டாங்
காதலுறு பொட்டலையாங் கனிவாக எடைசேர்த்துக்
கட்டச் சுண்ணம்
நீதமுற நீலன்மேல் நினைவாக அங்கியிட்டு
நிலையாஞ் சுண்ணம்
வாதமது ஏவலாம் வடிவான ஞானம்வரும் 25
வண்மை தானே.

### வாதசுரத்திற்குப் பாஷாணக் குளிகை.

வெள்ளைப் பாஷாணமெடை வெண்மிளகு சேர்த்தரைசீ
மேன்மை யாக
சன்னாயிலா விஞ்சிநீர் தான்விட்டுஅரைகடலை
தன்னைப் போலே
உள்ளபடி ஈய்ந்திடவே யூறுகின்ற வாதசுர [தார்
மோடு மெல்லாங்
கள்ளனைப்போல் முழித்தென்ன காரணத்தையறியா 26
கருத்தில் லாரே.

### சங்கத் திராவகம்.

வெடிபத்து சீனமது விதமாக மூவெட்டு
விரும்பி ரண்டுங்
துடியாக வாலையடை துப்புரவாய்நீர்வாங்கத்
துடியா மஞ்சள்

அடியான சங்குநீர் அப்புரவாய்ப்பலமிடுக
அடியாம் நீரம்
விடியுமட்டு மழைபெய்யினும் விதமான பயிர்தனக்கு
விருப்ப மாமே. 27

## செம்புக் கரி.

அக்கினியும் பலமொன்று ஆகிறதும் பூவதுவு
மதில்முக் காலாஞ்
சக்கியமா யரைத்துபுடம் சரியாக இட்டெடு
சாத்தி வீரம்
முக்கியமா யிட்டரைத்து முனியான வெள்ளியிடு
மூன்று மாற்றுந் –
இக்கினிலே யலைத்தாலுந் தெருவெல்லாம் பேரினாலுந்
இடமாம் பாரே. 28

## அயச் செம்பு.

விட்டாடுங் கரும்பொன்னும் விதமானசெம்பொன்னும்
வீர மிட்டுக்
இட்டாடுங் கெந்தியிட்டு சேர்த்துவகைக் கொன்றிடுநீ
காட்ட மிட்டு
மட்டாக வகையுருக்க மயமான செம்பாகும்
மாற்று வழுரக் –
நட்டாரைச் சோராதே கெட்டாரென் பழிசொல்லார்
தரணி தானே. 29

## ரசச் சிந்தூரம்.

முறையாக கெந்தியெடு முனிந்துமே ரசமொடேவே
மிக வுருக்கிக்
கறையான சீனமொடை சேர்த்தரைத்துக் கடமிட்டுக்
கனிவாய்த் தானே

வறையாக வெரித்துண்ண வாதமெல்லாமோடுவது
வழங்கச் சொன்னேன்
அறையிலே யாடுவா ரம்பலத்தி லாடார்கள்
அறிவு தானே. 30

### தாம்பிரக் கரி.

தாம்பூரந் தகடடித்துத் தாகமதாய் நாதும்பூ
தான்மேற் கூட்டி
வாம்பூராய்ப் புடமிட்டு வண்மைபெற நாற்கொன்று [விட்டுக்
வடிவாம் வீரங்
காம்பாடாய்ச் சேர்த்தரைத்துக் கருணையாய் மதியி
காண வெட்டாஞ்
சோம்பேரி வாதியவர் தோலோடே பழந்தின்பர் 31
தொன்மை தானே.

### அயச்செம்பைக் கரிபண்ணி வெள்ளியிற் கொடுக்க.

நம்பி அயச்செம்பெடுத்து நலமான தங்கமெடை
நாடிச் சேர்த்து
வெம்பியடி கெந்தியிடு வீரமிடு புடமூன்றில்
விரும்பச் செம்பு
தம்பிமதி பத்திலொன்று தாக்கிடவே தங்கமாந் [துச்
தாக்கா வாதி
செம்பெடுக்கத் தெரியாமல் செம்பையிலே பண்ணிவைத் 32
சேவிப் பாரே.

### பேதி மருந்து.

வெத்திபெறு நரும்புளடை விதமான சூதமிடு
விட்டு ஆட்டி
முத்திபெறு கரியாகும் கரிஎடைக்குத் தந்திவிரை
விட் டரைத்து

சித்திபெறப் பரணியிட்டுத் தைலமதிற் பாச்சியுண்ண
வெகுநோய் போகுஞ்
சத்துருவை யறியாமற் சாதியார் மூலிகையில்
தயங்கு வாரே. 33

## கல்லுப்புச் சுண்ணம்.

நழுகாமற் கடலீநுரையும் நாட்டுப்பும் எடைசேர்த்து
நலம தாட்டி
வழுவாமற் புடமிடவே வடிவான சுண்ணம்பாம்
வகைநான் கொன்று
பழுவான வன்னியிட்டுப் பாகமா யுண்ணவலி
குன்மம் போகும்
கழுவடியில் காத்திருந்து காதலுறுமநாய்போலே
காணு வாரே. 34

## திருசுக்களங்கிற்கு எண்ணெய்ச் சுருக்கு.

தாங்கநறும் பூபலமாந் தொல்லுலகில் வீரங்கால்
இலத மிட்டு
வரங்கஅயக் காண்டியிட்டு வகையாகக் காப்சிவனு
தருசி யிட்டு
மூரங்கலட்டக் காய்ச்சுருக்கு முனையான செம்புமதி
பழுக்கும் நன்றாய் [யர்கள்
குரங்கைநினைக் கூர்மருந்தைக் கொள்பவர்போல் வாதி
குணமுமாமே. 35

## சுரத்திற்குப் பாஷாணமாத்திரை.

வெள்ளையென்ற பாஷாணம் விதமாக இட்டெரிக்க
விதமா யேறுஞ்
சள்ளையில்லா தைவழித்துச் சரியான மாரிசந்
தனையிஞ்சிச் சார்

மெள்ளவே சேர்த்தரைத்து விசமெடை கொடுத்துவிடு
சுரமெல் லாம்போம்
உள்ளநோய் பிணிதீர உலகினில்பண் டிதர்கேட்டோர் 36
உலுத்தர் தாமே.

காமாலைக்கு மருந்து.

பசும்பாலோர் படியதனில் பரிவாங்கி மூரநெல்லி
பதிவாஞ் சாறு
விசுவாச மாயெடையாம் இட்டுண்ணு உப்புதள்ளு
வேகம் போகும்
கசிவான காமாலை கண்டிந்த முறைகண்டால்
காணுதோடும்
பசியாத வரந்தருவேன் பழைபதுதா வெணுங்கதையின் 37
பரிசு தானே.

துருசு காரீயச் செம்பு.

சூதமது பலமொன்று சுத்தித்த கெந்திஎடை
அருசி ரட்டி
காதலுறு காரீய முபயமது இட்டுஅரை
கனியப் பாணி
நீதமாய்த் தைலமிட்டுக் காய்ச்சியே தெளிவிருக்க
நேராந் தங்கம்
வாதமுன இடத்திருக்க வடிசோறு கேட்டகதை 38
வாதி தானே.

குருவான செம்பெடுத்துக் கூட்டுரசக் கெந்தியெடை
கூறு வீரம்
பெருவாக விட்டரைத்துப் புடமிடவே சிவப்பாகும்
பெருமை கேளு
வருவான அக்கினில் மாறிடவே மதிபழுக்கும்
வண்மை சொன்னேன்
அறுதவிபோ லழுதாலோ ரசவாத மவர்களுக்கு 39
அருமை தானே.

### துருசுச்சத்து.

காழாமல் றரும்புளடு கண்டரொடை சேர்த்தரைத்துக்
கனிவி னலே
தாழாமற் புடமிட்டுத் தானுக நாவிலொன்று
தாக்க வீரம்
நாளாக அரைத்திட்டு நன்மைபண்ணே சூதமிடு
நாடுந் தங்கம்
பாழாண்டி யாய்த்திரிந்தால் பலிக்குமோ ரசவாதம்
பண்பு மாமே. 40

### மூடர்களின் செய்கை.

சத்துதனிற் செம்பெடுக்க அறியாத வாதியர்கள்
சாச மிட்டுப்
புத்தியிலா தலைந்தலைந்து புகலரிய வாதமில்லை
யென்பார் மூடர்
நித்தியமாய்ச் சோதித்து நிலையான வாதத்தை
நிறுத்த வேண்டுங்
கொத்திதா னழுதாலுங் குணமாகு மென்பார்கள்
கொடுமை யாமோ. 41

### தங்கம் வாதத்திற்கு வித்து.

வித்தென்ன ஜடத்திற்கு விந்துதான் வித்தான
வித்தைப் போலக்
கொத்தென்ற போகத்தில் பணைதவிட்டு அலைவார்கள்
கொடுமை போலப்
பத்தென்ற வாதத்தில் தங்கம்விட்டால் வித்தில்லை
பருவம் போல
நத்தியே யலைந்தாலும் நாய்சுடித்த வெள்ளெலும்பாய்
நல்கும் பாரே. 42

### வெடியுப்புச் சுண்ணம்

வெடிபத்துச் சீனம்ரெண்டு விதமான சாரம்ரெண்டு
விரும்பி ஆட்டி
அடியான புளிசேர்த்து அடைவாக எரித்துஎடு
அன்பாய்ச் சுண்ணங்
குடியான திரிகடுகில் குணமாகச் சேர்த்து கொடு
குன்மம் போகும்
அடிபட்ட நாய்துலைக்கும் அடிமையது போல்வாதி 43
அலைச்சல் தானே.

### வாள சுத்தி.

தாவியெடு தந்திவிரை தோல்போக்கி அவித்திறுத்துத்
தன்மை யாகப்
பாவியாய் விளக்கெண்ணெய் விடுவறுத்து எடு அதனைப்
பதிவு மாகுங்
கூவியாய்ச் சுத்தியது குணமாகு மந்தவிஷம்
கூறு மாகுங்
கோவிலுக்குப் போனுலுங் குணமாகுமோ பிணிகள் 44
கொள்கை தானே.

### அயக்காந்த சிந்தூரம்.

இலகான காந்தவயக் கிட்டமதாம் பலமெடையாக்
திறமாய்க் கல்வம்
விலகாம லேழுநாள் விட்டாட்டு பழச்சாறு
விரும்பி வன்னி
நலமாக நாவிலொன்று சேர்த்தரைத்து உண்ணவந்த
வெட்டை தீரும்
இலவுதான் காத்தகிளி யினிதான பிள்ளையைப்போல்
இருக்கா தாமே.

### நீர்க்கட்டுக்கு வெண்காரபஸ்பம்.

விடுவாதம் செய்வமென்பார் வேதாந்த மார்க்கம்போல்
    விரித்துப் பேசும்
கொடுவாதி வெண்காரங் குணமாகப் பொரித்துவெந்நீர்
    கொடுக்க நீர்கள்
நடுவாதி நீரடைப்பு மலமான மலமடைப்பு
    மிரண்டும் ஓடும்
கடுவாதி தனக்குவே றொத்திரநூல் சொன்னாலும்
    தேயான் பாரே. 46

### கண்ணுக்கு மை.

காசிகட்டி பலமொன்று களிப்பாக்கு அதிற்பாதி
    கண்ணுப் பூவை
வாசனையாய்ச் சாறிட்டு வட்டில்களில்செம்புசொம்பால்
    வழித் திழைத்து
யோசனையாய்க் கண்ணிலிட வடிவான சூந்தம்வெள்
    ளெழுத்துப் போகும்
தாசியற்கு உபசாரம் தடையறவே செய்துமென்ன
    தன்மை தானே. 47

### மகோதரத்திற்குக் குடிநீர்.

கொத்தமல்லிக் கிராம்புமதிற் குணமாகச் சேரிறுத்துக்
    குணவெண் காரம்
பத்துகழஞ் சும்பொரித்துப் பதிவாகப் போட்டுண்ணப்
    பகர்ந்த வாய்வு
பித்தமகோ தரநீர்கள் பிசகறவே வடித்துவிடும்
    பெருமை சொன்னேன்
சித்தம்வைத்தாற் பண்டிதமுந் திறமாகத் தீர்த்துவிடுஞ்
    செல்வ மாமே. 48

ஐரு அரிதாரச் செம்பு.

அரிதாரம் பலமொன்று அன்பான நீலனது
ஆறுஞ்சேர்த்து
பொரிகார மிட்டின்னம் போக்கோடே செய்துப்புச்
சுண்ணங் கட்டி
செரியாகப் புடமிட்டுவே சேர்த்தநவ லோகமது
சேராத் தங்கம்
உரியதிலே செய்திருக்க உலகத்தி லில்லவர்கள்
உண்மை தானே. 49

களங்குகட்டுப் புடமிடக் கூடாதெனல்.

கருவான அபச்செம்பைக் கனிவாக விட்டாலுங்
கருத்துள் ஞானம்
வருகாது வாட்டதுவும் வலுமையாய் இருந்ததென்றால்
மண்ணைப் போகும்
உருகாது களங்கதுவு முண்மையாய்ப் புடமீறி
அதிர்ந்து போகும்
இருநாட்டுப் போனாலுந் தெய்வத்தைப் பாரார்தாங் 50
இருடர் தாமே.

இட்டம்போ லாச்சதென்று இராசத்தைக் கைவிடா
தெடுத்து நீயும்
மட்டம்போல் மதியினிலே கொடுத்துநக்கு தாய்சேர்த்
[து
மயமா பூசித்
கட்டம்போ லப்பிட்டுத் தடியாகப் புடமிறக்கு
அடியாத் தங்கம்
பட்டத்தில் சேர்த்தப்பிற் பதிவாகப் பறக்காது
பாருன் னோரே. 51

## தாதுவிர்த்திக்கு மருந்து.

நொந்தவுடல் விந்தில்லார் நோயுள்ளார் தமக்குமெரு
துண்மையாக
மந்தமது தன்னிலிந் மதிவான ஜாதிக்காய்
பலமுள்ளாகச்
சிந்தையோ யுண்டவர்க்குச் சிவகிந்து அதிகரிக்குந்
தின்னைத் தானே
பந்துஜனை மிருந்தாலும் பெருநோய்க்கு வைத்தியனைப்
பேணுவாரே. 52

## வெள்ளி வித்தை.

கடுவாதி சூதமெடு கந்தியில் விட்டடைசேர்
தொன்மை யாக
நடுவாதி அரைத்துமில் நட்டியதைப் புடமிட்டு
நன்மை யாகக்
கொடுவாதி வெள்ளியம் நூற்றுக்கு ஒன்றிடவே
குணமாம் வெள்ளி
படுகளத்தி லொப்பாரி பார்க்குமோ சொல்லும்
பரிசுள் ளோர்க்கே.

## விக்கலுக்கு மருந்து.

வாழியாய் விக்கலுக்கு வடிவான வெல்லமொடை
வண்மை கேளு
தோழியாய்ச் சாம்பிராணி தூடியாக அரைத்துண்ணத்
தூடியாய்க் கேளு
பாழிரல் வாதவிக்கல் பதிவான பித்தவிக்கல்
பரிசபோமே
வழியத்தின் வேலையைப்போ ததவாது கைபாகம்
உறுதி தானே. 54

### கள்ளுக் குடித்து மயக்கமுண்டாக.

கள்ளான தனைக்குடிக்கில் காமமில்லை வெறியில்லை
கனித்தபுத்தி
உள்ளாக வொன்றுமில்லை உறுதியாய் ஜாதிக்காய்
புசித்து உண்டால்
விள்ளாதும் வெறியாகும் விதமான காமமது
மிகுந்து பொங்கும்
தள்ளாடித் திரிவதற்குச் சாதிக்காய் வலுவாக்கும் 55
தர்க்க வாமே.

### தங்கச் சிந்தூரம்.

இட்டமுட னேமமொன்று இயல்பான சூதமெடை
சேர்க்கத் தின்னும்
முட்டெனவே புகைநீரை விட்டுவைக்க நாளாக
முனிந்து பூக்கும்
கட்டமில்லாக் குப்பியடை நலமாக எரிலோகம்
நாட்டத் தங்கம்
கட்டிநறும் பொன்னுண்டு கட்டாட்டால் பொன்னில்லைக் 56
காணுவாயே.'

### நாகச்சிந்தூரம்.

நட்டியில்லா விங்காசம் நாலாகும் சேரமெடை
நாட்டப் புட்டாம்
புட்டியில்லாப் புகைநீரைப் புனிதமாய் விட்டரைத்துப்
புகலாய்ப் பாவை
சட்டிதனி லெரித்திட்டுச் சரியாக நவலோகந்
தங்க மாகும்
கொட்டிநறும் நேரங்கொட் டவிழல்பின் காப்பூச்சிக் 57
கொள்கை தானே.

இருகக் களங்கு.

விட்டிலபம் பலமொன்று விதமான சீலைவெட்ட
  வீரங் காலம்
மட்டில்லாக் கெந்திபெலை மயமாகச் சேர்த்தரைத்து
  மதித்துக் காட்டம்
இட்டுஅரை வெண்காரம் விதமாகச் சேர்த்துருக்க
  மாற்றுப் பத்தரம்
எட்டிறு விரும்பிறையு [illegible]
  விதமாய்ப் பாரே. 58

அயச்செம்பு.

வேறு.

கருப்பொன்று ஒன்றிரவி காணான்காக்
  கனிந்துருக்கு காத்தமது இடையேசேர்த்து
வரும்பான புடமிட்டு வடிவெண்காரம்
  வகையிட்டு உருக்கியபின் வடிவாம்வீரம்
உருப்பாக இட்டுவெள்ளி மாற்றுபூரம்
  உறுதியாய் நிற்குமது உண்மையாகும்
இரும்பிட்டுச் செம்பெடுக்க இதமாந்தங்கம்
  இதமான வாதமது எய்தும்பாரே. 59

வருடான நாறும்பூ பலமுமுக்கால்
  வடிவான வீரமது நாலிலொன்று
திருடர்தான் அறியார்கள் தைலமாட்டு
  திடமாகக் காய்ச்சியதன் சிறப்பைக்கேளு
செருடர்போற் சுக்கிரனில் நாலிலொன்று
  கெடியாகக் கொடுக்கமதி பழுத்தவாறு
குருடர்தா னயச்செம்பைக் காணமாட்டார்
  குணமில்லை வாதியரே கூர்ந்துபாரீர். 60

அயவுருக்கு.
வேறு.

பண்டுதான் கௌசிளை பகாரிய அயமதுசேர்
பதிவாம் செம்பு
முண்டுமெடு சேர்த்தரைத்து முனிவாகப் புடமிட்டு
முனிந்து சுக்கான்
கண்டுநா லொன்றுசேர் கனிவான தங்கமிது
கருணை கூறு
உண்டறிந்த பூனையுரிதாவ உரியறுந்து விழும் 61
உண்மை தானே.

அயவுருக்கும் துருசும் சேர்க்க.

வண்டரே நிறைநேரே வடிவான அயம்சேர்த்து
வகையாம் நீல
கண்டரிடை சேர்த்தரைத்துக் கனிவாக உருக்கிமதி
கனிய நாளில்
தொண்டரே பொன்றுசேர் துடியான மாற்றுகும்
தோய்ந்து பாரு
உண்டமன முழுதினது போலாகும் செம்புவகை 62
உறுதி தானே.

துருசுக்களங்கில் அயம் சேர்க்க.

சத்தியமாம் கரும்பொன்பலம் சரியான நீலன்செட்டி
சடுதி யாகப்
பத்தியினாற் பழச்சாறு புதிவாக இருசாமம்
பதிவா யாட்டி
முத்திபெறக் காயவைத்து முனிவாகச் சுண்ணிமேற்
கட்டிப் பாரு
புத்தியினாற் கண்டெடுத்தாம் புனிதமாய் வாதமது 63
புகல லாமே.

புடம்போட்டுக் காரங்கள் புனிதமாய் இட்டுரைத்துப்
 புடமு மிட்டு
கடம்போடு உருக்கிடவே கலமான அபம்பிறக்கு
 நல்ல சத்தாம்
இடம்போடு இப்படிக்கு [illegible]மாகக் கழித்து[illegible]
 இதமாய் வாக்கு
அடமாகச் சொன்னேன் [illegible] வரையும்
 அவைபு தலனே. 64

அயச்சத்து[illegible]

சத்தாடு நல்லெண்ணெய் [illegible]
 சத்தித் தேற்றி
முத்தியாய் அரைத்து [illegible] குதமிதே
 மிகையும் பண்ணே
சுத்தியே அரைத்து[illegible] இட்டுரைத்து
 நாடிப் பின்பு
முத்திபெறு வாதியர்கள் [illegible]யாகப் பார்த்த[illegible]
 முறையுமாமே. 65

நாடியே அடியில்நிற்கும் நலமான மருத்த[illegible]
 நல்ல சட்டி
கூடியிடு திலகமிடு குணமாகக் கருக்கிடவே
 குணமாம் செம்பு
தேடிநிறஞ் செவ்வலரிப் பூவாகு மிச்செம்பைச்
 சேரும் வெள்ளி
கோடியாம் வாதமிதில் குணமாகும் பெரியோர்கள்
 கூறினாரே. 66

கூறினேன் மயச்செம்பைக் குணமாக வெள்ளிநால்
 கூட்டி நிற்க
தீறியே நின்றுருக்கு நிலவாமாய் மாற்றேறு
 நேர்மை மெத்த

பாரிவிதை விற்றிடுநீ பதிவாக வுண்டுத்தி
ஞானம் பாரு
ஆறியுண்ட அன்னம்போல் அடைவான ருசிபோல 67
அருந்தாமே.

தாளகச் சத்து.

பட்டு அயம் அரிதாரம் பதிவான சீலனைடை
பதிவாய்ச் சேர்த்து
முட்டு அரை வில்லைகட்டி முனிவாகப் புடமிட்டு
முனிவெண் காரம்
இட்டு அரை காரமிட்டு இனிதாக உருக்குவெள்ளி
மாற்றுப் பத்தாம்
கெட்டுபோன் ஒழிந்தனென்று களிபிலே சொல்லாதே 68
கேளியாமே.
சத்தெடுத்துக் காரமிட்டுச் சரித்து அரைத்தரைத்துத்
தாக்கு ருக்கப்
புத்தியினால் கல்மசங்கள் அற்றவிடும் புகழாகும்
பெருமை மெத்த
சத்தியே வீரமிடு காடியரை யுருக்காவி
மதிய மூக்கும்
வித்துவான் போலிருக்க வீண்பேச்சா லொன்றுமில்லை 69
விரும்பிப் பாரே.

அயத்துக்குக் குடிநீர்.

வெல்லிக்காய் தாணியொடு சேர்சமது யிஞ்சியிடி
கோரம் சட்டி
வல்லபழ யிட்டுடனே வடிவான பாணிவிட்டு
எட்டொன் றுக்கித்
அல்லிபொடி திரிகடுகு சரியாக இட்டுன் று
சபகா சும்போம்

கொல்லிமலை யலைந்தாலும் குணமில்லை யிம்மருந்தைக்
கொண்டு பாரே. 70

### அயச்செம்பு.

நாட்டிலே சவிநாலாம் நல்லதுமு கரைஒன்று
நாடி நாற்றம்
மூட்டியே அரைத்துபுடம் முக்கியமாய் விரமது
முனிந்து ஒன்றும்
வெட்டியே மதிநாலு ஒன்றிடவே மாற்றுமது
உற்றுதி காணும்
விட்டிலிருக் தாதிமுறைமை விள்ளவிட்ட வோரமுரைத்தேன்
விளக்கம் பாரே. 71

### அயச்சிந்தூரம்.

சேர்ந்த அயச்சிந்தூரம் சிறப்பான வன்னிகான்
கொண்டு சேர்த்துப்
பாந்தமாய்க் கையாங்காசர் பதிவாக விட்டரைத்துப்
பாரி லன்று
மூத்தவிளை விக்கலுடன் மூனிவான பித்தவெட்டை
வேகம் போகும்
[கைக்
காந்தரைத்தான் வணக்கிவென்ன கனிவான மருந்தன்
கருதுவாயே. 72

### அயச்சிந்தூரம்.

நாட்டிலயம் பலநாலு நாலாறு கெந்தியது
நாடிச் சேர்த்து
மூட்டிவுலை தானுருக்கி மூவாறு புடமிடவே
முடிவாம் சேர்ப்பு
வாட்டிதிரி கடுகிலிடு வாதரோம் பித்தவெட்டை
வருநோய் போகும்
எட்டதனிற் சுரைக்காய்தா னிதமாகக் கறிக்குதவா
இனிய வானே. 73

### நாகபஸ்பம்.

இருடர்தாம் பலமொன்று இடமான சூதமெடை
சேர்த்துருக்கு
வருடியே புட்டாகும் வலையதுப்பு அரைத்துமேற்
கவசங் கட்டி
நெருடியே புடமிட்டு நோக்கு நீறணியெல்லாம்
சேர்ந்து போகும் [பாக்
குருடருக்குக் கொக்குநிறக் குணங்காணப் பாவலர்
கொள்கை யாமே. 74

### வேதை முடிவு.

நாகமும் செம்பும் சேர்ந்த களங்கு, அல்லது லிங்கமும் செம்பும் சேர்த்துக் கரிபண்ணி, செம்பெத்து வேதைசெய்யெனல்.

பொருட்டான வன்னிளடை புகலாய அக்கினிசேர்
போத வாட்டி
முருட்டாக வில்லைகட்டி முக்கியமாய்க் காட்டமிடு
முனிவாம் விரக்
இருட்டாக வொன்றுடு ஜெயமாக வெள்ளியிடு
இடமாக் துங்கு
குருட்டோ மீதுக்குக் குணமாகக் கல்லினதாங்
கொள்கை யாமே. 75

### மலஜல அடைப்புக்குச் சூர்ணம்.

நெறியான நெற்பொரியும் சேர்த்தகக்கு மிளகோடு
நெறியாய்க் கொண்டு
குறியான வெண்காரம் குணமான பொரிகோரைக்
கூட்டி வெக்கீர்

பிரியாம லுண்டிடவே பெருநோய்கள் மலஜலங்கள்
பிரிந்து வைக்கும்
ளறிவார்கைக் கல்லதுபோ லிருந்து ழைப்பான்
வாதியர்க ளினியவனே. 76

### பேதி எண்ணெய்.

வழுக்கான எண்ணெய்படி வச்ராங்கிப் பால்விட்டு
வகையாய்க் காய்ச்சி
கழுக்கான சிறுகரண்டி நலமாகக் கொண்டிடவே
நாடிக் கேளு [ப்புச்
கொழுக்கான இருமலப்பேர் கொண்டுநின்ற மலமடை
சலமும் போகும் [கா
மழைக்கால விருட்டி லுந்தான் மந்தியுமே கொம்பிழக்
வாறு தானே. 77

### கர்ப்ப சூர்ணம்.

துப்பாவும் பலம்காவில் துடியான பூமேனி
தும்பிக் கையான்
அப்பாவும் பாதமுத லடைவாக இதையுலர்த்தி
ஆண்மை கொள்ள
மெய்ப்பாக வாக்குவரும் மேன்மைதரும் வாயுவெல்லா
மெலிந்து போகும்
உப்பான ததுவிருந்தா லுறுதியாம் வைத்தியமும்
உண்மை யாமே. 78

### ஷை சூர்ணத்திற்கு உப்பு.

பதறியெடு வமைத்துப் பதிவான சாறுசொட்டு
பகர்ந்து விட்டுச்
சிதறமற் கல்லுப்பு சித்திமுப் பணவெடைநீ
சேர்த்து உண்ண

விதியான விரைவாயு வெற்றிபதாம் வெருண்டோடும்
வேதை மெத்தக்
கதறியே யழுதாலுங் கைகாட்டாத் தொழிலுக்குக்
கலக்க மாமே. 79

## பித்தளைச் செம்பு.

### வேறு.

தவளநிற மாருதற்கு வழியைக்கேளு
நாட்டிகமாய்ப் பித்தளைதான் பலமொன்று
கவலாகத் தகட்டின்மேற் கல்லுப்பைத்தான்
கனிவாகப் பூசிபுடம் ஈவிற்செம்பாம்
உவலாக மதிதனிலே நான்குமாற்று
உத்தமனே யிதைவிற்று உண்டுதேறு
அவனிதனிற் றாவிடிப்பார் மிகவுங்கெட்டு 80
அழிவான வாதியர்கள் அடைவுதானே.

ஊராசைப் பட்டுவோர் உண்மைதெரி யாவாதி [யெண்ணி
உலுத்த மாண்பர்
வாராசை அபச்செம்பை வைப்பமென்று எண்ணி
வடிவு கூறி
கோராசை பாயுலகர் கொடுமைபட வேபுலம்பிக்
கொள்கை சொல்லிப்
பேராசை கொண்டவர்க்குப் பெரும்பொய்யைச் 81
சொல்லிமறை போக்குத்தானே.

## குட்டத்திற்குச் சூர்ணம்.

காஞ்சாரம் பட்டைஎடைக் கனிவாகக் காயவைத்துக்
கருணை பாகத்
தாஞ்சாய் வெருகடிதான் நாட்டிகமாய் வெந்நீரிற்
குடிக்கக் குட்டம்

நாஞ்சுமே மண்டலத்தில் நன்றாக வோடிடும்நல்
லெண்ணெயாகா
மூஞ்சூறு பணியாரம் கவ்வினது போலொக்கும்
முடிவு தானே. 82

### துருசுக் களங்கு.

கண்டாது பலமொன்று கனிவான கெந்திகமும்
பூவு ரூக்கால்
பண்டமென அரைத்துருக்கப் பதிவான சத்தாகும்
பாரில் தங்கம்
வண்டரே வழியோடே வடிவான பூரணத்தின்
மார்க்கங் காணப்
பெண்டாட்டிக் கோவாதம் பேசினேன் பொல்லாத
வாதி மாரே. 83

### துருசுக்களங்கு சத்துபிரிக்க.

விலையான சத்தெடுத்தால் வீரமிடு சூதமிடு
மேலாம் பண்ணை
அலையாம விட்டெரிக்க ஆண்மையாய்ச் செம்பாகும்
ஆதி வெள்ளி
கலையாமற் கொடுத்திடவே கனிவான தங்கமாம்
கணக்கு மாகும்
உலையில்மெழு கதுபோலே உருகுவான் வாதியவன்
உலுத்தன் றானே. 84

### க்ஷயத்துக்கு பொன்னுவரைக் குடிநீர்.

சொல்லுபொன்னி னுவரைச் சுகமான வேர்ப்பட்டைத்
தூளாய்ப் பண்ணி
நல்லவெந்நீர் தனிவிட்டு நேர்திரிகா ணண்டிடவே
நண்ணும் பித்தம்

கல்லுமே சயகாசங் கனிவாகப் போகுமது
சத்தி பண்ணும்
வில்லுமே வளர்ந்தாலோ விதமாக அம்புதைக்கும்
விதந்தானுமே. 85

### தாளகபஸ்பம்.

பாகரசம் போனதற்குப் பதிவான தாரமொடு
பற்றி மேலே
வாகாச சீனமது வழுவாகக் கட்டிபுடம்
வைத்துப் பாரு
நாகரசம் நீறிவிடும் நலமான காசசயம்
காடி யோடும்
ஆகாச மேலெறிந்த அடைவான கற்போன்ற 86
அடைவு தானே.

### குட்டத்திற்குப் பூரபஸ்பம்.

பதையாமற் பூரமொடு பலமெடைசேர் சீனமதைப்
பாய்ச்சிக் கல்வம்
விதையாக அரைத்துவிடு விதமான பாணிவிட்டு
வித மாகச்
சதையாக அரைத்துண்ணச் சூதான குட்டமெல்லாஞ்
சூதா போடும்
குதைபறந்த வில்லதுபோல் கூடுவான் வாதியர்கள் 87
குடும்ப மாமே.

### ரோமச் செம்பு.

கழலான ரோமமது தான்பத்துப் பலமாகும்
காரி யொன்று
கழலான துரிசொன்று கனிவாக நறும்புவொன்று
கனிந்த னைத்து

உழலான வுருக்காவி யுயர்ந்தவெகு மாற்றுகு
முண்மை சொன்னேன் [பலன்
விழுக்கே யிறைத்ததண்ணீர் விண்வாதிக் களித்த
வினை தாமே. 88

## வாயுக்குப் பிரண்டை மாவு.

வாயுதான் போவதற்கு வடிவான் திரிகடுகு
வடிவாம் ரட்டி
பாயுமே முப்பிரண்டை பதிவாகச் சேர்த்தரைத்துப்
பகல்மாக் குள்ளே
ஓயுமே யுள்வைத்துக் கனிவாக அவித்துண்ணக்
கனிவாய் நோய்போம்
தாய்தனக்குக் கொடாதவனும் தரிதுறும்பு வரிபவன்
சார்வு பாரே. 89

## அதிதாகத்திற்குக் குடிநீர்.

தவனமாய்த் தண்ணீரைத் தான்வேண்டு நோயாளித்
தன்மை தீரச்
சவனமாய் மோருடனே சலிப்பான முன்னையிலைத்
தாக்கி யுண்டால்
பவனமறு நோயாளிப் பதிவான தாகமறும்
பற்றிப் பாரு
கவனமுடை யார்க்குமே கண்ணுறக்கம் வாராத
கருத்து தானே. 90

## கஞ்சா நெய்.

கோப்பான கோபாலைக் கொண்டுபடி தண்ணியிலே
கூடக் கஞ்சா
தாப்பாக எடையிட்டுத் தாட்டிகமாய் வெண்ணெயெடு
தாக்கி யுண்ண

வாய்ப்பான மண்டலத்தில் வடிவாக கிந்தவு
    மிகவும் பொங்கும்
பார்ப்பானைச் சேராதே பலியாது வைத்தியமும் 91
    பழகிப் பாரே.

## வெடியுப்புச் சுண்ணம்.

கோட்டினெழுத் தாணிபலம் குணமாகப் பொடித்து [வெடி
    குணமாய்க் கம்பி
நாட்டுள்ளே வைத்துபுதை நலமாகப் புடமிட்டு
    நல்கச் சுண்ணம்
வாட்டுகின்ற குன்மவலி எட்டும்விட்டு ஓடிவிடும்
    வண்மை பாரு
காட்டுக்கே எரித்தநிலா கானலுக்கே பெய்தமழை 92
    காணு வாயே.

## சூதகவாய்வுக்குக் குழித்தயிலம்.

பேய்க்குமட்டி தந்திகை பிசாமல் கொடிவேலி
    பிரண்டை சேர்த்து
வாய்க்குமுன்னே தைலமெடு வடிவான காசெடையில்
    வாயு போகும்
காய்க்குமது ஆண்பனையில் காண்பிள்ளை பேபிறக்குங்
    கண்டு பாரு
நாய்க்குணத்தை விட்டாலோ நல்மருந்து வாய்க்குமது 93
    நன்மைதானே.

## பக்கசூலைக்கு எண்ணெய்.

வெங்காரம் கழற்சிகை விளக்கெண்ணெ யொருபடி [யில்
    விட்டுத் தக்கி
சிங்கார விரைபலமாம் சிவகிக்து கொந்திளை—
    சேர்த்துக் காய்ச்சிப்

பங்காகக் கொண்டிட்டே பக்கமுள்ள சூலைபதி
னெட்டும் போகும்
வங்காள மேறுகினும் வாறுகோ லரைக்காசு
வழக்க மாமே. 94

## சீனரசபஸ்பம்.

வாலைரசம் தங்கமெடு வடிவான சினமெனடை
வகையாய்ச் சேர்த்துச்
சாலைபட அரைத்துளரி சட்டியடி நின்றிடுங்காண்
சரியா யுண்டால்
காலைபடுங் குட்டரணங் காரிழையார் மேகவகை
காணா தோடுங்
காலையிலே யுண்டவர்க்குக் கனிர்துமே விந்திறுகுங்
கணக்க தாமே. 95

## பஞ்சதீபாக்கினி லேகியம்.

திரிகடுகு கொத்தமல்லி திடமான ஏலமுடன்
திறமா கத்தான்
குறியாக வறுத்துபொடி குணமான எடைசமனுக்
கூடுஞ் சீனம்
பிரியாமற் றேன்விட்டுப் பிசகாம லவித்துணப்போம்
பித்த வாய்வு
நரிமுன்னே நண்டுகா ணம்போட்ட கொள்கைபித
நாடுங் காலே. 96

## கிராணிக்குக் கொழுக்கட்டை.

அழுக்ககற்றும் பச்சரிசி யதையிடித்துப் பாணிவிட்டு
அதைப்பி சைந்து
பழுக்காகத் திரிகடுகு பதிவான கஞ்சாவும்
பகர்ந்துள் வைத்து

கழுக்காக அவித்துண்ண நாடுதனிற் கிராணியெல்லா
கலமா யோடுங்
கொழுக்கட்டை தலைபார்த்துக்கடித்தாலுங் குணமாகுங்
கூறினேமே. 97

வெட்டைக்குப் பால்.

ஆவினது பால்படியில் அடைவான சீந்தின்விரை
அரைத்து மூன்று
தாவியேநாளுண்ணத் தடைபறவே வெட்டையெல்லாம்
தாமே போகும்
பாவியாய் வந்ததென்ன படுவாய்வு கிராணியெல்லாம்
பாரி லேகும்
மாவிருந்தாற் பணியாரம் வகையாகப் பண்ணுமொரு
மார்க்க மாமே. 98

மூலக்கிராணிக்கு மருந்து.

முக்கண்ணை யுடைத்திளநீர் முனிவான பூண்டில்விட்டு
முயன்ற வித்துத்
தக்கதொடு அதைப்பிசைந்து தாட்டிகமா யிளநீரில்
தாவே மூலம்
விக்கலுடன் கழிச்சலொடு விதமான கிராணியெல்லாம்
வெருண்டு போகுந்
திக்கினிலே அலைந்தாலுந் தேசத்தில் திரிந்தாலுந்
தெரியா வாறே. 99

பித்தவாய்வுக்குக் குடிநீர்.

விருப்பாக காற்றமது விதமாகச் சேரொன்று
விரும்பிச் சட்டி
பருப்புபடி அவித்திறுத்துப் பதிவான திரிகடுகு
பகர்ந்த வேலம்

விருப்பாகச் சரகமும் வகைபலமாம் விட்டொன்றாய்க்
காய்ச்சி யுண்ணக்
குருப்பாகப் பித்தத்தின் வாயுவது குணமாகுங்
குறித்துப் பாரே. 100

## கிராணிக்குக் குடிநீர்.

பூண்டுபடி அவித்திருத்துப் புகலரிய திரிகடு
கஞ்சா விட்டுக் [க்
கூண்டுவகைக் கொண்டிடுநீ குணமாக வெட்டொன்றாய்
குறுக்கிக் காய்ச்சிப் [ப்
பாண்டுவினால் கிராணிக்குப் பதிவாகக் கொடுத்துண்ண
பாரி லேகும்
ஆண்டவனே தெய்வமாம் ஆனாத வன்தெய்வம்
அல்ல தானே. 101

## ரசவாதம் தெரிந்த பெரியோர் செய்கை.

சூதத்தை நீர்போலுஞ் சயமான தாளகத்தைச்
சுண்ணம் பண்ணக்
காதலாய்க் கெந்தகத்தைக் கனிவாக நீர்செய்த
காவ லோரும்
பாதகமாய் வீரத்தைப் பதிவாகக் கண்ணமுதல்
பாலிப் போரும்
வாதத்தைக் கண்டோர்கள் வடிவாகச் சொல்லுமொரு
வன்மை தானே. 102

## காக பஸ்பம்.

சோரமது பலமொன்று சூட்டோச மெடைசேர்த்துத்
துடியா யாட்டி
வீரமது காலிட்டு அரைபாணி புடமிடவே
வெளுத்து நிற்குஞ்

தாய்ப் பணவெடைதான் தேனிலுண்ணக் சொணி
யெல்லாம் போகும் [வகை
ஓரணை தா னொருதக்கு ஒத்தையெரு அழுதா ன
முதவா தாமே. 103

கருப்பூர பஸ்பம்.

காயமதில் நோய்போகக் கனிவான பூரமெடை
கண்டர் சேரு
ஞாயமா யரைத்துளரி காடியுண்ணு திரிகடுகில்
நவித்த நோய்கள்
ஞாயமாய்க் குஷ்டரணம் காலாது சூலைமுதல்
வாட்டி லேகும்
மாயமாய் வாதியர்கள் நலைதெரியாதே பிதற்றி
மாளுவாரே. 104

அயச் சிந்தூரம்.

மெய்யான வீரமயம் மேன்மைபெற எடைசேரு
மிகுதி நீரைக்
கையார விட்டாட்டிக் காதலுடன் கடமிட்டுக்
கனிந்தெரிக்க
அப்பாரத் தெரித்து அடைவாக வுண்ணவலி
குன்மம் போகும்
பொய்யாடும் வாதியர்க்குப் போசனமுங் கிடையாது
புலையர் தாமே. 105

அயச்செம்பு.

வண்டிலது பழமிரண்டு வடிவான கரும்பொன்பலம்
நான்க தாகும்
பண்டிதரே பழச்சாற்றிற் பதிவாக அரைத்துபுட
மிட்டெடுத்துக்

கண்டிதமாய் வைத்துப்பின் காரணமாய்ச் செம்புவகை
    காணக் கேளு
சண்டியா யலையாதே சாஸ்திரத்தில் மனதுவைத்துக்
    கருதிப் பாரே. 106

வாதாடி நீலனெடை வடிவான கெந்தகத்தை
    வடிவாய்ச் சேர்த்துக்
காதாடி யரைத்துவில்லை கட்டிபுட மிட்டுருக்கு
    கனிவாம் சத்து
வீதாடி வெள்ளிவெண் கலம்போல நின்றாடும்
    வேதி யாகேள்
ஊதாரி வாதியவ ரொருபேச்சும் கேளார்க
    ளுண்மை தானே. 107

சத்தெடுத்து நான்கொன்று சரிபாக விட்டுஅரை
    பாணி யாலே
வித்தெடுத்துச் சூதமிடு விரகான பண்ணையது
    வீதமாக
நத்திகட மிட்டெரித்து நாடியெடு பின்புகேள்
    நவில வாதி
பத்திலே பதினொன்று பதிவாக நினைந்திடுவான்
    பாவி யாமே. 108

கடமான அடியில்நின்ற கெடியான தாளெடுத்துக்
    காண்டி யிட்டு
விடமான திலதைலம் விட்டுடனே கறுக்கிவெடு
    விதமாம் செம்பாம்
நடமாகக் கல்வமிட்டு நாடிபுண்டை பண்ணிரவி
    காய வைப்பாய்
அடமாகச் சொன்னதினா லறிவாரோ வாதியர்க
    ளறிவுள்ளோரே. 109

காய்ந்த வுண்டை மேற்கவசம் சுறப்பியரை மேலதனைக்
கட்டித் தானே
வாய்ந்தவுப்புச் சுண்ணமது வடிவாக எடைசேர்த்து
அரைத்துக் கூட்டிச்
சாய்ந்தவுடன் மண்கவசஞ் சரியாகக் கட்டிபுடம்
வைத்தெடுத்தால்
மாய்ந்திடுவான் வாதிபர்கள் மாயமாய் நூலறியா
வாதிக் காமே. 110

பத்திரமாய்ப் புடம்போட்ட பதிவான சரக்குளடை
பாரிற் காசம்
சித்திபமாய் வைத்திருக்க நேரான செம்பாகும்
நேர்மை யுள்ள
பத்திரமாய் மதிநாவில் பதிவாக வொன்றுகொடு
பசி லேழாகு
சித்திரத்திற் சோழியதனை வைத்தெழுதக் கூடாத
திறமை தானே. 111

வைத்தேழு மட்டத்தில் மயமான தங்கமெடை
மருவிச் சேரு
வைத்துஅடி தகடாக கல்லஉப்பு நான்குபலம்
கலமாஞ் செங்கல்
வைத்துமே புடமிடவே மயமாக அருகுகட்டி
மயமாந் தங்கம்
வைத்தலத்தில் செல்வியங் கனிபோல வாதமது
கணக்கு மாமே. 112

காரியத்தை விட்டுதக் கனிவான மட்டமதைக்
கல்லுப் பிட்டு
வாரியாய்ப் புடமிடவே வகையாகுந் தங்கமது
இறங்கும் பாரு

காரியாய்ப் பாகமுமாம் நாடிமிகக் கைபாகம்
நாட்டு வோர்க்கு
ஆரியக்கூத் தாடுகினுங் காரியத்தின் மேலிருப்பார்
அளவு காணே. 113

## மூடஞானிகட்கு புத்திகூறல்.

பட்டினியா யிருந்துபின்பு பதிவான ஞானத்தைப்
பார்த்திடாதே
கெட்டிமனம் நிலையாது கிருபைதருஞ் சுழிமுனையுங்
கிட்டிடாது
வட்டிக்குக் கொடுத்துவைத்து வடிவான பொன்னை
மாற்கமாக [விற்று
செட்டிதனை அடிக்காதே செம்பொன்னைத் திருடுவோர்
செய்கை யாமே. 114

## அயச்செம்பு.

நயத்திலே அயமொன்று நல்லரிதா லாகும்
நாடிச் சேர்த்துப்
பயத்திலே உருக்கிமெள்ளப் பதிவாகத் தகடடித்துப்
பாரிற் கெந்தி
மயத்திலே அரைத்துத்தட்டி மயமாகப் புடமிட்டு
அதையுருக்கு
பயத்திலே சொன்னதும் பலியாது ரசவாதம்
பாருளோர்க்கே. 115

உருக்கிடவே சத்தாகும் உருவான வான்கிலென்று
உயர்ந்த வீரம்
பெருக்கவே சேர்த்தரைத்துப் பிசாசம விட்டுவடை
யிட்டெரிக்க

நெருக்கியே பெருமத்து நிலையாக அடியில்நின்ற
நிலையாம சத்தை
வெருக்கியே சேர்ந்தால் விதமாகப் பூக்குமந்த 116
விதமு மாமே.

சத்திரத்துச் சட்டிசரி பாகவிட்டு
கல்லிலன்னெனப் தன்னைக் குத்தி
சுத்தியே சுருக்கியென்ன கலமாகக் காரமிட்டு
காடிச் சேர்த்து
வித்தையா யுருக்கிடவே விதமாகச் செம்பாகும்
வெள்ளி தானில்
அத்தைக்கு மீசையது முழுக்கச்சித் தப்பன்முறை 117
யறிய லாமே.

காதுக்கு ஒன்றிடவே கல்மான மாற்றைந்து
காட்டி மாகும்
பாவிக்குந் தக்கமெடைப் பதிவாகச் சேர்த்துகடை
பாரில் விட்டு
செதுக்காம் வித்தைநீ செயமான பூரணத்தைத்
தொழுது போற்று
காதுக்கே செநாட்டான் கைத்திடிலோ தாரவெரி 118
கணக்கு மாமே.

கல்பலமா யெடைசேரு தலைத்தி விட்டரைத்துக்
குருவை யாக
விலைகட்டுத்தி விட்டெரிக்க விப்பாக வறியது
உயர கிற்குஞ்
இவைதனை வழித்தெடுக்கச் செப்பான வாலைரசம்
இருமாகும்
தலைசொரத்த வன்கொள்ளி தான்வைப்பா னதுபோலச் 119
சாற்றினேமே.

### தாளகத்துக்குச் சருக்கு.

முசப்பான முரந்துஇலை முக்கியமாய்ப்பிழிந்துவைத்து
முதன்மை கேளு
வசப்பான தாளகத்தில் வடிவாக இரசமும்
வகையாய்த் தானே
உசப்பாக சருக்கதுவாம் உடன் போட நவலோகம்
தங்க மாகும்
புசிப்பாகுந் தபோதனர்க்குப் புனிதரச வாதம்வந்து 120
புகலுங்காலே.

### நாகச்செம்பு.

தங்காமற் சோரமெடு தாட்டிகமாய்த் தேரெடுத்துத்
தாக்கி யாட்டு
பங்காகக் கரியில்நின்று பதிவாக ஆடுமது
பதிவாம் செம்பு
தங்காதே கொடுத்திடுநீ தாட்டிகமாய் நவலோகந்
தங்க மாகும்
வங்காள மருவுமஞ்சள் வடிவாகக் குளிப்பதுபோல் 121
மருவுந் தானே.

இட்டமுடன் வாதியவர் திறமான மூலிகையில்
தேடிப் பார்த்துப்
பட்டமது போற்பறந்து பதிவான வாதமது
பகர்ந்து தேடி
விட்டகுறை யாலலைந்து விதமாகக் கைபாகந்
தோணு தாலே
கட்டழகி போல்தவித்துக் காணுத அவிசாரி 122
கணைக்குமாமே.

## அயக்காந்த சிந்தூரம்.

அலர்ந்த அயம் பலஞ்சேரு அடைவான அங்குசமும்
ஆதிசேர்த்துப்
பலந்தலை கல்வமிட்டுப் பதிவாக அரைத்திரண்டு
பத்தக் காட்டம்
நலந்தபுட மிட்டிடுநீ காலமைநா ளுண்டிடவே
நலமாம் வாய்வு
குலந்தனக்குக் கோடாலி யென்கிடதல் வாறெருக்குங்
குணமுமாமே. 123

## தாளகச் சுத்தி.

சிலைமாது பலமதுவாம் சிறந்தசுண்ண மீதுள்வைத்துத்
திட்டமாக
அலையாமலடுப்பில்வைத்து அடைவாகப் பனிரண்டு
சாமந்தீதான்
குலைபாம லெரித்தெடுத்துக் குணமாக க்ஷயகாசங்
கொடுக்க நன்றும்
விலைமாதர் தனைக்கண்டு வேடிக்கைச் சொன்னபுத்தி
விதமுமாமே. 124

## பூரத்திராவகம்.

தேனான பூரமது திடமாகப் பத்தாருஞ்
சிறப்பாஞ் சீனம்
வாளான இரண்டுபத்து வடிவாக நிறுத்துஅடை
வாலை சட்டி
தானாகப் புகைநீரைத் தாட்டிகமாய் வாங்கிடவே
எல்லாநீரும்
பாஷாண்டி பாய்திரிந்தாற் பலிக்குமோ ரசவாதம்
பாருளோரே. 125

கண்ணான புகைநீரைக் கருவிபெற வடித்திறக்கக்
காரமாகும்
கண்ணான லிங்கமுதல் நலமான வீரமுதல்
தாரம் நீறும்
வண்ணான்போல் வெளுத்ததுவும் வடிவாக நீறுமெக்காண்
வழக்கஞ் சொன்னேன்
பெண்ணானை தனில்நின்று பேதமிலை யல்லவர்கள்
புரட்டர் தாமே. 126

## அயச்செம்பு.

சேர்ந்தியபச் செம்புரைப்பேன் செம்மான கரும்பொன்று
சேருமென்று.
பாதியெடு நீலமுடை பாய்ச்சியுகர பழச்சாறு
பகலாம் போது
வாதியவன் சொன்னபடி வழக்குரைப்பன் முட்டாளா
வாதி மாதே [ம்
நீதியெடு உண்டையபண்ணு நேராகக் காயவைத்து
நிலைமை கேளே. 127
புடம்பெரிதாய்ப் போட்டெடுத்துப் புகலரிய வெண்
பாஷை சேர்த்துத் [காரம்
இடமாகச் செல்வல்லி செப்பரிய சாறுவிட்டுச்
சாமமரட்டி
கடமாகப் புடமிடுநீ நல்லருகை தன்னிலிட்டு
உளக்கச் சத்தரம்
அடமாகச் சொல்லிவைவான் அவிசாரி வாதியென்றே
அறியலாமே. 128
தெம்பாகச் சத்தெடுத்துத் திடமாகப் பாதிவிடு
காரந் தன்னை
வம்பாகக் கல்லுமிழி வடிவான செல்வல்லிப்
பூச்சாறுதே

உம்பாக அரைத்துப்புடமிட்டிருக்க உருபெது
 ஓடுஞ் சக்காம்
கொம்பிலே தேனிருக்கத் துணமுடனே வாணிச்சிக்கத்
 கொள்ளை தானே. 129

காடுதனிற் சத்தெடுத்து நலமாக வண்டியிட்டு
 நாடிக் கல்வம்
ஓடுதனில் வைத்துப்புட மூன்றுப் போட்டிருநை
 பிட்டிருக்கப்
பாடுதனில் நல்மசங்கள் பதிவாக அற்றவிடும்
 பாருநோர்க்கு
ஏடுதனி லெழுதிவைத்த இதமான மைபாக
 விபல்பு தானே. 130

பத்திடவே சங்கத்துப் பதிவான காரமிடு
 பரிந்துநல்லாய்
முத்திடவே அரைத்திட்டு முனிவாகப் புடமிட்டு
 மூகந்துருக்க
சத்துவெள்ளி வெங்கலம்போற் சரியாகப் பதம்பாரு
 சார்ந்துநீயும்
வித்திடவே சடத்துக்கு விந்துவித் ததுபோல
 விளம்பினேனே. 131

சத்துதனைப் பிரிக்கவகை சரியாகத் தான்கேளு
 சமர்த்தாய் நல்லாய்
புத்தியினாற் சத்துவகை பிரியாதால் லோகத்தில்
 புகுத மாட்டார்
சித்தமுடன் நிசுட்டு நேலக்கு போகாமல்
 நேக்கிச் செம்பு
பத்துக்கு யரியாக பாவிபர் போல் நுலவர்கள்
 வாதி தானே. 132

### சத்துப்பிரிக்கும் வகை.

திரிவான சத்துவகை விபரமாய்ப் பிரிக்கும்வகை
விளம்பக் கேளு
சரியான வீரமிடு சாரித்துச் சூதமிடு
தாக்கச்சூடன்
நெறியாக விட்டரைத்து நேரான கடத்திலிட்டு
எரிக்க வேணும்
நரியிரைச்சல் கடல்முட்ட நாம்களோடேசம் வசனமிதை
நாடிப் பாரே. 133

### வேறு.

அடியில்நின்ற மருந்தெடுத்துக் காரமிட்டு
அடைவாகச் சட்டிதனில் தைலத்தாலே
வடியாகச் சுருக்கிட்டுக் கரிக்கப்போடு
வண்மையாய்க் கரிபோலத் தூளுமாகும்
கடியான குகையிலிட்டு உருக்கச்செம்பு
நானறிந்த படிசொன்னேன் நாட்டிலோர்க்குப்
பிடிவாதந் தான்போலப் பேசவேண்டாம்
பேசரிய அயமதனைப் பேணிப்பாரே. 134

தங்காமற் குகையிலிட்டுத் தாக்குருக்கு
தாட்டிகமாய்ச் செம்பாகும் தீயில்தாக்கு
பங்காக நாலிலொன்று பாகமாகப்
பதிவாகக் கொடுத்துருக்கு எட்டுமாற்று
சிங்கார மாய்விற்றுச் செலவுசெய்து
சிறப்பாகப் பூரணத்தைத் தொழுதுபோற்று
உண்ணாமல் தின்னாம லிருப்போர்க்குத் தான்
உரம்பலமதாக வுரைசெய்தேனே. 135

வேறு.

இட்டமுட னயச்செம்பை விதமாகப் பாகமதா
யின்ப மாகப்
பட்டசளப் பட்டுநீ பதிவாக வைத்துநீ
பதிவு கூர்ந்து
இட்டமுடன் செய்தாக்கால் நலமாகு மிதன்பெருமை
நன்மை மெத்த
கட்டமுறி தனைப்பார்த்துக் களித்தேகின்
கனியாமோ வாதிமாரே. 136

சூபத்திற்குவாந்திகொடுக்க.

கனிவாக சூபம்போகக் கனிந்துநல்ல காட்டெருக்கம்
பாலைக் காயத்
தனியாக வைத்துபணம் தாட்டிகமாய் போட்டுநல்ல
தண்ணீ ரிட்டுப்
பனியாக் கரைத்துபடி பாதியுண்ண வாந்தியது
பகருங் காலை
இனியதுதா னிருக்கவே பேராசைப் பட்டகதை
யெய்துந் தானே. 137

காத்தறிந்து அரஞ்சேரு கறியெடுத்து அவித்திறுத்து
கனிந்த சாரம்
பார்த்தறிந்து உண்டிடவே பதிவான வாந்தியது
பருகிநிற்கும்
சாத்தறிந்து சயகாசம் சுவாமுதல் பித்தமெல்லாம்
தானே போகும்
பார்த்தறிந்த பெரியோர்க்குப் பண்டிதமும் வாதனித்தி
பதிவு மாமே. 138

மெள்ளவே பூரமெடை விதமாகச் சேர்த்தரைத்து
யிருந்த உண்டை
கள்ளமறக் காயவைத்துக் கனிந்துமே வளையலுப்புக்
கனிவாய்க் கட்டித்

துள்ளவே சுண்ணாம்பில் துடியாக வுள்வைத்துத்
தோய்த்துப் பாரு
கள்ளநரி சந்தைக்குக் கனிவாக போனகதை
கருணை யாமே. 139

வழுவிலா வாலையென்ற வடிவான அடுப்பிலிட்டு
வண்மை யாக
நழுகாம லிருசாமம் நலமாக மேல்முடி
நாடித் தானே
கொழுகாம லெரித்துமெள்ள குணமாக வாங்கிடுநீ
குருசெப் பாகும்
கழுதையைத்தான் கட்டிவைத்துக் கனிவாக ஓதுவித்த
கதைபோ லாமே. 140

கழுப்போல க்ஷயம்போகும் கனிவான காசமுதல்
காணு தோடும்
பழுப்போலசிலேற்பனங்கள் பண்பானதான் ஊறும்
பதறி யோடும்
இழுப்போல புளித்தண்ணு இதமாக உண்டபா
ரினிபா லோடு
தொழுப்புகுந்த ஆடதுபோல் துடிப்புழுக்கை
போட்டகதை அய நுமாமே. 141

விடுவாத சிலேற்பனமும் விதமான நோய்களெல்லாம்
வெகுண்டு ஓடும்
படுகுழியி லானையது அடிதவறி விழுந்தகதை
போலே யாகும்
கொடுக்காத பண்டிதமுங் குணமாகுமோ விதனைக்
கூறுவாரோ
கடுகுசிறுத்தாற் காரம் காதலாய்ப் போமோதான்
கருதுவாயே. 142

## அயம் துருசுசேர்த்துச் செம்பெடுக்கும் வழி.

கரிவான பொன்னென்று காணவே நீலமென்று
காதற் பூரம்
பரிவான மூன்று - எடைப் பழச்சாறு விட்டரைத்துப்
பகலாம் நேரம்
உரிவாகவுண்டைபண்ணி உறுதியாய்ப் புடமிட்டு
உருக்கிப் பாரு
கரிவாலைக் கொண்டாழும் கலமாகப் பாராதீர்
காட்டுளோமே. 143

கனத்தவெகு கரியாகு முறுதியா முருக்குகரி
யுடன்போலாகும்
இனத்துடனே உருக்கினது இதமாக ஆறிட்டு
இன்பமாக
கனத்தநீ யரைத்துபுடம் கனிவாக இட்டுருக்கு
கனிந்த சத்தாம்
கிணற்றில்நின்ற தவளைக்குக் கிட்டுமோ செம்பதுவும்
கேள்வி போமே. 144

பஞ்சமுடன் சத்துக்குப் பதிவாக நான்கிலொன்று
பரிந்த வீரம்
கச்சிவா யிட்டுரசம் நான்கிலொன்று பண்ணையிடு
நாடிச் சேர்த்து
வைச்சபடி யரைத்தகட மிட்டெரித்து வடிவாக
எடுத்துப் பாரு
துர்ச்சனர்க்கு வாதமது துடியாகக் கிட்டாது
தொடர்ந்து பாரே. 145

எடுத்து அயக் காண்டமிடு இதாகத் தைலமிட்டு
 இதமாய்த் தோய்த்து
அடுத்து நீ சுருக்கிட்டு ஆறிப் போச்சுருக்கிட்டே
 ஆறுஞ் செய்பு
விடுத்துமதி நான்குக்கு விதமாக வொன்றிடுநீ
 னட்டு மாற்றும் [மிடல்
அடுத்தவரைக் கெடுக்காதே அன்னமிட்டோர்க் கன்ன
 அருமை யாமே. 146

வங்க ரசபஸ்பம்.

வங்கமது சேரொன்று வடிவான வைடூதம்
 வைத்து ருக்கிப்
பங்கமது அரைத்துகடம் பதிவாக இட்டுவரி
 பதிவாய் மேலே
திங்களைப்போ லேறிவிடும் திடமான பற்பம்வெண்கீ
 தீர்க்க மாகும் [திருக்க
உங்கள்கையில் குருமுடித்து உறுதியாய்க் கொடுத்
 தனமையாமே. 147
அரங்காக மேலேறும் அடைவான பற்பமதை
 வழித்து நீயும்
பரங்காக அடியில்நின்ற பதிவான மருந்துடன்
 பாதி சேர்த்து
உரங்காக அரைத்துவில்லை யுறுதியாய்க் கட்டிகடம்
 உண்மை யாக
குரங்குகொஞ்சும் போல்வரதிக் கூத்தறு மாமெந்தக்
 கொள்கை யாமே. 148

தாளக பஸ்பம்.

களிவாகக் கடமிட்டுக் காதலா யெரித்திடவே
 களிகள நீற்கும்

முனிவாக அதைபரைத்துத் தாளகத்தின் மேலப்பி
முனிய நல்லாய்
தணிவாகப் புடமிட்டுத் தாட்டிகமா யெடுக்கவது
குருவு மாகும்
அநுமார்கள் பூமாலை யதையெடுத்துப் போட்டகதை
அறிய லாமே. 149

### குருகோடுக்கும் எடை விபரம்.

ஆடகமா மொன்றுக்கு அடைவாக ரவியொன்று
அறிவாம் வெள்ளி [கொடு
நாடகமாய்க் கொடுத்துருக்கித் தாட்டிகமா யொன்று
தாவப் பத்தாம்
நாடகமாய் விற்றுண்டு நலமாக ஞானவழி
அடுத்துக் கூடு
சேடனுக்குக் குரங்கதனைச் செயமாகத் தான்வளர்த்த
செய்கை யாமே. 150

சத்திசிவம் வாயுவினுற் சத்தாகும் சத்தையெடு
தனைப்பி ரித்து
முத்திபெற மதியிலிடு முனிவான மதிபழுக்கு .
முன்னே சொன்னேன்
வெற்றிதரும் புடமிறக்கும் வேதையா மிதுலகுவு
விளையும் பாரு
பற்றியே புற்றிலடி பாம்புதான் சாகாது
பரிந்து பாரே. 151

அரன்சோரம் பலம்நான்காம் ஆதிசத்தி அரைப்பலமாம்
அரைக்கால் கண்டர்
வரம்படவே சாமமரை வகையாகக் குகையில்வைத்து
அதையுருக்க

மூஞ்சேரச் சத்தாகும் முனிவாகக் கருவாகும்
முனிந்து பாரு
பிறர்சோரம் பெண்வேலை செய்தாலும் பிறர்கணவர்
பிரிய மாமே. 152

நிதியிரண்டு நேராகும் நேரான செம்பதனை
நேர்ந்துருக்கிப்
புதிதாகத் தகடடித்துப் பூசிடுநீ சத்தியதைப்
புடமு மைர்த்து
நதியாகக் குருவாகும் நாடுகைக் கிரணன்றில்
நல்ல தங்கம்
மதிகாதற் பூசாரி மதிகாகம் போல்நினைப்பாம்
வண்மை தானே. 153

## மூலத்திற்கு மருந்து.

வேயீன்ற அரிசிபடி விதமான திரிகடுகு
விட்டிடித்து
தாயீன்ற பால்விட்டுத் தாட்டிகமாய்க் காய்ச்சியுண்ணத்
தமுகா மூலம்
மாயீன்று ஓடிவிடும் பயமான முளைமூலம்
மாய்ந்து வீழும்
சீயென்ற காடுதனிற் செந்நாயுந் தங்காது
தீர்க்க மாமே. 154

## நோறுக்குவெள்ளி.

தகடுமதி சுரும்பு அரை தாட்டிகமா யைந்துபுடந்
தானே போட
விகடமதா யுருகுமது வீரமது நான்கிலொன்று
விரும்பி யிட்டு
நகடாக வண்டிவிடு நலமாக வுருக்குவெள்ளி
நான்கு மாற்றும்

பகடுழுகும் வாறதுபோல் பலிக்குமது ரசவாதம்
பாருமோர்க்கே. 155

வாதியர்க ளிக்தவெள்ளி வடிவாக ஆம்பாமல்
வகைகாணுமல்
வாதிவங்கந் தனைபிட்டு உருக்செம்பு சேர்த்தெடுத்து
உருக்கிப் பார்ப்பார்
சோதிபுடம் போட்டெடுக்கத் துப்பாவா யோடிவிடத்
துயரம் போலாஞ் [பர்
சேதிமிகச் சொல்லிடுவர் சுட்டெனென்பர் பட்டெனன்
றின்ன மாமே. 156

நோறக்குவெள்ளிக்கு அயமும் கருதும்சேர்த்தல்.

இரும்புளடை கெந்தகஞ்சே ரிதய[illegible]னிலெனடை
இட்டு ஆட்டி
வரும்புகளா யாடிகுகை வடிவ[illegible] இட்டுருக்க
வடிவு சத்தாந்
திரும்பமதி தனிவிடுக திடம[illegible]ற்றெழு
சிறந்து நிற்குக்
கரும்புகட்டு கிடக்கையிலே கனி[illegible]தழும்பு நகருமது
கணக்கு மாமே. 157

வேதத்தை யறியாதார் வீண்வாதி சுட்டலைந்து
திரும்பி நொந்து
சூதத்தைக் கட்டும்வகை சுருதிநூல் தனியிருக்கத்
தேய்ந்து பார்த்து
நாதத்தை விட்டுமே நலமாகக் கட்டரசம்
புகைந்து ஓடக்
காதற்ற ஊசியது காணமற் கடைவழியே
காணுவாரே. 158

திருகச்செம்பு.

நாறியெடு ஏவலாள் நலமாக எடைநீலன்
    நாட்டு ருக்கு
கூறியெடு சத்தாகுங் குணமாக இதைப்பார்நீ
    கொடுக்க வெள்ளி
மாறியெடு தங்கமாம் மயமான பூரணத்தில்
    மதித்து நில்லு
ஏறியெடுத் தேணியைப்போ விதமாக வாதிசொல்வா
    ரின்பமாமே. 159

வேறு.

திமிர் குட்டத்திற்கு எண்ணெய்.

இலகமுடன் சித்தெண்ணெய் ஆவின் பாலாம்
    இடமான நெய்வகைக்குச் சேரு ஒன்று
கலகமிலாக் கற்பூரம் வேலி வேரம்
    களஞ்சிநா லரைத்திட்டுக் காய்ச்சி யுண்டால்
பலகலையாந் திமிர்குட்டஞ் சொரிமே கங்கள்
    பறக்குமே புளிதள்ளி யுண்டு பாரு
இலவுதான் காத்தகிளி போலாம் வாதி
    இனிதான பண்டிதத்தி னியற்கை பாரே. 160

வேறு.

செத்தசெம்பு ஓடாவிதம்.

நீதியாய்ச் செத்தசெப்பு நிலையாக ஓடாமல்
    நிலைக்கக் கேளு
வாதியாந் திலதமிடு வடிவான காரமிடு
    வறுத்து ருக்கச்
சாதிபெற ஓடாது சரியாகச் செம்பாகுந்
    தன்மை பாரு
வாதிமகன் வைத்தியத்தின் வளமறிவான் பிணியாளி
    மருந்து உண்ணே. 161

### காதடைப்புக்குத் தைலம்.

காதடைப்புச் சிப்பாய்ச்சல் கனிவாகக் குத்தலொடு
கனிந்து போக
தீதுமூறு புகைநீரில் கிம்ப எண்ணெய் விட்டுசெவி
தீப மைத்தால்
பாதமுறு கிரிநாளில் பதிவான செவிநோய்தான்
பாரிலேகும்
வாதம்வரு ஞானம்வரும் வடிவாக வில்லாத
வழக்க மாமே. 162

### வயிற்றுவலிக்குப் பஞ்சலவண பஸ்பம்.

அஞ்சுப்பு எடைசேர்த்து அடைவாகத் திரிகடுகு
அதில் முக்காலாக
தஞ்சமுறக் கல்வமிட்டுக் காட்டிகமா யெருக்கம்பால்
தன்னாலாட்டி
வஞ்சமறப் புடமிட்டு வயிற்றுவலி தான்கொடுக்க
வலிநோய் போகும்
இஞ்சிதின்னுங் குரங்குபோ லெளிபரச வாதிமன
மியங்கு வானே. 163

### வலிகுன்மத்திற்கு மருந்து,

பூத்திருந்த பூபலம்நால் புகலரிய பன்னிரண்டை
போட்டரைத்து
காத்துபுட மிட்டெடு காரமாங் கசிவறுமே
காணவுண்ண
நேற்றுவந்த வலிகுன்மம் நிலைபான எட்டும்போம்
நிலைத்துப் பாரு
காய்த்தமரந் தனிலேவரும் கல்லெறிந்த பாவனைபோல்
காணு வாயே. 164

வேறு.

## மூலத்திற்கு நாகபஸ்பம்.

வானகம் பலமொன்று சூத மொன்று
வடிவாகக் கல்வத்தி லிட்டுத் தானும்
நானுக லிருசாமம் புகைநீர் விட்டு
நன்றாக அரைத்துளரி சிந்தூரிக்குங்
கோனுக மூலமது குடிவிட்டோடுங்
குணமாகும் நல்மனதாய்க் குருவைக் கா௫
தானுகக் கனியாத பழத்தைத் தானுந்
தடிகொண்டு அடித்ததைத் தன்மை பாரே. 165

## துருசு அயக்களங்கு.

காயான துரிசினொடை கெந்தி சேரு
கனிவான பூவெடைக்குக் கருப்பி சேரு
வாயான புடமிடுநீ காரங் கூட்டி
வடிவாகப் புடமிட்டு உருக்கச் சத்தாஞ்
சாயான வீரமிட்டு மதிப்பி விட்டுச்
சரியான மாற்றுறு காணும் நேர்மை
வாயாலே சொன்னதினுல் தாயாரிட்டால்
வடிவாகும் புடமிறங்கும் வண்மை தானே. 166

## வாதகுன்மத்திற்கு மருந்து.

சொல்வளைந்த திடலதுவும் பலமும் பத்து
சுருதிபெறு வெண்காரி வெடியுப் புத்தான்
நல்விளைந்த அஞ்சலது காய்ச்சமுன்றும்
நலமாக இடித்துசட்டி தனிலெரிக்க
மெல்வளைந்த அதுபோலச் சுண்ணும் பாகும்
மேன்மைபெறு வாயுகுன்ம மோடிப் போக
வில்வளைந்தா லப்புதான் தைக்கும் பாரு
மேன்மைபோல் முனிவோர்க ளுரைத்த காமே.

## தாம்பூலந் தின்னக்கூடாதெனல்.

பாக்கதிகம் போடபித்தம் பாகமுட னுள்ளுறைந்து
பரிந்து மேலே
வாக்கினிலே சோபையுண்டாம் வடிவழியும் விந்து [நஷ்ட
மாகும் பாரு
நோக்கியே தம்பலத்தில் நுட்பமாய் வெறியாகும்
தன்மை சொன்னேன்
ஆக்கம்வருமென்போர்க்குத் துணையாகுந் தரித்திரியத்
தொன்மை தானே. 168

பிரியாத சத்தெடுத்துப் பிரித்திடுநீ செம்பாகும்
பெருமை யுண்டாங்
குரிபான வெள்ளிதனில் குணமாக இட்டிடவே
குணமாந் தங்கம்
அறிவாலே வாதியர்கள் அடைவாகப் பார்த்திடம்
அறிந்து சொன்ன
கரிவாலைக் கொண்டாழும் பார்ப்பதுபோல் வாதமதை
கணிலொ ணாதே. 169

## சீனரசபஸ்பம்.

மல்லிகைப்பூச் சாறுவிடு மயமான சீனரசம்
ஆட்டி யாட்டி
மெல்லவதை யரைத்தெடுநீ மேன்மைபெற அடியில்நிற் [கும்
மேக மெல்லாம்
வல்லமையா யோடிவிடும் வடிவான குட்டாரணம்
வகையாய்த் தீரும்
அல்லலற்ற மெய்ஞ்ஞானி அடைவான வாதமதை
அறிவார் தாமே. 170

### செத்தசெம்பில் ஐயநீர் விட்டரைக்கப் பச்சைநிறம் ஓடாது.

உருக்கினத் துக்கரியெடுடன் பொரித்துளைடைதேரை
இட்டு ஆட்டப் பில்
பெருக்கியே ஜலமாகும் பெருமைபெறச் செத்தசெம்
பேசா தாட்டி
நெருக்கியே யுருக்கிப்பார் நேர்மைதரும் பச்சையது
நிலைத்து ஓடா
இறுக்கியே யிருந்துவிடும் இதமான மதிபழுக்கு 171
மின்ப மாமே.

### அயச்செம்பு.

காந்தஅரப் பொடிநீலன் கனிரம்பூ பழச்சாறு
கனிய ஆட்டிச்
சாந்தகுண மாயுருக்கச் சத்தாகும் ஆதிகொடு
தனியுருக்கு
பரந்தமுடன் பிரித்துவெள்ளி பதியஇடு மாற்றேழு
பகர்ந்து பாரு
மான்றேனி ஞசனத்தின் மயமாக இருந்திடுவார் 172
வாதி யோரே.

### நாகபஸ்பம்.

புண்ணாக்குச் சேரொன்று புசங்கமது உள்ளிட்டுப்
புடமும் போடு
கண்ணாக வெடுத்திடுநீ கலமாக நீறிசுண்ணம்
கனின்று நிற்கும்
குண்ணாகத் திரிகடுகில் குணமாக வுண்டிபார்
குட்டந் தீரும் [வர்கள்
உண்ணாக்கை யறுத்திமெள்ள அண்ணாக்கில் செலுத்தி
உலுத்த ராமே. 173

## வேடவாதிகள் புரட்டு.

காவிலே குறடிடுவர் காவிதனை நனைத்துமே
கனிந்து வேடங்
கோவியே போட்டிடுவர் குணமான வாதமது
தெரியு மென்பர்
தாவியே பறித்திடுவர் தர்க்கமாய்ப் படிகமணித்
தரித்துக் கொள்வர் [தல்
வெளிதனிற் காட்டோணுன் விருப்பமாய்த் தலைபசைத்
மெய்யிதாமே. 174

## வேறு.

### சீனரசபஸ்பம்.

சீரண்டி பாதரசம் பலமு நான்கு
நேரான உப்பிலிடு எரித்துப் பார்க்க
காரண்டிப் பதங்கமெடு சினஞ் சேர்க்கக்
கனிவான தும்பைமலர் சாறு நன்றாம்
வாரண்டி ரோகமெல்லாம் வடிந்து போகும்
வகையாகப் பித்தமது வடிந்து போகும்
ஊரண்டித் திரிந்தாலே வாதமாமோ
உழைத்தாக்கால் வாதம்வரு மூண்மை தானே.

இக்கினிலே யலையாமல் தெருவெல்லாந் தேடாமல்
இட்டமாகத்
அக்கியே அயச்செய்பு சருதியினி லுள்ளபடி
சொன்னேன் பாரு
மக்கிக்கப் படிகாமல் மயமான கைபாகத்
திடனே பாரு
பொக்கைவாய்ப் பொரிமாவைப் புலம்பியே யிச்சித்த
புதுமை தானே. 176

### காக்கைவலிக் கெண்ணெய்.

எரண்டமெண்ணெய்படி யிதினடையா மாவின்னெய்
யிதற்கு நான்காம்
பாரண்டம் பத்தாகும் பதிவான நிலப்பனையின்
கிழங்கு தானும்
வாரண்டம் வஜ்ராங்கி வடிவாக இட்டெரி
வகைநீர் போகும்
காரண்டம் கத்தினதால் காதறுந்து புலம்புமவர் 177
கருணைதானே.

### லிங்கம் கட்டு ஐயநீர்.

கண்ணாகச் சீனமெடு நலமாக ஆதிடவே
நன்றாம் சுண்ணம்
பண்ணாக வடமேடைசேர் பதிவாக அரைத்தூதி
பனியில் வைக்க
நண்ணாக ஐயநீராம் நாடியே வன்னிகட்டும்
நல்ல வேதை
வண்ணானைச் சேர்ந்தாக்கால் வடிவாக வெளுப்பாகும் 178
வன்மைதானே.

### தந்தவாய்விற்குக் குடிநீர்.

காளாணு மொருசேரு கனிவாக இடித்துப்பிழி
கரண்டி யிட்டுத்
தாளாகச் சூதமிடு தாட்டிகமாய்க் காய்ச்சியுண்ணு
தந்தி வாய்வு
வாளான நதுபோகும் வடிவான குட்டமுதல்
